
VEDIKKAI

# வேடிக்கை

பல்சுவை மாத இதழ்

ஏப்ரல் 2006

ரூ. 30.00



சித்திரைப் புதுவருட சிறப்பிதழ்!

சினிமா விமர்சனம்

கற்பகதரு பனையின் பயன்கள்

சிறுநீரகம் தெரியவேண்டிய தெரியாத விஷயங்கள்

நான்தான் 'லினக்ஸ்' - ஓர் அறிமுகம்

## அவுஸ்திரேலியாவுக்கு அதிர்ச்சி வைத்தியம் பார்த்த தென்னாபிரிக்கா!

ஸ்டோரி

9

சகலவிதமான

Digital, Video Cameraக்களை

மிக நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள

இலங்கையில் தலைசிறந்த ஸ்தாபனம்

# PANAMA TRADERS

3-26, 3rd Floor,
Majestic City.



Tel : 0114527057
Fax : 0112582853
email: panamamc@sltnet.lk

# வேடிக்கை

பல்சுவை மாத இதழ்

கொண்டாட்டம் 01 கூத்து 09

அவுஸ்ரேலியாவிற்கு
அதிர்ச்சி வைத்தியம் பார்த்த
தென் ஆபிரிக்கா
பக்கம் 08

போரா...? சமாதானமா...?
பக்கம் 46

பனையின் பயன்கள்
பக்கம் 58

லினக்ஸ்
- ஒரு அறிமுகம்
பக்கம் 30

அவர்கள் சதையால் ஆனவர்கள்...
பக்கம் 70

மானுடத்தின் வாடிக்கை - வேடிக்கை

# பாதுகாப்பு யாருக்கு....?

வணக்கம் வாசகர்களே,

எமது இளைய சந்ததிக்கு இன்றைய போர் எதனால் வந்ததென்பதே தெரியாது. காரணம் அவர்கள் பிறக்கு முன்பே இந்தப் போர் பிறந்து விட்டது.

ஆனாலும் போரின் விளைவுக்கு அதிகம் ஆட்படுவது நம் இளைய சந்ததிதான். காரணமின்றிய கைதுகள், யாரால் யாருக்கு எப்போது எனத் தெரியாத கொலைகள், வளமான வாழ்வுக்கு உத்தரவாதமில்லாத நடைமுறை வாழ்க்கை......

இப்படி மொத்தமாக பாதிப்பை எதிர் நோக்குவது நம் இளையவர்கள்தான்.

மக்களைப் போரிலிருந்தும் அழிவிலிருந்தும் பாதுகாக்கிறோம் என்று புறப்பட்ட அரசும் அதன் படைகளும் இன்று செய்வது என்ன?


வீதிகள், சந்திகள் தோறும் காவலரண்கள், பிரதான வீதி நீளத்திற்கு மின்கம்பங்களின் எண்ணிக்கைக்கு அதிகமாக நிறுத்தப்படும் படைவீரர்கள், சோதனைச் சாவடிகள், அபிவிருத்தி செய்யப்படும் வேகத்திற்கு மேலாக வெட்டிச் சீரழிக்கப்படும் வீதிகள்...

இவையெல்லாம் யாருடைய பாதுகாப்பிற்காக...?

மக்களைப் பாதுகாக்கவா...?

பாதுகாக்க என வந்தவர்களே பாதுகாக்கப்பட வேண்டிய வர்களை அச்சுறுத்தி அசௌகரியப்படுத்தி பாதுகாப்பு தேடுபவர் களாய் இருந்தால், இவர்கள் எதற்கு இங்கு?

பாதுகாப்பாய் தங்கள் இடங்களிற்கே செல்லலாமே... செய்வார்களா?




பேதை மகளிரும்

போதை மன்னர்களும்...

# குறுக்கெழுத்துப் போட்டி 9

**இடமிருந்து வலம்**

1) இசைஞானி இளையராஜா திருவாசகத்தை சிம்பொனியில் இசைக்க பக்கபலமாய் இருந்த கிறிஸ்தவ பாதிரியார் (வெரித்தாஸ் வானொலி மூலம் தமிழ்மக்களுக்கு நன்கு அறிமுகமானவர்)
6) மெல்லிய என்ற கருத்தைத் தரும் ஆங்கிலச் சொல் மாறியுள்ளது.
7) சிவாஜி பட நாயகி
8) காட்டு விலங்கு, மானைப்போன்றது.
9) துணைவி / மனைவி
10) சூரியஒளியை இதன்மூலம் 7 நிறங்களாக பிரித்துப் பார்க்கலாம்.
11) செய்த ஒன்றிற்குப் பதிலாக செய்வது
13) தந்தையை இப்படியும் சொல்லலாம் / இறைவனையும் உரிமையுடன் இப்படி அழைப்பர்.
14) இரந்தவர்க்கு வழங்கினால் பிச்சை. இளைத்தவர்க்கு வழங்கினால் உதவி. உளைத்தவர்க்கு வழங்குவது இது.
15) ரஷ்யஅதிபர் குழம்பியுள்ளார்
16) திம்புவில் தொடங்கிய பேச்சுப் பயணம் இன்று சென்றடைந்திருக்கும் இடம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1) | 2) | | 3) | 4) | 5) | |
| 6) | | ■ | 7) | | | ■ |
| 8) | | ■ | | ■ | 9) | |
| | ■ | 10) | | | | ■ |
| ■ | 11) | | | | ■ | 12) |
| 13) | | | | ■ | 14) | |
| 15) | | | ■ | 16) | | |

**எழுதுங்கள்...**
**வெல்லுங்கள்...**

விடைகளிற்கான இறுதித் திகதி **20.05.2006**

*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:*

**வேடிக்கை**

**72/28, பணிக்கர் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

**மேலிருந்து கீழ்**

1) பிறவி எனும் சொல்லுக்கு ஒத்தசொல்
2) தளபாடங்களுள் ஒருவகை. இருப்பதற்குப் பயன்படும்.
3) ஒருவகை மான். (வாசனைத் திரவியமொன்று இதிலிருந்து பெறப்படும்.)
4) குறித்த நடவடிக்கைக்கு எதிராக நீதிமன்றால் வழங்கப்படும் தடை உத்தரவை ............ என்பர்.
5) பந்திகளில் கடைசியில் பரிமாறப்படும் பதார்த்தம்.
10) வடமராட்சிப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஓர் இடம்.
11) அறுசுவையில் ஒருசுவை. பலருக்குப் பிடிக்காத சுவை.
12) பொறுக்கி, ரவுடி என்ற வரிசையில் வரும் சொல் குழம்பியுள்ளது.
13) நீளங்களை அளக்கும் பிரித்தானிய முறை
14) இராமாயண பாத்திரமொன்று. அவரின் தோற்றத்தால் வந்த காரணப் பெயர் இது.

## குறுக்கெழுத்துப் போட்டி 8 ற்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1)சமர்க்களம் 6) சேரர் 7) வலி 8) வளி
9) குப்பம் 10) தேன் 11) டுபாய் 12) சவரம்
13) யுவா 15) பசு 17) தோடம்பழம்

**மேலிருந்து கீழ்**

1)சர்வதேசம் 2) மரவள்ளி 3) சேர் 4) கலிப்பா
5) பவளவாய் 9) குடும்பம் 14) யுகம் 16) சுப

## குறுக்கெழுத்துப் போட்டி 8 இன் வெற்றியாளர்கள்

◆ தி. திருச்செல்வம்
சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய்.

◆ வி. சந்தியா
இமையாணன் வடக்கு, நெல்லியடி.

◆ கே. வாமதேவன்
3ம் வாய்க்கால், முரசுமோட்டை.

# பாரதியின் தமிழ் முழக்கம்

—சுவாதி

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்"

என்று பாடினார் பாரதி.


உலகிலுள்ள பல மொழிகளைக் கற்றுத் தெளிந்த பாரதி தமிழை இனிதென்றார். பாரதிக்கு பல மொழிகளில் ஆழ்ந்த புலமையுண்டு. பல்வேறு காரணங்களுக்காகவும், சில சந்தர்ப்ப வசத்தாலும் பிற மொழிகளை கற்கும் வாய்ப்பை பாரதி பெற்றார்.



திருநெல்வேலியில் தமிழும், ஆங்கிலமும் நன்கு கற்றார். பாரதிக்கு ஆங்கிலத்தில் ஆழ்ந்த புலமை இருந்தது. ஆங்கிலக்கவிஞர் ஷெல்லியை இவருக்கு மிகவும் பிடிக்கும். இதனால் ஷெல்லி தாசன் என்ற புனை பெயரில் எழுதி இருக்கிறார். காசியில் சில காலம் வசிக்க நேர்ந்ததால் இந்தி மொழியில் புலமை பெற்றார். புதுவையில் பல ஆண்டுகள் வசித்ததால் பிரஞ்சு மொழியைப் பாங்குறக் கற்றார். வங்காளத்தில் சில காலம் இருந்ததால் வங்காள மொழி பயின்றார். இலத்தீன் ஜெர்மன் மொழிகளை விரும்பிக் கற்றுக் கொண்டார்.

தனது நண்பனின் வேண்டுகோளினால் திருக்குர் ஆனைத் தமிழில் மொழி பெயர்க்கும் பொருட்டு அரபு மொழி கற்றார். திராவிட மொழிகளில் தெலுங்கும், மலையாளமும் தெரிந்தவர். இவ்வாறு பல மொழிகளை அறிந்தவர் பாரதி.

இதனால் பாரதியின் மேற்கண்ட கூற்று வெறும் புகழ்ச்சியில்லை என்பதை அறுதியிட்டுக் கூறலாம்.



மேலைத்தேச மோகத்தால் ஆங்கிலமொழி ஆதிக்கம் செலுத்த தொடங்கிய காலம் அது. தமிழ் மொழி அழியும் நிலை தோன்ற தொடங்கியது. இதனை 'தமிழ்ச்சாதி' என்ற தலைப்பில் பாரதி பாடுகிறார்,

"புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே – அந்த
மேன்மைக் கலைகள் தமிழில் இல்லை.
சொல்லவுங் கூடுவதில்லை – அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக்கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த
மேற்கு மொழிகள் புவிமிசையோங்கும்.
என்றந்தப் பேதை உரைத்தான் ஆ!
இந்த வசையெனக் கெய்திடலாமோ!
சென்றிடுவீரெட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு
சேர்ப்பீர்."

தமிழில் அவன் கொண்ட இன்பம் நிலைத்திட பாப்பாப் பாட்டின் மூலம் பிஞ்சு உள்ளங்களில் தமிழை விதைத்தார். அதில்

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே–
அதைத்
தொழுது படித்திடடி பாப்பா."

எனச் செல்லமாய்த் தமிழின் சிறப்பை ஊட்டுகிறார்.

"வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு."

என்று தன் நாட்டு வணக்கப் பாடலில் தமிழை வாழ்த்தி இருக்கிறார்.

வெறும் சொல் வீச்சுக் கவிஞனாக இல்லாமல் பாரதி செயல்திட்டம் வகுக்கும் கவிஞனாக தன்னை பின்வரும் பாடலில் வெளிக்காட்டினார்.

"பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்.
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்.
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்



சொல்வதிலோர்
மகிமையில்லை.
திறமையான புலமையெனில்
வெளிநாட்டார்
அதை வணக்கஞ் செய்தல்
வேண்டும்"

இவ்வாறு ஆக்க வழியில் முயன்று தமிழை உலகம் அறியும் வண்ணம், புகழும் வண்ணம் செய்துவிட்டால்

"தெள்ளுற்ற தமிழமுதின்
சுவை காண்டார்
இங்கு அமரர் சிறப்புக்
கண்டார்"

என்றும் வண்ணக கனவு கண்டார் பாரதி.

நமது தாய் மொழியாம் தமிழ் மொழியை

"வானமளந்ததனைத்து மளந்திடு வண்மொழி" யாக மாற்றுவதற்கு பாரதிபோல் நாமும் தமிழில் இன்பம் கொண்டு தமிழை வாழ வைப்பதை நம் தொழிலாக கொள்ள வேண்டும்.

"வாழ்க தமிழ் மொழி
வாழிய பாரதி நாமம்"

கவர்(ரும்) ஸ்டோரி

# அவுஸ்ரேலியாவிற்கு அதிர்ச்சி வைத்தியம் பார்த்த தென் ஆபிரிக்கா

-வழங்குவது அபிமானி

கிரிக்கட் வரலாற்றில் ஓர் பொன்நாள். சாதனை ஏட்டின் சரித்திரநாள். அதுதான் 12.03.2006. ஆம் இந்தத் திகதியில்தான் அந்த ஒருநாள் சர்வதேசப் போட்டி நடைபெற்றது. தென்னாபிரிக்கா மற்றும் அவுஸ்ரேலியா அணிகள் மோதின. இது ஒருநாள் போட்டி வரலாற்றின் 2349வது போட்டி.

ஏற்கனவே இந்தத் தொடரில் இரு அணிகளும் தலா 2 போட்டிகளில் வென்றதால் இந்த 5வது போட்டி மிகமிக முக்கியமானதாக இருந்தது. தென்னாபிரிக்காவின் ஜோகன்னஸ் பேர்க் நகரின் புதிய வொன்டரஸ் அரங்கத்தில் பயங்கர எதிர்பார்ப்பு இருந்தது. அனல் பறக்கும் போட்டியாக இது அமையும் என்பதால் 32000 ற்கும் அதிகமான ரசிகர்கள் அரங்கில் காத்திருக்கிறார்கள்.

அணிகளும் தயாராகின. நாணயச் சுழற்சியில் ஆஸ்திரேலியா அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் வென்று முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். ஆஸ்திரேலிய அணியில் மாற்றம் இல்லை. 4வது போட்டியில் விளையாடிய அதே அணி. ஆனால் தென்னாபிரிக்காவுக்கு ஆரம்பமே சவால் தான். சகலதுறை ஆட்டக்காரர் பொல்லக் அணியில் இல்லை. அவரிற்குப் பதிலாக ஜோன் வன்டர் வாத் இணைக்கப்பட்டார்.

ஆஸ்திரேலியாவின் ஆரம்ப ஜோடி கில்கிறிஸ்ட், மற்றும் கட்டிச் களம் புகுந்தனர். முதனாவது பந்து வீச்சினை வீச மக்காயா என்ரினி தயாரானார். முதலாவது ஓவரின் நான்காவது பந்தில் ஒரு நான்கு ஓட்டத்தினை கில்கிறிஸ்ட் பெற்று கணக்கினை ஆரம்பித்தார். என்ரினியுடன் அன்ரூ ஹோல் இணைந்து பந்து வீசினார். இருவரும் ஆஸ்திரேலியருக்கு அச்சுறுத்தல் கொடுக்கவில்லை. பொல்லக் இல்லை என்ற துணிவில் ஆரம்பப் ஜோடி அனாசயமாக அடித்தாடியது.

ஓர் அட்டகாசமான ஆரம்பம். ஆரம்பமே அனல் பறந்தது. கில்கிறிஸ்டின் துடுப்பில் இருந்து பந்துகள் சீறிக்கொண்டு எல்லைக் கோடுகளைத் தொட்டது. 12வது ஓவரில் கில்கிறிஸ்ட் 35 பந்துகளை எதிர்கொண்டு 8 பவுண்டரிகளுடன் அரைச் சதத்தைத் தொட்டார். 15 ஓவர் நிறைவில் இலக்கு நஷ்டமின்றி 96 ஓட்டங்கள். சிறந்த ஒரு அடித்தளம்.

ஆனால் அடுத்த ஓவரில் ரெலிமேக்கஸ் வீசிய பந்தினை கில் கிறிஸ்ட் அடிக்க அன்ருஹோல் ஒரு கையால் அற்புதமாக பிடியெடுக்க 1வது விக்கட் வீழ்ந்தது. அடுத்து கட்டிச் உடன் இணைந்தார் அணித்தலைவர்

**இது ஒரு கிரிக்கெட் திருவிழாவின் விவரணம்...**

பொண்டிங். இரண்டாவது போட்டியில் ஆஸ்திரேலியா 93 ஓட்டங்களுக்குள் சுருண் டது அவரின் மனதிற்குள் ரணமாக இருந் தது. இருந்தாலும் தனது கணக்கை ஆரம் பிக்க 7 பந்துகள் காத்திருந்தார்.

இதற்கிடையில் கட்டிச் தனது அரைச் சதத்தை 60வது பந்தில் நிறைவு செய்தார். கட்டிச்சின் அரைச்சதத்தை பொண்டிங் ஒரு நான்குடன் கொண்டாடினார். அந்த நான் குடன் பொண்டிங் ஒரு தெம்பு பெற்றார். அதை 22வது ஓவரில் ரெலிமேக்கஸ்இன் பந்துக்களில் 3 நான்கு ஓட்டங்களைப் பெற்று நிரூபித்தார். பிறகென்ன ஆட்டம் சூடுபிடித் தது. மளமளவென்று ஓட்டங்கள் ஏறின.

இதற்கு சான்றாக கலிஸின் ஒரு ஓவரில் பொண்டிங் 2 ஆறு ஓட்டங்களை அடுத்தடுத்து பெற்றார். இரண்டாவது ஆறுடன் தனது அரைச்சதத்தை அட்டகாசமாகக் கடந்தார். இதற்காக பொண்டிங் 43 பந்துகளை எதிர்கொண்டார். இந்தத் தெம்புடன் பொண்டிங்கின் துடுப்பு சுழன்றது. ஓட்டங் கள் இலகுவாகக் கிடைத்தன. அப்போது கட்டிச் 79 ஓட்டங்களுடன் என்ரினியின் பந்தில் ரெலிமேக்கஸிடம் பிடிகொடுத்து அவுட்டானார்.

திடீர் திருப்பம். யாரும் எதிர்பாராத வகையில் மைக்கல் ஹசி களமிறங்கினார். பொண்டிங்குடன் இணைந்தார். அப்போது ஆஸ்திரேலியா 216/2. பொண்டிங் 72. இதன் பிறகுதான் தென்னாபிரிக்காவிற்கு சோதனை தொடங்கியது. பந்து வீச்சாளர் களுக்கு மதிப்பு தராமல் இருவரும் ஓட்டங் களைக் குவித்தனர். பொண்டிங் தான் சந்தித்த 71வது பந்தில் 9 நான்கு, 5 ஆறு அடங்கலாகத் தனது 20வது சதத்தை எட்டினார்.

40வது ஓவரில் ஆஸ்திரேலியா 300 என்ற பெரிய ஓட்ட எண்ணிக்கையைத் தொட்டது. இன்னமும் 8 விக்கட்டுக்கள். இறுதி 10 ஓவரில் எதுவும் நடக்கலாம். கிரீம் ஸ்மித்தின் முகத்தில் ஈயாடவில்லை. 41வது ஓவரில் ஹசியும்



ஐம்பதைக் கடந்தார். 33 பந்துகளை எதிர்கொண்டு 7 நான்குகள் ஒரு ஆறு அடங் கலாக அரைச்சதம் இருந்தது. பின்பு என்ன? எல்லாப் பந்துகளும் எல்லைக் கோடுகளுக்கு சென்றது. பொண்டிங்கும் ஹசியும் இணைந்து தென்னாபிரிக்க வீரர்களை

துவம்சம் செய்தனர். வான வேடிக்கை நடத்தினர். எங்களையா 93 ஓட்டங்களுக் குள் அடக்கினீர்கள் என்று ஆர்ப்பரித்து எழுந்து கேட்பது போல் அடி இருந்தது.

பந்துகள் நாலா திசையும் பறந்தன. 44வது ஓவரின் இறுதிப்பந்தில் பொண்டிங் அடித்த ஆறுடன் ஆஸ்திரேலியா 350 ஐக் கடந்தது. அடுத்த பந்தில் என்னாலும் இயலும் என்று ஹசியும் தன்பங்கிற்கு ஒரு ஆறு ஓட்டத்தை அரங்குக்குள் அடித்து பெற்றார்.

ஒவ்வொரு ஓவரிலும் ஆறுகள், நான்கு களுக்கு பஞ்சம் இல்லை. பந்துகள் பஞ்சாய் பறந்தன. அணி 374 ஓட்டங்களை பெற்ற போது ஹோலின் பந்தில் என்ரினியிடம் பிடிகொடுத்து ஹசி ஆட்டமிழந்தார். ஹசி 51 பந்தில் 81 ஓட்டங்களை பெற்றார். இவர் பொண்டிங்குடன் இணைந்து 97 பந்தில் 154 ஓட்டங்களை இணைப்பாட்டத்தின் மூலம் தமக்குள் பகிர்ந்து கொண்டார்.

அவர் ஆட்டமிழந்தால் என்ன நான் இருக்கிறேன் என்பது போல ஹோலின் பந்தில் ஒரு ஆறை அடித்து தனது 150 ஓட்டங்களைக் கடந்தார் பொண்டிங். அடுத்து சைமன்ட்ஸ் வந்து பொண்டிங்குடன் இணைந்தார்.

48 வது ஓவரில் நிறையவே நடந்தது. வீசியவர் ரெலிமேக்கஸ். இந்த ஓவரில் சைமன்ட்ஸ் அடித்த ஒரு ஆறு இலங்கை அணிக்கு ஆப்பாக இருந்தது. ஆம் அஸ்திரே லியா, இலங்கை அணியின் 398 என்ற ஓட்டத்தை கடந்து 400ஐ எட்டியது.

உலக கிரிக்கட் வரலாற்றில் 400 ஓட்டங் கள். நினைக்கவே தலைசுற்றும். இதே ஓவரில் அணியின் எண்ணிக்கை 407 ஆக இருந்த போது பொண்டிங் அவுட்டானார். அவர் அணித்தலைவர் என்கிற ரீதியில் பொறுப்பா கவும், அதிரடியாகவும் ஆடி 105 பந்தில் 13 நான்குகள் 9 ஆறுகள் அடங்கப்பெற்ற அட்ட காசமான 164 ஓட்டங்களைப் பெற்றார்.

அடித்தாடவேண்டிய நேரம், எனவே பிரட்லீ களமிறங்கினார். ஓவர் நிறைவுக்கு வர, இந்த ஓவரில் ரெலிமேக்கஸ் 26 ஓட்டங்களை அள்ளி வழங்கினார்.

50 ஓவர் நிறைவில் ஆஸ்திரேலியா ஒரு இமாலய இலக்கான 434 ஓட்டங்களை 4 விக்கட்டுக்களை இழந்து பெற்றது. இதற்குள் 43 நான்குகள் மற்றும் 14 ஆறுகள் அடங்கும்.

ஆஸ்திரேலியா அணி வீரர்களின் ஓய்வு அறையில் வீரர்கள் மிகவும் குதூகலமாக இருந்தார்கள். தாம் ஒரு உலக சாதனையை நிகழ்த்திய பெருமிதம் இருந்தது. பொதுவா கவே ஆஸ்திரேலியர்களுக்கு இருக்கும் ஏளனப்பார்வைகள் அன்றைக்கு சற்று அதிகமாகவே இருந்தது. ரசிகர்கள் போல் தாமும் வாய்க்குள் விரல் வைத்து விசில் அடித்து சாதனையை கொண்டாடினர்.

முன்னதாக புகழ்பெற்ற வர்ணனையா ளர் ரொனிகிரேய்க் 31வது ஓவர் நடந்து கொண்டு இருந்த போது ஆஸ்திரேலியர்க ளின் ஆட்டத்தை நன்கு கணித்து இலகுவாக 400 ஓட்டங்களைப் பெறுவார்கள் என்று ஆரூடம் சொன்னதை ஆஸ்திரேலியர்கள்

நிரூபித்தனர். ஆஸ்திரேலியர்கள் மீண்டும் தாங்கள்தான் ஒருநாள் ஜாம்பவான்கள் என்பதை வொன்டரர்ஸ் அரங்கில் நிரூபித்தனர். ஆஸ்திரேலியர்கள் ஆட்டம் ரசிகர்களுக்கு பெருவிருந்தாக அமைந்தது.

தென்னாபிரிக்க ரசிகர்களுக்கு ஆத்திரமா கவும் அவமானமாகவும் இருந்தது. இந்த சாதனையை தமக்கு எதிராக பெற்றுவிட்டார் களே என்று. இருந்தாலும் என்னதான் நடக்கும் என்று பொறுமையுடன் காத்திருந் தனர் ரசிகர்கள்.



இனி ஆஸ்திரேலியா களத்தடுப்பு. தென்னாபிரிக்கா துடுப்பாட்டம். ரசிகர்கள் நெஞ்சில் கலக்கம். இந்த ஓட்ட எண்ணிக் கையை இவர்களால் எட்ட முடியுமா? அதுவும் ஆஸ்திரேலியாவிற்கு எதிராக. பொதுவாக வெற்றி இலக்கு 300ஐ கடந்தாலே ஒரு உளவியல் அழுத்தம் வந்துவிடும். இந்த அழுத் தத்திற்குள் எதை சாதிக்க போகிறார்கள்.

களமிறங்கிய ஆஸதிரேலிய அணிவீரர்க ளின் முகத்தில் ஒரே மகிழ்ச்சி. அனைவரும் சிரித்த முகத்துடன் இருந்தனர். இது வேறு தென்னாபிரிக்கர்களை வெறுப்பேற்றியது. வழமை போல ஸமித்தும் டிப்பெனரும் துடுப்புடன் களமிறங்கினர்.

ஆஸ்திரேலியாவின் வேகப்புயல் பிரட்லீ பந்தை கையில் எடுத்தார். முதற் பந்தே ஒரு அகலப்பந்து. தென்னாபிரிக்காவின் கணக்கு தொடங்கியது.

இரண்டாவது ஓவரின் இரண்டாவது பந்தில் துடுப்பில் பட்ட பந்து நேரடியாகவே விக்கட்டில் பட டிப்பெனர் அவுட். ஆரம்பமே அதிர்ச்சி. ஆஸ்திரேலியர்கள் ஆரவாரித்த னர். களமிறங்கினார் ஹேர்சல் கிப்ஸ். ரசிகர்கள் பயந்தனர். 2வது போட்டியில் தாம் ஆஸ்திரேலியர்களை சுருட்டியதற்கு இன்று அவர்கள் தம்மை சுருட்டப்போகிறார்களோ என்று. ஆனால் கிப்ஸும் ஸ்மித்தும் எல்லோர் எண்ணங்களையும் மாற்றத் தொடங்கினர். மெதுவாக அடி எடுத்து வைத்து தொடங்கினர்.

பந்துகள் எல்லைக்கோடுகளை எளிதாக கடந்தன. ஓட்டங்கள் குவிந்தன. 8வது ஓவரின் முதற்பந்தில் கிப்ஸ் பெற்ற நான்கு ஓட்டத்துடன் தென்னாபிரிக்கா 50 ஐ கடந்தது. அந்த ஓவர் நிறைவில் 57/1.

அடுத்து வந்த ஓவர்கள் அதிரடியாக அமைந்தன. தென்னாபிரிக்கா நிதானமாக முன்னேறியது. நான்குகள்தான் அதிகம் நாலாபுறமும் பறந்தன. ஒரு புறம் ஸ்மித். மறுபுறம் கிப்ஸ். இருவரும் அடுத்தடுத்த ஓவர்களில் அரைச்சதத்தை பெற்றனர். முதலில் கிப்ஸ் 46 பந்தில் 6 நான்குகள் ஒரு

ஆறுடன் பெற்றார். ஸ்மித் 36 பந்தில் 10 நான்குகளுடன் சிறப்பாக அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். இப்போது தென்னாபிரிக்கா 15 ஓவர்கள் நிறைவில் 120 ஓட்டங்கள். மிகச்சிறந்த ஓட்ட விகிதம். பொண்டிங் சிறிது கலங்கினார். ஆனால் அவர் நினைத்தது இந்த ஆட்டத்தை அடக்கலாம் என்று.

முடியவில்லை. கிப்ஸூம் ஸ்மித்தும் எங்களுக்கா அடித்து காட்டினீர்கள், எமக்கும் தெரியும் வித்தை என்பது போல் கொளுத்தித் தள்ளினர். ஹசி–பொண்டிங் ஜோடி எப்படி தென்னாபிரிக்காவிற்கு நெருக்கடி கொடுத் ததோ அதேபோன்று கிப்ஸ்–ஸ்மித் ஜோடி ஆஸ்திரேலியாவிற்கு ஆக்கினையாக இருந் தது. தென்னாபிரிக்காவில் போட்டி என்பதால் தென்னாபிரிக்க ரசிகர்களே அதிகம்.

ஒவ்வொரு நான்கு மற்றும் ஆறு ஓட்டங்களுக்கும் அரங்கம் ஒரு தடவை அதி ரும். இருவரும் மதம் கொண்ட யானைபோல் மூர்க்கமாக ஆஸ்திரேலியர்களைத் தாக்கி னர். எப்போதும் ஓட்ட விகிதத்தை 8ற்கு மேலேயே வைத்திருந்தனர். ஸமித்தின் ஆட்டம் அட்டகாசமாக இருந்தது. சைமன்ட்ஸ் மற்றும் கிளார்க்கின் பந்துகளில் அவர் பெற்ற இரண்டு ஆறுகள் அவரின் ஆட்டத்திற்கு சிகரமாக அமைந்தது.

இருவரும் இணைந்து 96 பந்துகளில் 187 ஓட்டங்களை மணியாக சேகரித்த போது 23வது ஓவரில் ஸ்மித் கிளார்க வீசிய முதற் பந்தை ஆறாக மாற்ற முனைந்தார். உயர்ந்து சென்றதை எல்லைக்கோட்டிற்கு மிகமிக அருகே வைத்து ஹசி அதனை அழகாக பிடி எடுத்தார். ஆக வெறும் 55 பந்தில் 13 நான்கு கள் 2 ஆறுகள் அடங்கலாக 90 ஓட்டங்களு டன் ஸ்மித் அவுட்டானார். தென்னாபிரிக்க 190/2. ஸ்மித் அவுட்டான அடுத்த பந்தில் கிப்ஸ், ஸ்மித்தை எடுத்து விட்டீர்கள் , உங்க ளுக்கு தலையிடியாக நான் இருப்பேன் என்பதுபோல அரங்குக்குள் அடித்து அட்டகா சமான ஆறு ஓட்டத்தை பெற்றார். அந்த ஓவ ரின் இறுதியிலேயே தென்னாபிரிக்கா 250ஐ கடந்தது. 23 ஓவர் நிறைவில் 250/2.



26வது ஓவரில் கிப்ஸ் அடுத்தடுத்து 2 பவுண்டரிகள் அடித்து தனது 16வது சதத்தை பூர்த்தி செய்தார்.இதற்காக அவர் 79 பந்து களை எதிர் கொண்டார். கிப்ஸ் சதத்தை கடந்ததும் ஆட்டத்தில் அனல் பறந்தது.

ஆஸ்திரேலியர்களை 'சுனாமி' போல தாக்கினார். ஓட்ட விகிதத்தை 9 ற்கு உயர்த்தினார். அதிரடியான அட்டகாசமான துடுப்பாட்டம். கண்களுக்கு பெரு விருந்தாக அமைந்தது. இதற்கிடையில் கிப்ஸ் 130 ஓட்டங்களை பெற்ற போது லூயிஸின் பந்தை ஓங்கி அடித்தார். களத்தடுப்பில்

பிராக்கன் அதனை பிடி எடுக்க முயல, கையை பறித்துக் கொண்டு பந்து தரையை தொட்டது. கிப்ஸ் தப்பிப்பிழைத்தார்.

முன்பும் இப்படித்தான் 99ம் ஆண்டு உலகக் கோப்பைப் போட்டியில் ஸ்டீவ் வோவின் பிடியை கிப்ஸ் தவற விட உலகக்கோப்பை ஆஸ்திரேலியர்கள் வசமானது. இப்போது பிராக்கன். உண்மையில் ஆஸ்திரேலியர்கள் அசந்துதான் போனார்கள். பந்தை எங்கு விழுத்தினாலும் கிப்ஸ் அதை எல்லைக் கோட்டிற்கு அனுப்பத்தவறுவதில்லை. 29வது ஓவரில் கிப்ஸ் லூயிசை உதைத்தார். ஆறு பந்துகளையும் தானே எதிர் கொண்டு அதில் 3 நான்குகள் 1 ஆறைப்பெற்றார். அந்த ஆறு டன் கிப்ஸ் 150ஐ தொட்டார். அந்த 29வது ஓவர் நிறைவில் தென்னாபிரிக்கா 271/2.

31வது ஓவரில் பிராக்கன் வீசிய பந்தை கிளார்க்கிடம் பிடிகொடுத்து டிவில்லியர்ஸ் ஆட்டமிழந்தார். அந்த ஓவர் நிறைவில் தென் னாபிரிக்கா 284/3. அடுத்த ஓவர் சைமண்ட்ஸ் இனுடையது. கிப்ஸ் அடுத்தடுத்து 2 ஆறு ஓட்டங்களைப்பெற்றார். அதற்கடுத்த பந்தில் பிரடலீயிடம் பிடி கொடுத்து கிப்ஸ் ஆட்டமிழந் தார். அப்போது கிப்ஸ் 111 பந்துகளில் 21 நான்குகள், 7 ஆறுகள் அடங்கலான அற்புத மான 175 ஓட்டங்களை குவித்திருந்தார். இது அவருடைய சொந்த அதிக பட்ச ஓட்டமாகும்.

உண்மையில் கிப்ஸின் ஆட்டம் மிக அற்புதமான ஆட்டம். அவர் ஆஸ்திரேலியர்க ளுக்கு நிறையவே நெருக்கடிகள் கொடுத்தார். அவரின் ஆட்டமிழப்பு ஆஸ்திரேலியர்களை நம்பிக்கையுற வைத்தது. இப்போது இரண்டு புதியவர்கள் களத்தில். கலிஸ் மற்றும் பவுச்சர். 32 ஓவர் முடிவில் தென்னாபிரிக்கா 284/4.

இருவரும் ஆஸ்திரேலியர்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கவில்லை. ஆஸ்திரேலி யர்கள் போட்டியை ஓரளவிற்கு தமது கட்டுப் பாட்டிற்குள் வைத்திருந்தனர். 38வது ஓவரில் கலிஸ் சைமண்ட்ஸின் பந்தில் அவரிடமே பிடி கொடு த்து 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அப்போது 38 ஓவர் நிறைவில் தென்னாபிரிக்கா 330/5. கடைசி ஆறு ஓவர்களில் 31 ஓட்டங் களைத்தான் பெற்றனர். பவுச்சருடன் ஜஸ்ரின் கெம்ப் இணைந்து கொண்டார். இவரும் பெரிதாக சாதிக்கவில்லை. ஒரு ஓவரிற்கு 10 எடுத்தால் தான் வெற்றி என்ற நிலையில் கெம்ப் ஆட்டமிழந்தார். நிறையவே எதிர்பார்க்கப் பட்டவர். சோபிக்கத் தவறினார். 43 ஓவர் நிறைவில் தென்னாபிரிக்கா 358/6.

இப்போது வெற்றிபெறத் தேவையான ஓட்டவிகிதம் சரியாக 11. அதாவது 7 ஓவர் களில் 77 ஓட்டங்கள் தேவை. கையில் இருப் பது 4 விக்கட்டுகள். கதிரையின் விளிம்பில் ரசிகர்கள். ஆஸ்திரேலியர்களுக்கு நம்பிக்கை துளிர் விட்டது. பவுச்சர்தான் தலையிடி கொடுப்பார். இன்னமும் 4 விக்கட்டுக்கள். மறுபுறத்தால் கழட்டினால் வெற்றி நமதே.

இது பொண்டிங்கின் நினைப்பு. பவுச்சருடன் இணைந்த வன்டர் வாத், பொண்டிங்கின் நினைப்பில் மண் அள்ளிப் போட்டார். ஆறுகள், நான்குகள் பறந்தன.

இரண்டு ஓவர்களில் 3 ஆறுகள், 1 நான்கு பெற்றார். வன்டர்வாத்தின் துடிப்பாட்டம் போட்டியை ஆஸ்திரேலியர்களிடம் இருந்து பறித்தது. 42 பந்தில் 72 ஓட்டங்கள் தேவை என்ற நிலையை இவரும் பவுச்சரும் சேர்ந்து அற்புதமாக ஆடி 24 பந்தில் 38 ஓட்டங்கள் என்ற நிலைக்கு மாற்றினர். 46 ஓவர் நிறைவில் தென்னாபிரிக்கா 397/6.

மீண்டும் பிராக்கனின் பந்தில் வன்டர் வாத் பவிலியன் திரும்பினார். இவர் 18 பந்தில் 35 ஓட்டங்கள் பெற்றார். மறுபுறத்தில் பவுச்சர் 31 ஓட்டங்களுடன் சுமையை தனது தோளில் போட்டு பொறுமையாக இருந்தார். இப்போது போட்டி மீண்டும் ஆஸ்திரேலி யாவின் கையில். தென்னாபிரிக்கா 399/7.

உள்ளே நுழைந்தார் ரெலிமேக்கஸ். 3 வது போட்டியில் அட்டகாசமாக ஆறுகள் அடித் தார். ஆகவே இப்போது எதிர்பார்ப்பு அவரி டம். அவரும் அதற்கேற்றால் போல் ஒரு நான்கைப் பெற்றார். இப்போது தென்னாபி ரிக்காவும் 400ஐ எட்டியது. இரண்டாவது தடவையாக ஒருநாள் போட்டிகளில் 400 ஓட்டம். அதுவும் ஒரே போட்டியில்.

பரபரப்பான போட்டி. விறுவிறுப்பின் விளிம்பு. கத்திமுனையில் ரசிகர்கள். எதுவும் நடக்கலாம். ரெலிமேக்கசும் பவுச்சரும் நான்குகளாக அடித்து வெற்றியை நெருங் கினர். 48வது ஓவரில் பவுச்சர் இரண்டு நான்குகள், ரெலிமேக்கஸ் ஒரு நான்கு.

இந்த ஓவரில் தான் ஒரு தவிர்க்க முடியாத சாதனை. அவுஸ்திரேலியாவின் மிக்லூயிஸ் என்ற பந்து வீச்சாளர் அள்ளி அள்ளி ஓட்டங் களை வழங்கியோரின் சாதனையில் முதலாவதாக திகழ்ந்தார். இலங்கை அணியின் முரளீதரனின் 10 ஓவரில் 99 ஓட்ட ங்கள் கொடுத்த சாதனையை கடந்து 113 ஓட்ட ங்களை வாரி வழங்கினார். 1983ல் மார்க் ஸ்னெடீன் என்ற நியூசிலாந்து வீரர் 12 ஓவரில் 105 ஓட்டங்களைக் கொடுத்தார். இப்போது எல்லோரையும் முந்தி லூயிஸ் பெரும் வள்ளல் ஆனார்.

48 ஓவர் முடிவில் 422/7. 12 பந்தில் 13 ஓட்டங்கள் இப்போது வெற்றியின் விளிம்பில் தென்னாபிரிக்கா. 49வது ஓவரை பிராக்கன் வீச இரண்டாவது பந்தில் ரெலிமேக்கஸ் அவுட். மீண்டும் போட்டி அவுஸ்திரேலியாவி டம். நுழைந்தார் அன்ரூஹோல். இந்த ஓவரும் முடிய தென்னாபிரிக்கா 428/8.

இறுதி ஓவர். தேவை 7 ஓட்டங்கள். ஒரு நாள் போட்டியில் எதுவும் நடக்கலாம் ஆனால் தென்னாபிரிக்கா இப்போது தோற்றால் மீண்டும் ஒருதடவை பரிதாபத் தோல்வி.

ரசிகர்களுக்கும், அணி வீரர்களுக்கும் திருப்தியான விடயம், பந்து வீச்சை எதிர் கொள்பவர் பவுச்சர். பந்து பிரட்லீயின் கையில். முதற்பந்தை பவுச்சர் ஓங்கி அடிக்க லீ காலாலே தடுக்க ஒரு ஓட்டம் மட்டும்தான். இப்போது ஹோலின் முறை. 5 பந்தில் 6 ஓட்டங்கள். என்ன ஒரு போட்டி. அரங்கம் கடும் பரபரப்புக்கு மத்தியில் உற்சாகப் படுத்தியது. லீயின் இரண்டாவது பந்தில் ஹோல் ஓங்கி அடித்து 4 ஓட்டம் பெற்றார்.

ரசிகர்கள் துள்ளிக் குதித்தனர். இலகுவாக வெற்றி கிடைக்கப் போகிறது. 4 பந்தில் இரண்டு ஓட்டங்கள்.

லீயின் அடுத்த பந்தில் ஹோல் கிளார்க்கிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். தென்னாபிரிக்கா 433/9. இப்போது போட்டி அவுஸ்திரேலியாவிடம். காரணம் துடுப்பாடவி ருப்பவர் மககசாயா என்றினி. எல்லோரும் எதிர்பார்த்தது தென்னாபிரிக்காவின் தோல்வியை.

இந்தப்பந்து லீயின் கதாயுதமான யோக்கர் பந்தாக இருக்கும். அதில் என்றினி அவுட். ஆனால் எல்லோரும் எதிர்பார்த்தது போல் லீ அப்படி பந்து வீசவுமில்லை. என்றனி அவுட்டாகவுமில்லை. மாறாக ஒரு ஓட்டம் பெற் றார். இப்போது ஓட்ட எண்ணிக்கை சமம். என்றினி களமிறங்கும் போது தென்னாபிரி க்கா அணி வீரர்கள் முகத்தில் இறுக்கம். இப் போது துள்ளிக் குதித்து ஆரவாரித்தனர். வெற்றி இல்லை என்றாலும் சம கௌரவம்.

ஆனால் அடுத்த பந்தில் சரித்திரம் எழுதி யது தென்னாபிரிக்க அணி. பவுச்சார் ஓங்கி அடிக்க பந்து எல்லைக் கோட்டை கடக்க தென்னாபிரிக்கா 438/9. ஒரு பந்தும் ஒரு விக்கட்டும் மீதம் இருக்க மகத்தான வெற்றி. தென்னாபிரிக்கா வரலாறு படைத்தது. அந்த நான்குடன் பவுச்சரும் 50 ஓட்டத்தை பெற் றார். பவுச்சரின் பொறுப்பான ஆட்டம் வெற்றி யைத் தேடித்தந்தது. ஒருநாள் போட்டிகளில் மிகச்சிறந்த போட்டியாக இது அமையும்.

வர்ணனையாளர் றொனி கிரேய்க் 400ஐ தென்னாபிரிக்கா எட்டிய போது சொன்னார், இங்கு என்ன நடக்கிறது என்று என்னால் நம்ப முடியவில்லை என்று. உண்மையில் மகத்தான போட்டி. அற்புதமான வெற்றி. அவுஸ்திரேலியா தான் அதிகூடிய ஓட்டம் என்று வைத்திருந்த 434ஐ 4 மணித்தி யாலத்தில் தென்னாபிரிக்கா முறியடித்தது. அவுஸ்திரேலியாவிற்கு ஒரு பலத்த அடி.

375ற்கு பிறகு தென்னாபிரிக்கா பெற்ற ஒவ்வொரு ஓட்டத்திற்கும் ரசிகர்கள் எழுந்து மரியாதை செலுத்தி ஆரவாரித்தனர். பவுச்சர் ஓங்கி அடித்ததும், ஓய்வறையில் நின்ற வீரர்கள் மைதானத்திற்குள் பாய்ந்து சென்று கட்டித்தழுவி வெற்றியைக் கொண்டாடினர்.

400 ஓட்டங்கள் அடிப்பது சிரமம். உலகின் முன்னனி அணியான அவுஸ்திரேலிய அணி அதனைஅடித்து தன்னை நிரூபித்தது. அதே போட்டியில், அதே அவுஸ்திரேலியா விற்கு எதிராக தாமும் 400ஐ அடித்து வெற்றி பெற்றது தென்னாபிரிக்க அணி.

நிச்சயமாக ஆட்ட நாயகன் கிப்ஸ். ஆனால் மத்தியஸ்தர் ரிக்கி பொண்டிங், மற்றும் கிப்ஸ் இருவருக்கும் வழங்கினார்.

இதில் இரு அணிகளும் சேர்ந்து மொத்தம் 872 ஓட்டங்களை பெற்றனர். தென்னாபிரிக்க அணி ஆகக் கூடிய மொத்த ஓட்ட எண்ணியையும், இரண்டாவதாக துடுப்பெடுத்தாடி அதிகூடிய ஓட்டம் என்ற சாதனையையும் தனதாக்கியது.

இது சாதனைகளின் சிகரமாக ரசிகர்களு க்கு பெருவிருந்தாக அமைந்த அற்புத போட்டி.

தொடர் நவீனம்

# முராரி...

8

-பிரசாத்

தமிழன் முகத்தில் தெரிந்த பதட்டம் வேழத்தெழிலன் புருவங்களை நெரிய வைத்தது. ஏதோ அசம்பாவிதம் நிகழ்ந்து விட்டிருக்கின்றது என்பதை அவன் அதீத திறன்கள் உணர்ந்து விட்டிருந்தன.

'பதட்டத்தைக் காண்பிக்காது எந்தக் காரியத்தையும் ஆற்றக் கூடியவனென அந்த வட்டாரத்திலேயே பிரசித்தி பெற்றவன் வேழத்தெழிலன்.

முகத்தில் எந்த மாறுதலையும் காட்டாது "வாழ்க தமிழ்" என்று பதிலிறுத்தவன் "ம், என்ன நடந்தது! நூல் கிடைக்கவில்லையா?..." என்று கேள்வியும் தொடுத்தான்.



இவனது நிதானம் தமிழனையும் சிறிது சுதாகரிக்கச் செய்திருந்தது.

"சுவடிகள் காப்பகம் அளிக்கப்பட்டிருக்கிறது" என்றான்.

"என்ன" பதறாத வேழத்தெழிலன் பதறினான்.

"எப்படி? வெடிகுண்டா? தீயா? எப்படி இது நிகழ்ந்திருக்க முடியும்"

"எமது காவல்துறை, உளவுத்துறை எல்லாம் அறியாது இப்படி சம்பவம் நிகழமுடிந்ததா?" என்று இரண்டு கேள்விகள் அவன் வாயால் வெளிக்கிளம்பின.

"கட்டிடத் தொகுதி, அதன் கூரைகூடச் சேதமடையவில்லை. அங்குவேலை செய்தவர்களுக்கும் எதுவும் தெரியவில்லை. நூல்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பகுதியும் அவற்றோடு சேர்ந்த பகுதியும் சேர்ந்த பொருட்களும் உருத் தெரியாமல் போயிருக்கிறது.

அதைப்பார்த மாத்திரத்தில் எனக்கு மயக்கம் போடாதது பெரிய ஆச்சரியம். நான் யாருக்கும் எதுவும் சொல்லாமல் நேரடியாக இங்கே வந்துவிட்டேன்."என்று ஒன்றுவிடாமல் சொல்லி முடித்தான்.

வேழத்தெழிலன் பதிலேதும் பேசவில்லை. சுட்டுவிரலை ஒருநொடி புருவமத்தியில் வைத்துக் கொண்டவன் கண்கள் மூடிக்கிடந்தன.

கண்களைத் திறந்தவன் "சரி நீ இதைப்பற்றி யாருக்கும் சொல்ல வேண்டாம். உடனே சென்று எனது பிரத்தியேக ஜெட் விமானத்தைத் தயார்செய்" என்றவன் மீண்டும் தன் பிரத்தியேக அறையுள் நுழைந்தான்.

கைகழுவும் தொட்டியின் மேலிருந்த கண்ணாடியில் தன்னுடைய விம்பத்தைப் பார்த்தான். தன் இரண்டு கைகளையும் சேர்த்து அதனுடைய விளிம்பிலிருந்து அளந்து இருபுறத்திலும் ஒருசாண் இடைவெளியில் ஒருசேர அழுத்திக் கொண்டான்.

ஒரு செக்கன் இடைவெளியில் ஒரு விநோதம் நிகழ்ந்தது. அவன் பிரத்தியேக அறையில் தானியங்கிக் கதவு தானாகப் பூட்டி லொக்காக அவன் முன்னிருந்த சுவர் துண்டாகி நிலைக்குத்தச்சுப்பற்றிக்ளோக் வைசாக (மணிக்கூட்டுத்திசை) $180^0$ சுழன்றது.

அதன் மறுபக்கம் ஒரு மாய உலகம் விரிந்தது. ஆம் சுவரின் மறுபக்கத்தில் ஒரு

## அழுகிய விதைகள்

கருத்தரித்து உயிர் வரித்து
உருப்பெற்று உலகில்
விருத்தெரிந்த போது – நெஞ்சில்
விழுந்ததோர் வெட்டு...!
குழந்தைத் தனம் முடித்து,
குமரராய் எழுந்து குதித்தோம்
குவலயம் பஞ்சு என்றெண்ணி...!
நெஞ்சு வேகிய போதுதான்
நெருப்பு என்று புரிந்தது...!
பூஞ்சோலையெனத்தான் புகுந்தோம்,
வரவேற்றவை பூக்களல்ல
பூதங்கள்..!!
அப்பன் முதல் அரசன் வரை
பிளவுகளே எமக்கு
போதிக்கப்பட்டன....!
புன்னகை முகங்களில் -
போர்வலைகள் பின்னப்பட்டன..!!
நேச நண்பரும் நீசச் சாதியாம்..-
பாசப் பெற்றோரே படையெடுத்தனர்!!
ஆண்மை அடக்குவதாம்...
பெண்மை அடங்குவதாம்...
இளகிய மன மண்ணில்
அழுகிய விதைகள்...!!
நேசம் மிகுந்தவனும்
நெஞ்சில் நிறைந்தவளை
'என்னவள்' எனத்தான் எண்ணுவான்
உயிராக அல்ல உடைமையாய்..!!!

-மனிசன்-

# கல்வி

குழந்தைக் கவிஞர் இரா.ஜெயபாலன்.

செல்லத்தம்பி சொல்வதைக் கேள்
மல்லுக் கட்டல் உனக்கெதற்கு
அல்லல் படுவது தெரியாதோ
கல்வி அறிவினை அடையாதோர்.
புல்லாய்ப் பூடாய்ப் பிறக்கவில்லை
பொல்லாக் கல்வி என்றொதுக்க
வல்லமனிதராய்ப் பிறந்து விட்டோம்
கல்வி அறிவினைப் பெற்றிடவே.
கல்விச் செல்வம் பெருஞ் செல்வம்
கல்லறை வரைக்கும் அது செல்லும்
கற்றறிவதோ ஒழியாது
கல்வியை எதுவும் அழியாது
செல்லும் இடமெல்லாம் புகழ் சொல்லும்
எந்த இடத்திலும் அது வெல்லும்
பெற்ற பொழுதிலும் பெரிதுவக்கும்
கற்கும் சிறப்பிற்கு அது போதும்.

மினிக்கட்டுப்பாட்டறை இருந்தது. வேழத்தெழிலன் ஓரிடத்தில் தன் கையை வைக்க,

"வணக்கம், அடையாளம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. சற்றுத் தாமதிக்கவும்"

"உங்கள் கட்டுப்பாட்டுத் தளம் தயாராகி உள்ளது. நீங்கள் செயலாற்றலாம். நன்றி" என்று ஒலிச்சமிக்கை கிடைத்ததும் மிகவேக தொடர்பாடு விசைப்பலகை முன்னே நிமிர்ந்து கொண்டது.

வேழத்தெழிலன் கைகள் அதிதுரிதமாக அதில் இயங்கத் தொடங்கின. முன்னே இருந்த பெரிய திரை ஒளிபெற்றது.

அதில் தமிழ் தேசியப்படம்... ஆரம்பஒலி... தொடர்ந்து ...திரையில் தெரிந்த உருவம்...

-வளர்வான்.

# புதிரோ புதிர்-02

**A** ஒரு மாடிவீடு. முதல் மாடியில் உள்ள ஹாலில் மூன்று பல்புகள் பொருத்தப்பட்டுள்ளன. அதற்குறிய சுவிட்சுகள் மாடிப்படி ஏறும் இடத்தில் உள்ளன. நீங்கள் முதன்முறையாக அந்த வீட்டுக்குச் செல்கிறீர்கள்.

உங்கள் நண்பர், மேலே மாடியில் உள்ள மூன்று பல்புகளில், எந்த பல்புக்கு எந்த சுவிட்ச் என்று கீழே அடையாளம் செய்யும்படி கூறுகிறார். கூடவே ஒரு நிபந்தனையையும் விதிக்கிறார். அதாவது, ஒரே ஒருமுறை மட்டுமே எந்த பல்ப் எரிகிறது என்பதைப் பார்க்க மாடிக்குப் போகலாம். (கீழிருந்து பார்க்கையில் பல்ப் எரிவது தெரியாது.)

நீங்கள் எந்த பல்புக்கு எந்த சுவிட்ச் என்பதை எப்படிக் கண்டு பிடிப்பீர்கள்????

**B** ஒரு மனிதனால்தான் உருவாக்கப்படுகிறது...ஆனால் எந்த மனிதனுக்கும் அதில் விருப்பமில்லை. ஒரு மனிதனால்தான் அது வாங்கப்படுகிறது. ஆனால் அது அவனுக்குத் தேவையில்லை. ஒரு மனிதனுக்கு அது தேவை. ஆனால் அதை வாங்கியது அவனுக்குத் தெரியாது. அது என்ன????

## புதிரோ புதிர் – 01 விடைகள்

சென்ற இதழில் இடம்பெற்ற 4 புதிர்களுக்கும் சரியான விடைகளை எவருமே எழுதி அனுப்பவில்லை. புதிர்கள் சுலபமானவையாகத் தான் இருந்தன. ஆனால் எவருமே சரியான விடை அளிக்காததுதான் புதிராக இருக்கிறது. சரி அதற்கான விடைகளைப் பார்ப்போம்.

A) அவன் சொன்னபடி ஒருதுண்டுக் காகிதத்தில் "உனது சரியான எடை என்ன" என்ற வாக்கியத்தை எழுதிக் கொடுத்தான்.........

B) கிறிஸ்துவிற்கு முன் பிறந்த ஒருவராய் இருந்தால் இது சாத்தியமே. ஏனெனில் கி.மு. ஆண்டுக்கணக்கு, குறைந்து கொண்டே வரும். (கி.மு1995ற்கு 5 ஆண்டுகள் பின்னர்தான் கி.மு 1990ம் ஆண்டு வரும்.)

C) 2ம் இடத்தில்

D) இருவரின் முதுகுப் புறமும் ஒன்றையொன்று எதிர்நோக்கக் கூடியவாறு நின்றால் போதும்.

உங்கள் விடைகளிற்கான முடிவுத் திகதி : **20.05.2006**

முகவரி: 72/28, பணிக்கர் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

மருத்துவம்

# சிறுநீரகம்

## தெரிய வேண்டிய தெரியாத விடயங்கள்....

Dr கி.குருபரன் MBBS (WHO)

ஒன்றுக்கு போதல் என்றால் தமிழில் சிறுநீர் கழிக்கப் போதல் என்று அர்த்தம். அது இடக்கரடக்கல் என்று எப்பவோ தமிழாசான் படிப்பித்த ஞாபகம். ஆனால் ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளை சிறுநீரகம் செய்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா?



கழிவுகளை அகற்றல், நீர்ச்சம நிலையை, உப்புகளின் சமநிலையை பேணல், எரித்திரோபொயிற்றின் என்ற செங்குருதிசிறுதுணிக்கைகளின் உருவாக்கத்திற்கு தேவையான ஓமோன்களைச் சுரத்தல் என்று பல தொழில்களை ஒரேநேரத்தில் அது செய்கிறது .

சிறுநீரை உருவாக்குவது சிறுநீரகம். சிறுநீர் ஒரு கழிவுப்பொருள். அதில் யு'ரியா, மேலதிக உப்புகள், கிரியற்றினின், நீங்கள் உட்கொண்ட சில மருந்துகள் என்பன நீரில் கரைந்த நிலையில் காணப்படும்.

இந்த சிறுநீர் உருவாக்கம் சிறுநீரகத்தியில் உள்ள கலன்கோளத்தில் இரத்தம் வடிக்கப்படும் செயன்முறையுடன் ஆரம்பிக்கும்.

இப்படி வடிக்கபபட்ட கலன்கோள வடிதிரவத்திலிருந்து குளுக்கோசு போன்ற மூலக்கூறுகள் முற்றாக உறிஞ்சப்படும். முக்கியமாக நீர் மீள அகத்துறிஞ்சப்படும்.

இவ்வாறு அகத்துறிஞ்சப்படாதுவிட்டால் ஒவ்வொருநாளும் பரல் கணக்கில் நாம் சிறுநீர் கழிக்க வேண்டி ஏற்படும்.

கிட்னி சட்னியாகிவிட்டது என்ற வசனத்தை சினிமாவில் நீங்கள் கேட்டிருக்கலாம். உண்மையில் சிறுநீரகம் திடீரென தொழிற்பட மறுக்கும்போது சிறுநீர் உற்பத்தியாவது திடீரெனத் தடைப்படும். இதனை **acute renal failure** என்று சொல்வார்கள். இதேபோல சிறுநீரக்ம் கொஞ்சம் கொஞ்சமாகப்

பழுதடைந்து செல்லுதல் **chronic renal failure** எனப்படும். அவ்வாறு சிறுநீரகம் பழுதடைய நீரிழிவு **(Diabetes)** உயர்குருதியமுக்கம் **(Hypertension)** போன்ற நோய்கள் காரணமாக அமைகின்றன.

சிறுநீரகம், குறித்த நிலைக்கு மேல் தொழிற்பட முடியாமல் போனால் சிறுநீரகத்தை மாற்றீடு **(Renal replacement therapy)** செய்ய வேண்டும். இது குருதிச் சுத்திகரிப்பாக **(Dialysis)** அல்லது சிறுநீரக மாற்று சிகிச்சையாக **(Renal transplant)** அமையலாம்.

சிறுநீரகம் என்றவுடன் பலருக்கு ஞாபகம் வருவது சிறுநீரக கல் தான். சிறுநீரில் வெளியேற்றப்படும்



ஒட்சலேற்று, பொசுபேற்று போன்ற உப்புக்கள் சேர்ந்து உருவாகுவது தான் இந்த கல். இது மண போன்று சிறிய அளவில் இருக்கும் போது ஒரு பிரச்சினையுமில்லாமல் சிறுநீருடன் வெளியேறிவிடக் கூடும். பெரிய கற்கள் சிறுநீர்க் குழாய்களில் தடையை ஏற்படுத்துவதுடன் தாங்க முடியாத வேதனையையும் தரக்கூடும்.

நோவைப் பொறுத்தவரை மகப்பேற்று வேதனைக்கு அடுத்தபடியான கடுமையான வேதனை சிறுநீரக கல் தரும் வேதனை தான்.

தண்ணீர் குடிக்காமல் நீண்ட நேரம் இருப்பவர்களுக்கு இவ்வகையான கற்கள் உருவாகலாம் என நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

தண்ணீர் பருகாமல் இருக்கும் போது நீரை இயன்ற மட்டும் சேமிப்பதற்காக சிறுநீர் செறிவாக்கப்படும். இதனால் கற்கள் உருவாகும் சாத்தியம் அதிகம். இது பழைய விடயம். புதிய விடயம் என்ன தெரியுமா? மிகமிக அதிகமாக (ஏறத்தாழ 6'10 லீற்றர் நீரை ஒருநாளில்) பருகுபவர்களுக்கும் கல் ஏற்படும் வாய்ப்பு அதிகமாம்.

சிறுநீரகத்தில் உப்புக்கள் சேர்ந்து கல் உருவாகாமல் தடுக்க ஒருவகை புரத மூலக்கூறுகள் சுரக்கப்படுகின்றன. அதிகமான சிறுநீர் உருவாகும்போது இவை ஐதாக்கப்பட்டு விடுவதால் கல் தோன்றும் வாய்ப்பு அதிகமாம்.

எங்களுக்கென்ன, நாங்கள் எல்லாவற்றையுமே அளவோடு செய்பவர்கள் என்கிறீர்களா? சிறுநீர் தானே, சின்னப் பிரச்சனை என்றிருந்துவிடாதீர்கள். எதற்கும் இவ் விடயத்தில் ஒருகண் வைத்திருங்கள்.

●தத்துவம்

# பேராசை

–ஆரபி

"இவர் ஒரு பேராசை பிடித்த துறவி" என்றனர் எல்லோரும். தன்னைப்பற்றிக் கூறப்படும் எதைப் பற்றியும் அந்தத் துறவி கவலைப்படவில்லை.

துறவி என்பவரோ ஆசைகளைத் துறந்தவர். இவரோ பேராசை படைத்தவர். இவர் எப்படித் துறவியாக முடியும்? கேள்விக் கணைகளைத் தொடுத்தனர் பலர்.

அந்தக் கேள்விக்குப் பதில் சொன்னவர்கள் "இவர் துறவிதான் அதில் சந்தேகமில்லை. ஆனால் இவருக்குப் பொருளாசை மட்டும் உண்டு. இவர் ஒரு மிகச் சிறந்த ஓவியர். இவரிடம் ஓவியம் வரையச் சொல்லிக் கேட்பவரிடம் நிறையப் பணம் கறந்து விடுவார். அதுவும் முன்பணமாகவே நிறையப் பணம் கேட்பார். அது கைக்கு வந்த பிறகுதான் தூரிகையையே தொடுவார்" என்றனர்.

ஆடிப் பிழைக்கும் ஒரு நடன மங்கை இவரைச் சோதிக்க எண்ணினாள். துறவியிடம் சென்று ஓர் அழகிய ஓவியம் கேட்டாள். துறவியோ எல்லா ஓவியர்களும் கேட்கும் விலையைவிடப் பல மடங்கு அதிகம் கேட்டார்.

எரிச்சல் பட்ட நடனமாது "நீங்கள் கேட்பதைவிட அதிகம் தருகிறேன். ஆனால் இப்போதே, என் எதிரிலேயே வரையவேண்டும்" என்று ஒரு நிபந்தனை விதித்தாள்.

"ஆஹா" என்றபடியே தயாரானார் துறவி. எந்த ஓவியனையும் எரிச்சலூட்டக் கூடிய நிபந்தனைகுச் சர்வசாதாரணமாக அவர் சம்மதித்தது வெறுப்பைக் கொடுத்தது அந்த நடன மாதுவுக்கு.

உடனிருந்தவரிடம் "இவரெல்லாம் ஒரு துறவியா? ஏன் ஓர் ஓவியக் கலைஞர் என்பதற்குக் கூட அருகதையற்றவர். பேராசையுடன் காவியணிந்து அந்தத் துறவி உடையையே அவமானப்படுத்துபவர்." என்று பலபடி வசையாடினாள்.

துறவி அது பற்றிச் சற்றும் கவலைப்படாமல் ஓவியத்தை முடித்து விட்டுப் பொருள் கேட்டுக் கைநீட்டினார். பொருளைக் கொடுத்த பெண்மணி "உமது ஓவியங்கள் மக்கள் பார்வைக்கு மாட்டக் கூடத் தகுதியற்றவை. அவற்றை உள்ளாடைகளிற்கு வேண்டுமானால் பயன்படுத்தலாம்" என்று கூறியவள், தனது உள் பாவாடையை நீட்டி அதிலும் ஓவியம் வரையச் சொன்னாள்.

துறவி கோபப்படவில்லை. அதற்கும் நிறையத் தொகை பெற்றுக் கொண்டார். வரைந்து கொடுத்தார். அவரைக் கண்டபடி திட்டிவிட்டுப் புறப்பட்டாள் அந்த நாட்டியப் பெண்மணி.

பின்னாளில் தான் தெரிய வந்தது, துறவி எதற்கு அவ்வளவு பணம் சேர்த்தார் என்ற விபரம்.

அந்தப் பகுதியில் நீடித்த பஞ்சம் நிலவியதால் ஏராளமான களஞ்சியங்களைக் கட்டித் தானியம் நிறையச் சேமித்து வைத்திருந்தார் துறவி.

அவர்தான் அனுப்புபவர் என்று தெரியாமலேயே ஏழைகளைப் போய்ச் சேர்ந்தன உணவுப் பொருட்கள். அதேபோல் அவருடைய கிராமத்திலிருந்து நகரத்திற்குச் செல்லச்சாலை வசதிகள் இல்லாது வண்டிமாடுகள் பெரும் துன்பமடைந்தன. வயோதிகர்களும் நோயாளிகளும் ரொம்பக் கஷ்டப்பட்டனர். அழகிய பாதை போட அவரது பணம் செலவாயிற்று.

தேவைகள் நிறைவேறியதும் தனது வண்ணங்களையும், தூரிகைகளையும் தூக்கி எறிந்து விட்டார். பிறகு அவர் ஓவியம்கூட வரையவில்லை என்பதுடன் மலைப்பகுதிக்குச் சென்று தவத்தில் ஆழ்ந்து விட்டார்.

சிலரின் பிறப்பு புனிதமானது. சிலர் பிறந்த பின் புனிதம் வந்து சேர்கிறது. சிலர்மீது புனிதம் திணிக்கப்படுகிறது. மக்களுக்காகச் செய்யப்படும் எல்லாமே இறைத்தன்மை மிக்கவைதாம். பசிபோக்கும் செயல், சமுதாய நலன் கருதும் தொண்டு. இவை தவத்திலும் உயர்ந்தவை.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்.**

# வாசகர் முகங்கள்

நம்பமுடியவில்லை.... ஆம், யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு மாத இதழ் தவழ்ந்து புரண்டேனும் தொடர்ச்சியாக வருகிறதென்பதை என்னால் நம்ப முடியவில்லை.

உங்கள் விடா முயற்சிக்கும் சிறப்பான சேவைக்கும் என் பாராட்டுக்கள். தொடரட்டும் உங்கள் பணி.

-க.மலர்விழி, சுன்னாகம்.

தங்களின் இதுவரையான எட்டு வெளியீடுகளையும் நாங்கள் பெற்று எமது ஆவணக்காப்பகத்தில் சேர்த்துக் கொண்டுள்ளோம். உங்கள் முயற்சி மேன்மேலும் வெற்றியடைய எமது வாழ்த்துக்கள்.

இரா.கனகரத்தினம். குரும்பசிட்டி, பொறுப்பாளர்,
தமிழீழ ஆவணக்காப்பகம்.

உங்கள் சஞ்சிகை பற்றிய தகவலை 'கலைமுகம்' என்ற சஞ்சிகை வாயிலாக பெற்றுக்கொண்டேன். மேலும் வேடிக்கை இதழை தபால் மூலம் பெறவும் விரும்புகின்றோம். விபரங்களை அனுப்பி வைப்பீர்களா?

வண. பா.கிறிஸ்துநேசர், பணிப்பாளர்,
கத்தோலிக்க நிலையம், மன்னார்.

வேடிக்கை 8 இல் அட்டைப் படம் எமக்கு வேடிக்கையாய் அமைந்தது. இரு காதலர்கள் பனிபோன்ற பாறையாக பாறைகளுடன் பாறைகளாயிருப்பது உங்களிற்கு பயந்தா? அல்லது சுடுவானின் நெத்தியடிக்கு பயந்தா?

வி.திவ்யா, வல்வெட்டித்துறை.




எவ்வளவுதான் யார்தான் சொன்னாலும் எழுத்துப் பிழைகளை நீங்கள் நிறுத்துவதாக தெரியவில்லை. தமிழர் தேசத்திலிருந்து வரும் பத்திரிகை தரங்கெட்டு வருதல் தகுமா...?

யே.அமலன், கோப்பாய்.

சுடுவான் தரும்

# நெத்தியடி

"பாவம், மனிசன் ரிட்டயர்ட் பிரின்சிப்பல் எண்டு பேர்தான் பென்சனெடுத்துப் 15 வருசமாப் போச்சு இன்னும் பென்சன் குடுக்கேல்ல. உதுக்கு அலைஞ்சே மனுசன் படுத்த படுக்கையாப் போச்சு. இண்டைக்கோ நாளைக்கோ எண்டு இழுத்துக் கொண்டு கிடக்கு. பாவம் பாத்து நானும் ஒருதரம் போய்க்கதைச்சன். அந்தநாள்ள மலையகப் பக்கத்தில தான் உவருக்கு முதல் நியமனமாம். பதவியில் உறுதிப்படுத்தியது தொடர்பான கடிதம் அவற்றை சுயவிவரக் கோவையில இல்லையாம். அதை எடுத்துக் கொண்டு வாங்கோ எண்டு சொல்லிச்சினம். நானும் தேடிப்பாத்து ஏலாமக் கைவிட்டிட்டன்."

*********

" எனக்கு ஆசிரிய நியமனம் யாழ் மாவட்டத்தில கிடைச்சது. ஆனா என்ரை அடையாள அட்டையில் வெளிமாவட்டம்தான் பதிஞ்சிருக்கு. தொழிலடையாள அட்டைக்கு விண்ணப்பித்து ஒன்றரை மாதமாச்சு. ஆறேழுதரம் வலயக்கல்வி அலுவலகத்துக்குப் போனதுதான் மிச்சம். அண்டைக்குப் பாடசாலைக்கு நேரம் போயிட்டுதெண்டு மோட்டச்சைக்கிள்ள வேகமா வந்தன். சீருடைக்காரர் மறிச்சு சந்தேகமெண்டு ரோட்டுக்கரையில நிப்பாட்டி வைச்சான். பிறகு கடவுள் புண்ணியத்தில ஒண்டரை மணித்தியாலத்துக்குப் பிறகு வந்த ஒரு சீருடைக்காரன் என்ர முகத்த ஞாபகம் வைச்சிருந்த படியா போகச்சொல்லிவிட் அண்டைக்குப் பாடசாலைக்குப் போச்சேந்த நேரம் 11.15. அரைநாள் லீவாப்போச்சு"

*********

"S.L.A.S சோதனைக்குப் போக நான் வியாழக்கிழமையே லீவு போட்டிட்டுப் போட்டன். அடுத்த நாள் வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை நடக்கிற செமினாருக்கு வரச்சொல்லிக் கடிதம் வந்தது. போகேலுமே..? இப்ப விளக்கம் கோரிக் கடிதம் அனுப்பி இருக்கினம்...."

"வருடாந்த சம்பள ஏற்றம் போடுறதுக்கு இண்டைக்கு வரைக்கும் ஏழெட்டுத்தடைவ டிப்பாட்மெண்டுக்குப் போனதுதான் மிச்சம். இன்னும் வேலை நடக்கேல்லை கேட்டா செய்யிர விடயஎழுதுனர் லீவாம். அவா தான் வரவேணுமாம்."

இவை.. கடந்த காலங்களில் நடந்த சில சம்பவங்களின் உளவொலிகள். இவற்றில் சம்பந்தப்பட்டவர்களுடைய கருத்துக் களின் தாக்கத்தினால் எமது சுழியோடிகள் சம்பந்தப்பட்ட இடங் களில் ஊடுருவி உள்ளக ஆய்வு செய்தனர். விளைவு சில நிதர்சனங்களை நெத்தியடியின் தரிசனத்துக்கு கொண்டு வந்தது.

முதலாவது விடயத்தில் நாம் தொடர்பு கொண்டு கேட்டபோது குறிப்பிட்ட அதிபர், பதவியில் உறுதிப்படுத்தப்பட்டமை தொடர்பான ஆவணம் அவரது கோவைகளில் இல்லை என்பதால் அவரது ஓய்வூ தியம் தொடர்பான மேல் நடவடிக் கைகளை மேற்கொள்ள முடியாதுள் ளது என்ற காரணமே கூறப்பட்டது.

இதில் பல முரண்பாடுகள் உள்ளன.

1) பதவியில் உறுதிப்படுத்தப்ப டாத ஒருவர் எவ்வாறு 40 வருடங்க ளுக்கு மேலாக சேவையில் நீடித்தார்?

2) "ஆசிரியபதவி" என்பதே நிரந்தரமாகாத ஒருவருக்கு எப்படி சேவை முன்னடிப்படையில் "அதிபர் பதவி" வழங்கப்பட்டது?

3) சேவையில் உறுதிப்படுத்தப் படாதஅதாவது செவையிலேயே இல்லாத ஒருவர் எவ்வாறு சேவையி லிருந்து ஓய்வுபெற முடியும்?

என்பன சிந்திக்கப்பட வேண்டும்.

அந்த அதிபர் ஆசிரியராக முதல் நியமனம் பெற்றது மலையகப் பகுதியில் உள்ள ஒரு பாடசாலை.

அங்கிருந்த எழுதுநர் ஆசிரியரது சேவையை உறுதிப்படுத்தல் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கா தது முதல் தவறு.

மாற்றம் பெற்று ஆசிரியர் வடபகுதிக்கு வந்தபோதும் அவரது சுயவிவரக் கோவையில் தேவை யான ஆவணங்கள் உள்ளதா? என்பதை சீர்பாராததும் ஒரு எழுதுனரின் தவறே.

இப்படியாக தன்சேவைக்காலம் முடிந்ததும், ஓய்வூதியம் இன்றி ஊதியமும் இன்றி அந்த (ஆசிரியர்) அதிபர் அனுபவித்த சிரமங்களுக் கும் துன்பங்களுக்கும் காரணம் எழுதுனர்களும் அவர்களது சேவை நிலையை கண்காணிக்காத அதிகா ரிகளுமே.

இரண்டாவது விடயத்தில் தொழிலடையாள அட்டை பெறுவ தற்கான விணப்பத்தைப் பூரணப்

படுத்தி ஒப்படைத்த காலம் தொடர் பாகக் கவனம் எடுத்ததில் தாமதம் நிகழ்ந்தமை உறுதியாகத் தெரிந் தது. நியாயமான காரணம் எதுவும் கூறப்படவில்லை.

இது தொடர்பான தாமதத்திற்கு விடயத்திற்குப் பொறுப்பான எழுதுனரது சிரத்தையற்ற தன்மை யும் நிர்வாக அலுவலர் இந்த எழுது னரது கடமைப்பட்டியலூடான பணி யாற்றுகையை சீரானமுறையில் மேற் பார்வை செய்யாமையுமே காரணங் களாகும்.

நாட்டின் தேசிய அடையாள அட்டையே ஒருவாரத்தில் அல்லது இரண்டு வாரங்களில் பெறக் கூடியதாய் உள்ளபோது, ஒரேகூரை யின் கீழுள்ள அலுவலகத்தில் மட்டுமே தயாரிக்கப்படும் தொழில டையாள அட்டை வழங்க ஒன்றரை மாதங்கள் தேவைதானா?

அடுத்த விடயத்திற்கு வருவோம். திட்டமிடலுக்கென பொறுப்பான ஆளணி இருந்தும் நாட்டின் வர்த்த மானியில் திகதியிடப்பட்ட ஒரு பொதுப்பரீட்சை அதுவும் குறிப்பாக பட்டதாரிகள் தோற்றும் பரீட்சை நடைபெறும் தினத்தில் செயலமர்வு நடத்தத் திட்மிட்ட செயற்பாடு எத் தனை தூரம் திட்டமிடற்திறன் பேணப்படுகிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

மேலும் கருத்தரங்கு தொடர்பான தகவலை உரிய காலத்தினுள் கிடைக்கும் நடவடிக்கை எடுக்காது கருத்தரங்கை ஒழுங்கு செய்தமை கூட 'மனிதம்' என்னும் சிந்தனை க்கு முரண்பட்டது.

எமது டிசெம்பர் மாத இதழில் கணினி துறையில் பல பொய்யான விளம்பரங்கள் மூலம் மக்களை ஏமாற்றி தொழில் செய்யும் நிறுவனங்களின் செயற்பாடுகளை அம்பலப்படுத்தி இருந்தோம். அண்மையில் அதில் சம்பந்தப்பட்ட ஒரு நிறுவனத்தின் உரிமையாளர் உரியவர்களால் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

ஆனால்,விளம்பரம் மூலம் ஒரு மாயத் தோற்றத்தை நுகர்வோரிடையே ஏற்படுத்தி ஏமாற்றும் தன்மை அண்மைக் காலமாக அதிகரித்து செல்வதாகவே படுகிறது. கணினிசார் துறையில் இது பெருமளவில் நடைபெறுவது அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

குறுகிய காலத்தில் அதிக வருமானத்தை பெறுவதற்காக இவர்கள் செய்யும் இத்தகைய மோசடி நீண்ட நோக்கில் அவர்க ளுக்கே பாதகமானது என்பதை இவர்கள் உணர மறுப்பது ஏன்?

செயலமர்வுகள் வளஆளணியது வசதிக்கோ, வருமான வழிவகுக் கவோ அல்ல. துறைசார் ஆசிரியர் களின் வாண்மை விருத்திக்கே.

எனவே அவர்களின் மனநிலை, சமூகநிலை என்பவற்றைப் பாதிக் காது செயற்படவேண்டியது அதிகா ரிகளினதும் துறைசார் ஆளணியி னரதும் தலையாய கடமை.

எந்தத் துறையாயினும் உயர் பதவிநிலையிலுள்ளோர் மற்றும் ஏனைய அலுவலர்கள் தங்கள் நினைவில் நிறுத்திக்கொள்ள வேண் டிய முக்கியமான ஒரு விடயம்,

"அலுவலர்கள் இருப்பதற்காக மக்கள் அவர்களை நாடுவதில்லை. மக்கள் தேவையை பூர்த்தி செய் யவே அலுவலர்கள் நியமிக்கப்பட் டுள்ளார்கள்".

இதனை மனதில் முன்னிறுத்தி தங்களிடம் வருபவர்கள்தாம் தமக் குச் சம்பளம் வழங்கும் எஜமானர் கள் என்பதை கல்வித் துறைசார்ந்த வர்கள் மட்டுமன்றி ஏனைய துறை சார்ந்த ஊழியர்களும் எண்ணிச் செயற்பட வேண்டும்.

இது ஒரு முகவுரை மட்டுமே. சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை உரியவர்கள் கவனத்தில் எடுத்து சரியான நடவடிக்கைகளை மேற்கொண்டால் முடிவுரை எழுதும் வேலை எமக்கிருக்காது.

## ஏன் வெறுப்பு ...?

–தி. கௌசிகன்

மனிதன் பிறந்ததிலிருந்தே இன்பம் துன்பம் எனும் படிகளில் ஏறி இறங்கினான். இதில் ஒன்று கூட நிரந்தரமில்லை. நிலங்கள் வறண்ட பின்தான் பசுமையாகின்றன. மரங்கள் இலையுதிர்ந்த பின்தான் துளிர்விடுகின்றன. நிரந்தரமாக வாழ்ந்து கொண்டிருப்பது மலை ஒன்றுதான். அதுவும் வளர்வதாகவும் அழிவாதாகவும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

எல்லா செல்வங்களையும் நிரந்தரமாக எவனுக்கும் இறைவன் வழங்கியதில்லை. முதற்கட்டம் துன்பம் என்றால் அடுத்த கட்டம் இன்பம். இறைவனது தாரசில் இரண்டு தட்டுக்களும் ஏறி ஏறி இறங்குகின்றன.

எதுவும் நிரந்தரமில்லை. நல்ல விடயங்கள் நடக்கும் போது மகிழ்ச்சியாக ஏற்று கொள்கிறோம். துன்பமான விடயம் நடக்கும் போது துவண்டுவிடுகிறோம்.

மேடும் பள்ளமுமாக வாழ்க்கை மாறி மாறி வந்தால் பெரிய வீழ்ச்சியில்லை. ஓரேடியாக உச்சிக்கு போய்விட்டால் அடுத்து பயங்கரமான சரிவு காணப்படுகின்றது.

வீழ்ச்சியில் கலக்கமோ எழுச்சியில் மயக்கமோ கொள்ளாதே. அடுத்த பாதை என்ன? பயணம் என்ன? என்பது உனக்கு தெரியாது. கஸ்ரத்திலும் நேர்மையாக இரு. நீ ஏமாற்றபட்டாலும் பிறரை ஏமாற்றாதே.

உன் வாழ்நாளிலிலேயே அதற்கான பலனைக் காண்பாய்.

# இருளின் நாயகர்கள்

ஆக்ஷன் த்ரில்

-ஜேனா

ஒரு பக்கத் தொடர் 9

நெருங்கி வந்த பூட்ஸ் ஒலிகள் ரமேசி னதும் ரிச்சட்டினதும் செவிகளை எட்டி உசார்ப்படுத்தியது. உரிய நேரத்துக்கு முன் சண்டையை தொடங்குவதும் உரிய நேரத்துக்கு முன் சண்டையை தொடங்கா மல் விடுவதும் போர்க்களத்தில் பேரிள ப்பை ஏற்படுத்தி விடும் என்பது போரியல் பாடநெறியில் அவர்களுக்குப் போதிக்கப் பட்டிருந்தது. ஆபத்து தங்களைத் தேடிக் கொண்டிருந்த போதும் ரமேசும் ரிச்சட்டும் துப்பாக்கிகளுடன் நம்பிக்கையையும் கையில் பிடித்துக் கொண்டிருந்தனர்.

மூச்சுவிடும் சலனம் கூட இன்றி அமைதிக்கே அமைதியை கற்பித்துக் கொண்டிருந்தன அந்த இரு சிறுத்தைகள்.

நெருங்கி வந்த எதிரிப்படை மின்விள க்கொலியை சுற்றிலும் வீசி சல்லடை போட்டது. வலைக்குள் மாட்டாத மீன்க ளாய் ஒளிபுக முடியாத ஒளிவான பகுதிக் குள் பதுங்கிக் கொண்டன இரு உருக்களும்.

சல்லடையிட்டுச் சலித்ததில் சலித்துப் போன எதிரிப்படை மீண்டும் தம்மிடம் திரும்பின. நின்றுவிட்ட மூச்சை மீளசெயற் படவிட்டனர் ரிச்சட்டும் ரமேசும். வாகான இடம்தேடி நிலையெடுத்துக் கொண்டனர்.

இதற்கிடையே கண்காணிப்பு கோபுரத் தையும் அதற்கருகே அமைந்திருந்த எரி பொருள் தாங்கியையும் நோக்கிக் கார்த்திக் கும் மதனும் வேகமாக நகர்ந்து கொண்டி ருந்தனர். விரைவிலேயே கண்காணிப்பு கோபுரத்தை அடைந்த மதன் அங்கு ஒரு சிப்பாய் இருப்பதை அவதானித்துவிட்டான்.

காவலுக்கு இருந்த அந்தக் காவலன் தூக்கக் கலக்கத்தில் தூங்கிவளிந்து கொண்டிருந்தான்.

மதனுக்குத் தன் வேலை சுலபமென புரிந்தது. சாதாரண சிப்பாய் போல் தன்னை மாற்றிக் கொண்டு சகஜமாக கண்காணிப்புக் கோபுரத்தில் ஏறத் தொடங்கினான்.

காவலுக்கு இருந்தவன் விழிப்பதாய் தெரியவில்லை. இந்த நாடகத்தைக் கவனித்துக் கொண்டிருந்த கார்த்திக் மதன் விட்டுச் சென்ற ஒளிப்பதிவு கருவியை உயிர்பித்து நடக்கும் நிகழ்வுகளை பதிவு செய்யத் தொடங்கினான்.

காவலனை ரமேஸ் அண்மிக்கவும் அவன் திடுக்கிட்டு விழிக்கவும் நேரம் சரியாக இருந்தது.

கடமை மாறும் நேரம், அதுதான் அடுத்த பணிக்குரியவன் வருகிறான் என எண்ணிய காவல் சிப்பாய் கடமை நேரத்தில் தூங்கிய தன் தவறை எப்படிச் சமாளிப்பது என்ற குழப்பத்தில் இருந்ததினால் வந்தவன் புதியவன் என்ற உண்மையை உணராமலிருந்தான்.

பணிநேரத்தில் உறங்கியதற்கும் உண்மை நிலையை உணரத் தவறிய மைக்கும் உடனடியாகவே அதற்கான விலையை அவன் கொடுக்க நேரிட்டது.

யுத்ததர்மத்துக்கிசைவான அந்தக் கோரக் காட்சியை கார்த்திக்கின் கரத்திலி ருந்த கருவி எந்தவித உணர்ச்சியுமின்றி பதிவு செய்து கொண்டிருந்தது.

-த்ரில் தொடரும்.



# லினக்ஸ்

## - ஒரு அறிமுகம்

ஓப்பரேட்டிங் சிஸ்ரம் என்றால் என்ன என்பது கணினி பற்றி அறிந்த எல்லோருக்கும் தெரிந்த விடயம்தான். மனிதன் கணினி மூலம் எந்தவொரு செயற்பாட்டையும் செய்யப் பயன்படுத்தும் மென்பொருட்களையும் கணினியின் தன்னிச்சையான செயற்பாடுகளிற்கு தேவையான கட்டளைத் தொகுதிகளையும் மனித செயற்பாடுகளையும் ஒன்றிணைத்து இயக்குவதற்கான அடிப்படைத் தளம்தான் ஒப்பரேட்டிங் சிஸ்ரம் எனப்படுகிறது.

சாதாரணமாக நாம் எல்லோரும் தெரிந்திருப்பதும் பயன்படுத்துவதும் Micro Soft கொம்பனியின் Windows ஓப்பரேட்டிங் சிஸ்ரங்களையே. நம்மைப் பொறுத்தவரையில் இந்த ஓப்பரேட்டிங் சிஸ்ரங்களை இலவசமாக பெறமுடிவதால் வேறு வகையான ஓப்பரேட்டிங் சிஸ்ரங்களைப்பற்றி அறியவோ பயன்படுத்தவோ முயலவில்லை. ஆனால் பெருந்தொகை பணம் செலவளித்து இத்தகைய ஓப்பரேட்டிங் சிஸ்ரங்களை பயன்படுத்தவேண்டிய நிலையிலுள்ளோர் அதற்கு மாற்றீடாக செலவின்றி பயன்படுத்தக்கூடிய ஓப்பரேட்டிங் சிஸ்ரம் ஒன்றை நாடினர். அதற்கு ஏற்றாற்போல் வரமாக வந்ததுதான் இந்த லினக்ஸ் ஓப்பரேட்டிங் சிஸ்ரம்.

லினக்ஸைப் பற்றி இன்று எல்லாரும் பேசுகிறார்கள். லினக்ஸைப் பயன்படுத்துவது கடினம் என்பது மாறி புரோகிராமர்கள், நெட்வொர்க்கிங் நிபுணர்கள் தவிர மற்றவர்களும் லினக்ஸைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். லினக்ஸ் பயனாளிகளின் எண்ணிக்கை மிக வேகமாக வளர்ந்து வருகிறது. லினக்ஸைப் பற்றித் தெரிந்து கொள்ள சரியான சமயம் இதுதான். இந்த அறிமுகத்தில் லினக்ஸைப் பற்றிய அடிப்படைத் தகவல்களைத் தெரிந்து கொள்ளலாம்.

## கணினி உலா

## லினக்ஸ்சின் வரலாறு

அசெம்பிள் செய்யப்பட்டுப் பல வருடங்கள் ஆன பிறகும் ஒபரேட்டிங் சிஸ்ட பாக்கியம் இல்லாத ஒரு இன்டெல் சிப் தாங்கிய கணினி, பிரம்மாவை நோக்கித் தவமிருந்தது. பல ஆண்டு கடுந்தவத்திற்குப் பிறகு பிரம்மா தோன்றி லினக்ஸைத் தந்தருளினார்.

அதாவது, 1980களின் இறுதியில் பின்லாந்து நாட்டில் ஹெல்சிங்கி பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிந்த கணினி விஞ்ஞான மாணவரான லீனஸ் டோர்வால்ட்ஸுக்கு (Linus Torvalds) யூனிக்ஸின் டெஸ்க்ரொப் வடிவமான Minixல் திருப்தி இல்லாமல் போனது. மினிக்ஸைக் காசு கொடுத்து வாங்கவும் வசதி இல்லை.

மினிக்ஸை விடச் சிறந்த, இன்டெல் சிப் உள்ள கணினிகளில் இயங்கக் கூடிய ஒரு ஒபரேட்டிங் சிஸ்டம் அவருக்குத் தேவைப்படடது. அதை நாமே உருவாக்குவோம் என்று ஒரு ஒபரேட்டிங் சிஸ்டத்தை சிருஷ்டிக்கத் தொடங்கினார். இணையத்தில் அதைப் பற்றி அறிவித்தார்.

மிக விரைவில் உலகெங்கும் உள்ள ஆயிரக்கணக்கான புரோகிராமர்கள் அவருடன் சேர்ந்து உழைத்தார்கள். இப்படியாக 1994ல் லினக்ஸ் 1.0 வெளியானது. 1999ல் லினக்ஸ் 2.2 வெளியானது. இன்று லீனக்ஸுக்குக் கிட்டத்தட்ட 40 வயது. க்ருசோ சிப்களைத் தயாரிக்கும் ட்ரான்ஸ்மெட்டா நிறுவனத்தில் புரோகிராமராக வேலை பார்க்கிறார் லீனஸ்.

## யூனிக்ஸ் மாதிரி லினக்ஸில் உள்ள அனுகூலங்கள்

அவரவர் தேவைக்கேற்ற லினக்ஸ் distributionகள் இருக்கின்றன. (செல்லமாக distro என்கிறார்கள்). ரெட் ஹட், மாண்ட்ரேக், கோரல், VA - Caldera போன்ற நிறுவனங்கள் தங்கள் லினக்ஸ் டிஸ்ட்ரோக்களை விற்கின்றன.



லினக்சுக்கு மாற விரும்பும் விண்டோஸ் பயனாளிகள், புரோகிராமிங் வாசனை இல்லாதவர்கள் ஆகியோருக்கு லினக்ஸ் மாண்ட்ரேக், கோரல் லினக்ஸ் ஆகிய டிஸ்ட்ரோக்கள் இருக்கின்றன. புரோகிராமர்களுக்கு டெபியன் ஜி.என்.யூ. லினக்ஸ், Slackware ஆகியவை பொருந்தும். பல பெரிய வர்த்தக வெப்சைட்கள் ரெட் ஹட் லினக்ஸ் சேர்வரில் இயங்குகின்றன.

ரெட் ஹட்தான் மற்றையவற்றைவிட மிகப் பிரபலமான டிஸ்ட்ரோ. கோரல் லினக்ஸ், டெபியனை வைத்து உருவாக்கப்பட்டது என்றாலும் மாண்ட்ரேக் மாதிரி டெஸ்க்ரொப் பயனாளிகளை மனதில் கொண்டு தயாரிக்கப்பட்டது. இவற்றில் உங்கள் தேவைக்கேற்ற டிஸ்ட்ரோவைப் பயன்படுத்தலாம்.

## லினக்ஸ் என்பது என்ன?

GNU என்ற ஒபரேட்டிங் சிஸ்டமும் Linux என்ற கெர்னலும் சேர்ந்த கொம்பினேஷன், ஜி.என்.யூ. லினக்ஸைத்தான் எல்லாரும் லினக்ஸ் என்கிறார்கள். (ஒரு வசதிக்காக சுருக்கமாக லினக்ஸ் என்று குறிப்பிடுகிறோம்). ஜி.என்.யூ., யூனிக்ஸை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு இலவச ஒபரேட்டிங் சிஸ்டம். (லைனக்ஸ் என்பது தவறான உச்சரிப்பு)

## லினக்ஸின் முக்கிய அம்சங்கள்

Multi-user: லினக்ஸ் யூனிக்ஸின் நகல் என்பதால் ஒரு லினக்ஸ் கணினியை ஒரே சமயத்தில் பலர் பயன்படுத்த முடியும். விண்டோஸ் என்.டி.யை யாரும் வீட்டில் பயன்படுத்த முடியாது.

Multi-tasking: லினக்ஸ் ஒரு நிஜமான மல்ட்டிடாஸ்க்கிங் ஒபரேட்டிங் சிஸ்டம். அதாவது ஒரே சமயத்தில் பல புரோகிராம்களை இயங்க வைக்க முடியும். வேகம் லினக்ஸின் பலங்களில் ஒன்று.

இலவசம்: இலவசம் என்றால் காசு கொடுக்காமலே கிடைக்கும் என்பது மட்டும் இல்லை. இதன் நிரல் வரிகளும் (source code) சேர்ந்து கிடைக்கிறது.

லினக்ஸைப் பயன்படுத்துபவர்கள் இந்த நிரல் வரிகளைத் தங்கள் விருப்பப்படி மாற்றி கொம்ப்பைல் செய்துகொள்ளலாம்.

லினக்ஸ் சி.டி. வாங்கவேண்டும் என்றால் கூட கொஞ்சம்தான் செலவாகும். ஆனால் பெரும்பாலான லினக்ஸ் புத்தகங்களுடன் தரப்படும் சி.டி.களில் லினக்ஸ் இலவசமாகக் கிடைக்கிறது.

லினக்ஸை இணையத்திலிருந்தும் இறக்கிக்கொள்ளலாம். அதை விட வசதி, நண்பர்களிடம் இரவல் வாங்கலாம்.

எல்லா நாடுகளிலும் லினக்ஸ் பயனாளிகள் குழுக்கள் (Linux User Groups) இருக்கின்றன. இதன் உறுப்பினர்களிடமும் கேட்டு வாங்கலாம்.

மற்ற ஒபரேட்டிங் சிஸ்டங்களைப் போலில்லாமல் லினக்ஸைப் பல நகல்கள் எடுத்து சகட்டுமேனிக்கு விநியோகிக்கலாம்.

## லினக்சுக்கும் மற்ற OSகளுக்கும் உள்ள வேறுபாடு

(மற்ற ஒபரேட்டிங் சிஸ்டங்கள் என்றால் விண்டோஸ் என்று அர்த்தம். சில சமயம் மெக்கின்டொஷ், யூனிக்ஸ் ஆகியவற்றையும் சேர்க்கலாம்)

எம். எஸ். டொஸ், விண்டோஸ் ஆகியவை இன்டெல் 386,486 ப்ரொசசர் களின் திறன் முழுவதையும் பயன்படுத்துவதில்லை. லினக்ஸ், ப்ரொசசரின் எல்லா வசதிகளையும் பயன்படுத்துகிறது.

விண்டோஸ், மெக்கின்டொஷ் ஆகிய ஒபரேட்டிங் சிஸ்டங்களில் மல்ட்டி யூசர், மல்ட்டி டாஸ்க்கிங் வசதிகள் இல்லை. லினக்ஸில் இருக் கிறது. விண்டோஸ் என்.டி. மல்ட்டி யூசர் ஒபரேட்டிங் சிஸ்டம் என்றுதான் பெயர். ஆனால் லினக்ஸ் போன்ற நெட்வொர்க் ஒபரேட்டிங் சிஸ்டங்களில் பயனாளிகளுக்குக் கிடைக்கும் நிஜமான தனி அடையாளம், பாதுகாப்பு அதில் கிடைக்காது. யூனிக்ஸிலிருந்து வந்ததால் லினக்ஸ் ஒரு ஆழமான மல்ட்டி யூசர் ஒபரேட்டிங் சிஸ்டம். லினக்ஸில் நம் இஷ்டப்படி மாற்ற முடிகிற வசதி (customisability) இருக்கிறது.

**-தி.திவாகர்**

விண்டோஸை விட லினக்ஸ் வேகமாக செயல்படுகிறது. சரியான வன்பொருள் மட்டும் இருந்துவிட்டால் ஒழுங்காக configure செய்தால் லினக்ஸ் க்ராஷ் ஆவதில்லை.

அப்படி ஆகிவிட்டால் அதை போஸ்ட்மார்ட்டம் செய்ய க்ராஷ் ஆன விபரங்கள் core என்று தனியாக ஒரு பைலில் பதிவாகி இருக்கும். அதைப் படித்து பிரச்னையைக் கண்டுபிடித்து debug செய்து விடலாம்.

ஒரே கம்ப்யூட்டரில் லினக்ஸ், விண்டோஸ் இரண்டையும் தனித்தனி பார்ட்டிஷன்களில் போட்டு வைப்பது சகஜம்.




லினக்ஸ் பார்ட்டிஷனிலிருந்து லினக்ஸ் பைல் மனேஜரைப் பயன்படுத்தி விண்டோஸ் பார்ட்டிஷனில் இருக்கும் பைல்களைப் பார்க்க முடியும்.

விண்டோஸில், லினக்ஸ் பார்ட்டி ஷனில் இருப்பவைமேல் கை வைக்கவேண்டும் என்றால் அதற் கென்று ஒரு தனியாக ஒரு மென் பொருளை நிறுவ வேண்டும்.

ஒரு மென்பொருளை நிறுவினால் விண்டோஸில் செய்வது போல் கணினியை ரீஸ்டார்ட் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.



பவர்கட் போன்ற விபத்துக்களால் கணினி சரியாக அணைக்காமல் விட்டுவிட்டீர்கள் என்றால் விண்டோஸ் பாதிக்கப்படும். சில பைல்கள் சேதமாகும். லினக்ஸ் இது போன்ற அதிர்ச்சிகளைத் தாங்கும் வல்லமை படைத்தது.

விண்டோஸில் ஒரு புரோகிராம் ரிப்பேர் (Hang) ஆகிவிட்டால் சிஸ்ரமே ஸ்தம்பித்துப் போய்விடும். அதை ரீபூட் செய்து தொலைக்க வேண்டும். லினக்ஸில் ஒரு புரோகிராம் உறைந்து போனாலும் பிரச்சனை இல்லாமல் வேலை பார்த்துக் கொண்டிருக்க முடியும். ஒரு புரோகிராம் முழு சிஸ்டத்தையும் கட்டிப் போட்டுவிடாது.

லினக்ஸ் மிகப் பழைய இன்டெல் ப்ரொசசர்களில் கூட வேகமாக இயங்கும். மற்ற ஒபரேட்டிங் சிஸ்டங்களைப் போலில்லாமல் லினக்ஸ் 4 எம்.பி. றொம்மில் சுறுசுறுப்பாக செயல்படும். ஆனால் குறைந்தபட்சம் 16 எம்.பி. றொம் இருந்தால் KDE, Gnome போன்ற விண்டோஸ் பாணி கிரபிக்ஸ் இன்டர்பேஸ்களைப் பயன்படுத்த வசதியாக இருக்கும்.

புரோகிராமிங் தெரியும் என்றால் லினக்ஸ் கெர்னலை (Kernel: ஒபரேட்டிங் சிஸ்டத்தின் மூளை போல் செயல்படும் மென்பொருள்) உங்கள் தேவைகளுக்கு ஏற்ப மாற்றி re-compile செய்து கொள்ளலாம். இதுவும் மற்ற ஒபரேட்டிங் சிஸ்டங்களில் இல்லாத விடயம். டிவைஸ் டிரைவர்கள், புரோகிராம்கள் என்று எல்லாவற்றின் Source codeஜயும் மாற்றி கோடிங் செய்து பயன்படுத்த, விநியோகிக்க முடியும்.

வேறு எந்த ஒபரேட்டிங் சிஸ்டத்திலும் இல்லாத அளவுக்கு லினக்ஸில் இலவசமாக ஏராளமான புரோகிராமிங் மென்பொருட்கள், வெப்சேர்வர்கள் கிடைக்கின்றன. உங்களுக்கு எந்த மென்பொருள் எல்லாம் வேண்டுமோ அவற்றை மட்டும் நிறுவிக்கொள்ளலாம்.



லினக்சுக்கு இருப்பது போல் பயனாளிகள் குழுக்கள் வேறு எந்த ஒபரேட்டிங் சிஸ்டத்திற்கும் இல்லை. லினக்ஸ் உள்ள கணினியில் ஒரு பிரச்சனை வந்தால் லினக்ஸ் பயனாளிகளுக்கான இணைய விவாத மேடை ஒன்றில் ஒரு ஈ-மெயில் போட்டால்

போதும். நீங்கள் பிரச்சனையைச் சொன்ன சில நிமிடங்களில் பலரிடமிருந்து பதில் வந்துவிடும். லினக்ஸ் பயனாளிகள் எப்போதும் சக பயனாளிகளுக்கு உதவத் தயாராயிருப்பர். இது லினக்ஸ் கலாச்சாரத்தின் தனிச்சிறப்பு.

லினக்சுக்கு வைரஸ் தொல்லை அதிகம் இல்லை. லினக்ஸை ஒரு வைரஸ் தாக்குவது தெரிந்தால் பொதுவாக சில மணி நேரங்களில் இணையத்தில் அதற்கான நிவாரணி கிடைத்துவிடும்.

## லினக்ஸை கணினியில் நிறுவுதல்

லினக்ஸை நிறுவுவதற்கு புத்தர் மாதிரி பொறுமை வேண்டும். லினக்ஸில் பல வடிவங்கள் அல்லது விநியோகங்கள் (distributions) இருக்கின்றன. இதில் சில வகை லினக்ஸ் விநியோகங்களை நிறுவ நிபுணர்களால்தான் முடியும் (உதா: Debian GNU/Linux என்ற விநியோகம்).

Red Hat லினக்ஸை நிறுவுவதுகூடக் கொஞ்சம் கஷ்டம்தான்.

ஆனால் Linux Mandrake, Corel Linux போன்ற விநியோகங்களை நிறுவுவது விண்டோஸ் அளவுக்கு சுலபம். எனவே லினக்ஸை நிறுவுவது மகா கடினம் என்ற குற்றச்சாட்டு முற்றிலும் உண்மை இல்லை.

இணைய இணைப்பை configure செய்யும்போது கூட ஆள் தேவைப்படலாம். இது கொஞ்சம் லொள்ளு பிடித்த விடயம்தான். இருந்தாலும் உதவ இணையத்தில் ஆள் இருப்பார்கள்.

## முடிவுரை

விண்டோஸ் ஒபரேட்டிங் சிஸ்ரங்களில் செய்யக்கூடிய அனைத்து செயற்பாடுகளையும் லினக்ஸிலும் செய்யலாம். அதற்கும் மேலாக வேகமாகவும் பாதுகாப்பாகவும் இது செயற்படும். இனியுமென்ன தயக்கம்... நீங்களும் லினக்சுக்கு மாறலாமே.....

தன் தவறை உணர்ந்து, உண்மையாகவே வருந்துபவன், குற்றமிழைக்காதவனுக்கு ஒப்பானவன். -நபிகள் நாயகம்.

சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் பூமியைச் சொந்தமாக்கிக் கொள்வார்கள். -இயேசு நாதர்.

எவன் தன்னையே உதாரணமாகக் கொண்டு இன்ப துன்பங்கள் இரண்டையும் பார்க்கிறானோ அவனே சிறந்தவன். -பகவத் கீதை

தவறு செய்வது மனிதகுணம், மன்னிப்பது தேவகுணம்.-போப்பாண்டவர்

யாருடைய நம்பிக்கையையும் குலைக்கமுயலாதே, முடியுமானால் அவனுக்கு அதைவிட மேலான ஒன்றைக் கொடு. -விவேகானந்தர்.

# வம்பன்

■ பறவைக்காச்சல் பிரச்சாரம்- பயமுறுத்தலா? விளிப்புணர்வா?

சி.வேணி, வட்டுக்கோட்டை.

ஆரம்பத்தில் விழிப்புணர்வூட்டும் பிரச்சாரம் போல்தான் தெரிந்தது. ஆனால் தற்போது சில சுயநலவாதிகளின் கபடநோக்கத்திற்கான பயமுறுத்தல் போல் படுகிறது. அண்மையில் உலக சுகாதார நிறுவனம் விடுத்த அறிவிப்பில், நன்கு சமைத்த கோழி உணவுகளை உண்பதால் இந்நோய் பரவுவதில்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அந்தச் செய்தியை யாரும் முக்கியப்படுத்தியதாய் தெரியவில்லை. பறவைக் காச்சல் பயமுறுத்தல் இப்படியே போனால் கோழி வளர்ப்போரெல்லாம் வறுமைக் காச்சலால் பாதிகப்படப்போவது உறுதி.

■ தென்னாபிரிக்க அவுஸ்ரேலியா இறுதி ஆட்டம் பார்த் தீர்களா... எப்படி இருந்தது?

வி.மகாதேவன், உடுவில்.

போட்டியா அது! போரைய்யா போர்! ஒரு விறுவிறுப்பான போட்டியின் சிறப்புக் காட்சிகளின் தொகுப்பில்கூட (அதாங்க high lights) கிடைக்காத விறுவிறுப்பு இப்போட்டியின் முழுநேரமும் கிடைத்ததே.. (ஹி..ஹி அதுதான் விளையாட்டெண்டா கிலோ என்ன விலை எண்டு கேக்கிற நம்ம ஆசிரியர் கூட இந்த முறை அபிமானியின்ர விவரணத்துக்கு அதிக பக்கமொதுக்கி கவர் ஸ்ரோரி ஆக்கியிருக்கிறார் பாருங்கோ...!!)

■ அன்னம், நீரையும் பாலையும் கலந்து வைத்தாலும் நீரைவிட்டுப் பாலைப் பருகுமென்பார்களே... எப்படி வம்பா?

ச.பிரியா, இருபாலை.

அப்ப அந்த அன்னம் பெரிய விஞ்ஞானியாக இருக்கும் போல ஹி..ஹி.. எனக்கென்னவோ அந்த அன்னம், அன்னப்பறவையை குறிப்பதாய் தெரியவில்லை. நாம் உண்ணும் சோற்றைக் குறிப்பதாகவே நினைக்கிறேன். சோற்றினுள் பாலை ஊற்றிவைத்தால் சோறானது பாலை உறிஞ்சிக்கொண்டு நீரை விட்டுவிடும். இதைத்தான் அன்னம் நீரைவிட்டு பாலைப் பருகும் என்றிருப்பார்கள். காலப்போக்கில் நம்மவர்கள் அன்னத்திற்கு அன்னப்பறவையை அர்த்தம் கற்பித்திருக்கக்கூடும்.

■ தத்துவம் ஒன்று சொல்லுங்கள் வம்பா?

கு.வாகீசன், பிரதானவீதி, கிளிநொச்சி.

ஒன்றென்ன பத்து சொல்வேன். ஆனால் தேடிவந்து அடிக்கப்பிடாது ஆமா...

1) பத்து எறும்பு ஒரு யானையைக் கடிக்க முடியும், ஆனா ஒரு யானை பத்து எறும்பைக் கடிக்க முடியாது.

2) நுளம்பு கடிச்சா யானைக்கால் வரும், ஆனா யானை கடிச்சா நுளம்புக்கால் வராது.

3) கிறீம் பிஸ்கட்டில் கிறீம் இருக்கும், ஆனா நாய் பிஸ்கட்டில் நாய் இருக்காது.

4) அரிசி கொட்டினா வேற அரிசி வாங்கலாம், ஆனா தேள்கொட்டினா வேற தேள் வாங்கேலாது.

5) தண்ணீரில் மீன் இருப்பதால் தண்ணீர் அசைவமாகி விடாது.....

6) நடந்து போனா கால்வலிக்கும், ஆனா கால்வலிச்சா நடக்க முடியாது

7) காலைக் கடிக்கிற செருப்பால முள்ளைக் கடிக்க முடியாது.

8) அயன் பொக்ஸால அயன்பண்ண முடியும், ஆனா பென்சில் பொக்சால பென்சில் செய்ய முடியாது.

9) சைக்கிள் நிண்டாலும் சில்லு சுத்தும், ஆனா சில்லு நிண்டா சைக்கிள் சுத்துமா..?

10) செருப்பு போட்டுக்கிட்டு சாப்பிட்டாலும் மீன் முள்ளுக் குத்தத்தான் செய்யும்.

கடைசியா உங்களுக்கு ஒன்று சொல்லட்டுமா......

கலண்டரில் தினமும் திகதி கிழிக்கலாம். ஆனால் அந்தத் திகதியில் நீங்கள் என்ன "கிழித்தீர்கள்" என்பதுதான் முக்கியம்.

■ சித்திரை ஜெனிவாப் பேச்சு முடிவைத் தருமா?

சி.சுகிதா, சித்தன்கேணி.

பேச்சுக்களால் எதுவும் முடியாதென்ற முடிவுதான் ஏற்கனவே தெரிந்து போயிற்றே... அப்புறமென்ன. எடுத்த முடிவுகள் செயலுறுப்பெறாத வரையில் புதிய பேச்சுக்களால் எதுவித பலன்களும் கிடைக்கப்போவதில்லை.

# பதில்கள்

● *சிறுவர் தொடர்*

–சியாம் சுந்தரின்

# பனிமலர் 5


அதன் காலில் ஒரு ஓலை கட்டியிருந்தது. அதை அவசர அவசரமாகப் படித்த மன்னரின் களையிழந்திருந்த திருமுகம் அன்றலர்ந்த செந்தாமரையினை வென்றது. அப்படி என்ன செய்தி அதில் இருந்தது.

இதுதான்.

மன்னர் பெருமான் சமூகத்துக்கு தளபதி மகாசேனன் எழுதிக்கொள்வது,

பனிமலரைக் கொண்டுவரும் முயற்சியில் வெற்றி பெற்று விட்டோம். பெருங் கண்டத்தைக் கடந்து லெமூரியாக் கண்டத்தில் நுழைந்து விட்டோம். இன்னும் இருபத்தி நான்கு நாழிகை முடிவில் தங்களைச் சந்திக்கிறேன்.

பணிவுள்ள, மகாசேனன்.



செய்தி உடனே அரண்மனை முழுவதும் பரவியது. அனைவர் முகங்களிலும் மகிழ்ச்சி குடிகொண்டது. முரசறைவோனுக்கு நாட்டு மக்களுக்குச் செய்தியை அறிவிக்குமாறு கட்டளை பிறப்பித்தார் அரசர். அவர் அரச சபையைக் கூட்டிப்பேசுகையில் "நம்முடைய தளபதி மகாசேனன் கிடைத்தற்கரிய, தேடற்கரிய மாணிக்கம். அவனைத் தளபதியாகப் பெற்றது எங்கள் பாக்கியம்" என்று உள்ளம் நெகிழ்ந்து கூறினார். "அவனை நாட்டின் எல்லையில் வரவேற்பதற்கு ஒழுங்கு செய்யுங்கள்." என்றார்.

அங்கே மகாசேனனும் வியாக்கிரகண்டரும் உரையாடிக் கொண்டே மங்களபுரிக்குச் சமீபித்தனர். "சுவாமி! புறா போய் சேர்ந்திருக்குமல்லவா. மன்னர் பெருமானுடைய கவலை தீர்ந்திருக்கும்" என்றான்.

"ஆமாம், புறா போய்ச் சேர்ந்திருக்கும். ஆனால் மாற்றோலை இன்னும் வரவில்லையே! என்றார்.

"வேண்டுமென்றால் நீங்கள் பாருங்கள். நம்மை அவர்கள் வரவேற்க நகரின் எல்லைக்கே வந்துவிடுவார்கள்" என்றான். அப்பொழுது பெருந்திரளான மக்கள் கூடியிருப்பதற்கான அறிகுறிகள்

தென்பட்டன. இருவரும் தம் குதிரைகளை வேகமாக விரட்டினார்கள். அந்த உயர் ஜாதிக் குதிரைகள் வாயில் நுரைதள்ள வேகமாக ஓடின.. ஓடவில்லை, பறந்தன. இவர்களைத் தூரத்தே கண்டமாத்திரத்தே முரசுகள் முழங்கின. சங்கங்கள் விம்மின. மக்கள் வாழ்த்தொலி எழுப்பினர்.

"பனிக்கண்டம் கண்ட தளபதி வாழ்க!

மங்களபுரி மகாமந்திரவாதி வியாக்கிர கண்டர் வாழ்க!

மாமன்னர் மங்களசேனர் வாழ்க! வாழ்க! என்ற வாழ்த்தொலிகள் வானை முட்டின. மன்னனைக் கண்ட மாத்திரத்தே குதிரையினின்றும் குதித்த மகாசேனன் ஓடோடிச் சென்று பனிமலரைப் பாதங்களில் வைத்து வணங்கி "கொண்டு வந்தேன், பனிமலரை" என்றான். மன்னர் அவனைத் தூக்கி அணைத்துக் கொண்டார். எஃகனைய அவனுடம்பு உணவின்றி மெலிந் திருப்பதைக் கண்டு கண் கலங்கினார்.

"மகாசேனா! மகாசேனா!" என்று பேசவார்த்தையில்லாது அவரது நா தழுதழுத்தது. " உன்னை எப்படி பாராட்டுவ தென்றே தெரியவில்லை" என்றார். பின்னர் வியாக்கிர கண்டரை நோக்கி "சுவாமி! தங்களுக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்" என்றார்.

அங்கு கூடிநின்ற மக்கள் அந்தக் காட்சியைக் கண்டு கண்கலங்கினர். "மன்னா! உடனே விரைந்து சென்று பனிமலரைக் கசக்கி இளவரசருக்குப் பானமாகக் கொடுங்கள்" என்றார் வியாக்கிர கண்டர். அனைவரும் அரண்மனைக்குப் புறப்பட்டனர்.

அரண்மனையில் மகாராணி வாசலில் வந்து அவர்களை அழைத்துக் கொண்டு சென்று இளவரசனின் அறையை அடைந்தாள். மன்னர் அவளிடம் பனிமல ரைக் கொடுக்க அதில் இரண்டு இதழ்களைக் பிடுங்கிக் கசக்கிப் பாலினுள் பிழிந்து அந்தப் பாலை இளவரசனின் வாயினுள் விட்டாள்.

உடனே, ஒரு வருடம் நோய் வாய்ப் பட்டிருந்த இளவரசன் துள்ளி எழுந்தான். ஆனால் அவன் பூதாகரமாக வளர்ந்தி ருந்தான். அவன்தலை அரண்மனை முகட்டை முட்டியது. அவர்களை விசித்திர மாகப் பார்த்தான். குனிந்து என்ன நடந்தது என்று கேட்டான். நடந்ததைக் கூறவே மற்ற இரண்டு இதழ்களையும் பிழிந்து வாயில் விட்டுக் கொண்டான்.

அனைவரும் நல்லதோர் மாற்றத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்தோ! பாவம்! அவர்கள் எதிர்பார்த்ததுக்கு மாறாக இளவரசன் சிறு எறும்பளவு உருவத்துக்கு மாறியிருந்தான். அப்போது "மன்னா! கவலை வேண்டாம். இளவரசன் பனிமலரின் மகிமையால் சாகாவரம் பெற்று விட்டான். ஆயிரம் ஆண்டு கழிந்த பின்னர் மீண்டும் பனிமலர் மலரும்போது அதைக் கொண்டு இளவரசன் சுயவுருவம் பெறுவான்" என்றது ஓர் அசரீரி. அனைவரும் திகைத்து நின்றனர்.

-பனிமலர் முற்றியது.

# எங்கே எனது

எங்கே எனது
கிராமம்?
இந்த விருட்சம்
வேர் பதித்த
அந்த
கிராமம் எங்கே?

தென்றல் வந்து
தலைசீவ
நாணம் கொண்டு
வளைந்தாடும்
ஆற்றங்கரை
நாணல் எங்கே?

வேலியோரப்
பூக்கள் எல்லாம்
வாசம் சேர்த்து
நிற்கும்.
பச்சைப் புல்லு
உச்சியிலே
பனித்துளியை
சுமந்து நிற்கும்.

நான் வைச்ச
பன வடலி
உச்சமா
வளர்ந்திருக்கும்.
கொழும்பான்
மாங்கிளையோ
கொப்பு கொப்பா
காச்சிருக்கும்.

நீர் முட்டும்
வயல் வெளிகள்..
விளைந்தாடும்
நெல் மணிகள்..
உலகுக்கு படியளந்த
உழவன் எங்கே?

இளவட்டுகள்
கூடிநின்று
ஊர்கதை பேசி
உவகை பூத்து
கழித்திருந்த
உயர்ந்த
ஆலமரம் எங்கே?

பட்டாம் பூச்சி
பிடிப்பதற்கு
ரெக்கை கட்டி
பறந்துவந்த
பள்ளிநண்பர்கள்தான்
எங்கே?

பனையோலை
பல்லக்கில்
உட்கார வைச்சுவிட்டு
ஊர் சுத்தி
இழுத்து வந்த
தோழன் எங்கே?

கூட்டாஞ் சோறாக்கி
கூடி நாங்க பந்தி வைச்ச
பங்காளி எங்கே?

குட்டிக்கரணம் போட்டு
முங்கி...முங்கி
நான் குளிச்ச
வாய்க்கால் எங்கே?

அறுவடை
ஆரம்பிச்சா
அறுத்த நெல்லை
அடிக்கப் போட்டா
குறும்பாட்டு
குழம்பு வைச்சு
குத்தரிசி சோறும்கொண்டு
வரப்பாலே நடந்து வரும்
வடிவழகி ஆச்சி எங்கே?

வடிவான - என்
கிராமம்
வடிவிழந்து
போயிருச்சே - நான்
வாழ்ந்த வீடுகூட
மண்மேடாய் ஆயிடிச்சே,
கும்பிட்ட கோயிலெல்லாம்
மந்தை தங்கும்
மடமாச்சே...

-அனுராஜ், வண்ண

# ...து கிராமம்...?

வச்ச
6
ண்டு
ரும்
கே?
சே,
லாம்

பசுமை பொங்கும்
என் கிராமம்
வெறுமை பட்டு
கிடக்குதிங்கே...

வேலி கூட
இல்லாம
வேதனையும் இல்லாம
...டிவாழ்ந்த உறவெல்லாம்
திசைக் கொன்றாய்
பறந்திருச்சே...

நிமர்ந்து நின்ற
பனைகள் எல்லாம்
கழுத்து முறிந்து
கவிழ்ந்து நிற்கு..
முற்றத்த
தென்னை எல்லாம்
காடைக் கூட்ட
காவலரனாச்சு..
ஊரை சுத்தி
முள்ளுவேலி
உலோகத்தால்
போட்டிருக்கு...
கட்டவண்டி
கட்டிக்கொண்டு
சவாரி செய்த
திடல் எல்லாம்
கண்ணிவெடி கவனமென
பல் இழிக்கும்
பெயர் பலகை...
இதுவா
என் கிராமம்..!?

பேய்கள் வாழும்
சூனியமாயல்லவோ
தெரிகிறது
தெரிந்த முகம்
எதுவும் இல்லை
அறிந்த மொழிகூட
இல்லை...
வேற்றுக்கிரகமா இது..?

ஆமிக்காறன்
வாறான் என்று
அகப்பட்டதை
எடுத்துக் கொண்டு
ஓடிப்போனோம் அன்று!

உயர் பாதுகாப்பு
வலையம்,
ஊருக்க
போகேலாது...
வீட்டப் பார்க்க
விடுறாங்களாம்...
வருகிறோமின்று.....!

கட்டழகு பொங்கும்
கன்னிப்பெண்போன்ற
என் ஊர்
காடையரின்
கரங்கள் பட்டு
கற்பிளந்து
கிடக்கிறாள் பார்!

நீர் பொசிந்த
ஆறு குளங்கள்
எல்லாம்
நீறு பூத்துக்
கிடக்குது பார்!
நாம் பிணி தீர்த்த
கேணிக்கே
பிணி பிடித்துக்
கிடக்குதுபார்!

ஆதிக்க சக்திகளின்
இரும்புச்
சப்பாத்தின் கீழ்
அடிமைப் பட்டு
அழுகிறாள்
எம் அன்னை...
அவள்
துயர்துடைக்க
நீளட்டும்
எம் கரங்கள்..
புறப்படுங்கள் தோழரே
புதிய கிராமமொன்று
படைப்போம்!!!

...ண்ணார்ப்பண்ணை

கல்கியின்

# பார்த்திபன் கனவு..

9

## விக்கிரமன் சபதம்

சித்திரங்கள் எல்லாம் பார்த்து முடித்ததும் விக்கிரமன் தயங்கிய குரலில் "அப்பா!" என்றான். மகாராஜா அவனை அன்பு கனியப் பார்த்து "என்ன கேட்க வேண்டுமோ கேள், குழந்தாய்! சொல்ல வேண்டியதை யெல்லாம் தயங்காமல் சொல்லிவிடு இனிமேல் சந்தர்ப்பம் கிடைப்பது அரிது" என்றார்.

"ஒன்றுமில்லை அப்பா! இந்தச் சித்திரங்கள் எல்லாம் எவ்வளவு நன்றாயிருக்கின்றன என்று சொல்ல ஆரம்பித்தேன். இவ்வளவு அற்புத மாய்ச் சித்திரம் எழுத எப்போது கற்றுக் கொண்டீர்கள்? நமது சித்திர மண்டபத்தில்கூட இவ்வளவு அழகான சித்திரங்கள் இல்லையே!" என்றான் விக்கிரமன்.

மகாராஜா மைந்தனைக் கட்டி அணைத்துக் கொண்டார். "என் கண்ணே! என்னுடைய சித்திரத் திறமையை நீ ஒருவன் வியந்து பாராட்டியதே எனக்குப் போதும். வேறு யாரும் பார்த்துப் பாராட்ட வேண்டி யதில்லை. என் மனத்திலிருந்த ஏக்கம் இன்று தீர்ந்தது" என்றார்.

"ஆனால் அப்பா! எதற்காக உங்கள் வித்தையை நீங்கள் இவ்விதம் ஒளித்து வைத்திருக்க வேண்டும்? இந்த ஆச்சரியமான சித்திரங்களைப் பற்றி நீங்கள் வெட்கப்பட வேண்டிய அவசியம் என்ன? ஆகா! இந்த உருவங்கள் எல்லாம் எவ்வளவு தத்ரூபமாக, உணர்ச்சி பெற்று விளங்குகின்றன? முகங்களிலே தான் எத்தனை ஜீவகளை! இவ்வளவு ஆச்சரியமான சித்திரங்களை வேறு யார் எழுத முடியும்? ஏன் இந்தத் திருட்டு மண்டபத்தில் இவற்றைப் பூட்டி வைத்திருக்க வேண்டும்? எல்லாரும் பார்த்து சந்தோஷப்பட்டாலென்ன?" என்று விக்கிரமன் ஆத்திரமாய்ப் பேசினான்.

அப்போது பார்த்திப மகாராஜா சொல்லுகிறார்:- "கேள், விக்கிரமா! இந்த உலகத்தில் எவன் அதிகாரமும் சக்தியும் பெற்றிருக்கிறானோ,

அவனிடம் உள்ள வித்தையைத்தான் உலகம் ஒப்புக் கொண்டு பாராட்டும். காஞ்சியில் மகேந்திர சக்கரவர்த்தி இருந்தாரல்லவா? ஒரு தடவை பெரிய வித்வசபைகூடி அவருக்குச் 'சித்திரக்காரப் புலி' என்ற பட்டம் அளித்தார்கள்.

மகேந்திரவர்மருடைய சித்திரங்கள் மிகவும் சாமானிய மானவை. ஆனாலும் அவற்றைப் புகழாதவர் கிடையாது. இப்போதுள்ள நரசிம்ம சக்கரவர்த்திக்கு இது மாதிரி எத்தனையோ பட்டப் பெயர்கள் உண்டு. சித்திரக் கலையில் சிங்கம்! கான வித்தையில் நாரதர்! சிற்பத்தில் விசுவகர்மா! – உலகம் இப்படியெல்லாம் அவரைப் போற்றுகிறது. ஏன்? அவரிடம் பெரிய சைன்யம் இருப்பதினால்தான்.

குழந்தாய்! தெய்வத்துக்கு ஏழை, செல்வன் என்ற வித்தியாசம் இல்லை. இறைவனுக்குச் சக்கரவர்த்தியும் ஒன்றுதான்! செருப்பு தைக்கும் சக்கிலியனும் ஒன்றுதான். ஆனாலும் இந்த உலகத்தில் தெய்வத்தின் பிரதிநிதிகளாயிருப்பவர்கள் கூட, பெரிய படை பலம் உள்ளவன் பக்கமே தெய்வமும் இருப்பதாய்க் கருதுகிறார்கள். மகேந்திரன் வெகுகாலம் ஜைன மதத்தில் இருந்தான்! சிவனடியார்களை எவ்வளவோ துன்பங்களுக்கு உள்ளாக்கினான். பிறகு அவனுக்குத் திடீரென்று ஞானோதயம் உண்டாயிற்று. சிவபக்தன் என்று வேஷம் போட்டு நடித்தான் விக்கிரமா!

மகேந்திரனும் சரி, அவன் மகன் நரசிம்மனும் சரி, நடிப்புக் கலையில் தேர்ந்தவர்கள். விதவிதமான வேஷங்கள் போட்டுக் கொள்வார்கள் நம்பினவர்களை ஏமாற்றுவார்கள். இவர்களுடைய சிவபக்தி நடிப்பு உலகத்தை ஏமாற்றிவிட்டது.

புராதன காலத்திலிருந்து சோழ வம்சத்தினர்தான் சைவத்தையும், வைஷ்ணவத்தையும் வளர்த்து வந்தார்கள். சிராப்பள்ளிப் பெருமானையும், ஸ்ரீரங்கநாதனையும், குல தெய்வங்களாகப் போற்றி வந்தார்கள்.



ஆனால் இன்றைய தினம் சிவனடியார்களும், வைஷ்ணவப் பெரியார்களும் யாருடைய சபா மண்டபத்திற்குப் போகிறார்கள்? திரிலோகாதிபதியான காஞ்சி நரசிம்ம சக்கரவர்த்தியின்

ஆஸ்தான மண்டபத்துக்குத் தான்! என்னுடைய சித்திரங்களைப் பிறர் பார்ப்பதை நான் ஏன் விரும்பவில்லை என்று இப்போது தெரிகிறதா? சோழ நாடு சிற்றரசாயிருக்கும் வரையில் 'பார்த்திபன் சித்திரம் வேறு எழுத ஆரம்பித்து விட்டானா' என்று உலகம் பரிகசிக்கும். விக்கிரமா! இன்னொரு விஷயம் நீ மறந்து விட்டாய்..." என்று நிறுத்தினார் மகாராஜா.

"என்ன அப்பா?" என்று விக்கிரமன் கேட்டான்.

"இவை கேவலம் சித்திரத் திறமையைக் காட்டுவதற்காக மட்டும் எழுதிய சித்திரங்கள் அல்லவே, குழந்தாய்! என்னுடைய மனோரதங்களை என் இருதய அந்தரங்கத்தில் பொங்கிக் கொண்டிருக்கும் ஆசைகளையல்லவா இப்படிச் சித்திரித்திருக்கிறேன்? இந்தச் சித்திரங்களை இப்போது பார்க்கிறவர்கள் சிரிக்க மாட்டார்களா? 'வீணாசை கொண்டவன்' 'எட்டாத பழத்துக்கு கொட்டாவி விடுகிறவன்' என்றெல்லாம் பரிகசிக்க மாட்டார்களா? ஆகையினாலேயே, இந்த மண்டபத்தை இப்படி இருள் சூழ்ந்ததாய் இப்போது வைத்திருக்கிறேன். இந்தச் சித்திரக் காட்சிகள் எப்போது உண்மைச் சம்பவங்களாகத் தொடங்குமோ, அப்போதுதான் மண்டபத்தில் வெளிச்சம் வரச் செய்ய வேண்டும். அப்போதுதான் எல்லா ஜனங்களும் வந்து பார்க்கும்படி மண்டபத்தைத் திறந்துவிடவேண்டும். அந்தப் பாக்கியம், விக்கிரமா என் காலத்தில் எனக்குக் கிடைக்கப் போவதில்லை. உன்னுடைய காலத்திலாவது நிறைவேற வேண்டுமென்பது என் ஆசை. என்னுடன் நீயும் போர்க்களத்துக்கு வருவதாகச் சொல்வதை நான் ஏன் மறுக்கிறேன் என்று இப்போது தெரிகிறதல்லவா?"

"தெரிகிறது அப்பா!"

"என் கனவை நிறைவேற்றுவதற்காக நீ உயிர்வாழ வேண்டும். சோழ நாட்டின் உன்னதமே உன் வாழ்க்கையின் நோக்கமாயிருக்க வேண்டும். சோழர் குலம் பெருமையடைவதே அல்லும் பகலும் உன்னுடைய நினைவாயிருக்க வேண்டும். சோழரின் புலிக்கொடி வேறு எந்த நாட்டின் கொடிக்கும் தாழாமல் வானளாவிப் பறக்கவேண்டுமென்று சதா



## பிறப்பு

கருவில் உருவாகி
மகிழ்வில் ஆழ்த்திட
பூவாக மலர்வது
குழந்தைகளின் பிறப்பு..
உள்ளத்தில் ஊற்றாகி
பேனா முனையூடே
காவியமாய் மலர்வது
கவிதையின் பிறப்பு...

-சுதி, யாழ்ப்பாணம்.

## திருக்குறள்

வாழும் வழிகள்,
வாழ்வின் அர்த்தங்கள்
அனைத்தும் சுமந்த
இருவரிக் கோ(ர்)வை...

காலமும் நீ சிந்திக்க வேண்டும். நாளை மறுதினம் நான் போருக்குக் கிளம்புகிறேன். யுத்த களத்திலிருந்து திரும்பி வருவேனென்பது நிச்சய மில்லை. விக்கிரமா! போர்க்களத்தில் மடிகிறவர்கள் வீர சொர்க்கம் அடைகி றார்களென்று புராணங்கள் சொல்லு கின்றன. ஆனால், நான் வீர சொர்க்கம் போகமாட்டேன். திரும்பி இந்தச் சோழ நாட்டுக்குத்தான் வருவேன். காவேரி நதி பாயும் இந்தச் சோழ வளநாடுதான் எனக்குச் சொர்க்கம். நான் இறந்த பிற்பாடு என்னுடைய ஆன்மா இந்தச் சோழ நாட்டு வயல் வெளிகளிலும், கோயில் குளங்களிலும், நதிகரைகளிலும், தென்னந் தோப்புகளிலும்தான் உலாவிக் கொண்டிருக்கும். அப்போது 'பார்த்திபன் மகனால் சோழர் குலம் பெருமையடைந்தது' என்று ஜனங்கள் பேசும் வார்த்தை என் காதில் விழுமானால், அதைவிட எனக்கு ஆனந்தமளிப்பது வேறொன்றுமிராது. எனக்கு நீ செய்ய வேண்டிய ஈமக்கடன் இதுதான். செய்வாயா, விக்கிரமா?"

இளவரசன் விக்கிரமன், "செய்வேன், அப்பா! சத்தியமாய்ச் செய்வேன்!" என்று தழுதழுத்த குரலில் சொன்னான். அவன் கண்களில் நீர்துளித்து முத்து முத்தாகக் கீழே சிந்திற்று.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருந்த பொன்னனுடைய கண்களிலிருந்தும் தாரை தாரையாகக் கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது.


மகாராஜா அவனைப் பார்த்து, "பொன்னா! எல்லாம் கேட்டுக் கொண் டிருந்தாயல்லவா? இளவரசரிடம் உண்மையான அன்புள்ள சிலராவது அவருக்குத் துணையாக இருக்கச் சொல்லுகிறேன். என்னுடன் நீ யுத்தத்துக்கு வருவதைக் காட்டிலும் இளவரசருக்குத் துணையாக இருந் தாயானால், அதுதான் எனக்குத் திருப்தியளிக்கும் இருக்கிறா யல்லவா?" என்று கேட்டார்.

பொன்னன் விம்மலுடன் "இருக்கிறேன், மகாராஜா!" என்றான்.

–கனவு வளரும்....

# போரா...? சமாதானமா...?

**யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு நான்கு வருடங்களிற்குமேல் பு'ர்த்தியாகிவிட்டது. ஆனால் அப்படி ஒன்று நடைமுறையில் உள்ளதா என்பதே சந்தேகத்திற்குள்ளாகியுள்ளது. சமாதான பேச்சுக்கள் நியாயமான முறையில் தொடரப்பட வேண்டும் என நோர்வே, அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், இந்தியா என எல்லோரும் தத்தமது பங்கிற்கு வலியுறுத்தியுள்ளனர். ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை பார்க்கும் போது சமாதான முயற்சிகள் குறித்து சொல்லளலில் மட்டுமே அர்ப்பணிப்புள்ளதாக தெரிகிறது. அரசின் கடந்தகால செயற்பாடுகள் சிலவற்றை மீள நினைவுபடுத்திப் பார்த்தால் இது தெளிவாகும்.**



ஆரம்பத்தில் சமாதான ஏற்பாட்டாளர் பணியிலிருந்து நோர்வேயை அகற்றிவிடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. எனினும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் படி தனி தீர்மானத்தை எடுக்க முடியாததால் அது தோல்வி அடைந்தது. பின்னர் விசேட தூதுவராக செயற்படும் எரிக் சொல்ஹேமை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஜனவரி முதல் வாரத்தில் அவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள இருந்தார். எனினும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அக்காலப்பகுதியில் அமெரிக்கா சென்றதை காரணம் காட்டி விஜயம் ஒத்திவைக்கப்பட்டது. ஜனவரி 23 ஆம் திகதிக்கு பின்னரே மங்கள சமவீரவினால் நேரம் ஒதுக்க முடியும் என தெரிவிக்கப்பட்டது. இதனிடையே எரிக் சொல்ஹேம் விசேட தூதுவர் பதவியில் இருந்து


நீக்கப்பட்டதாக வதந்தி பரவியது.

உடனே உஷாரான நோர்வே ஜனவரி 23 திகதி அவர் இலங்கைக்கு விஜயம் செய்வதாக உத்தியோகபு'ர்வமாக அறிவித்தது. ஆக அந்த முயற்சியும் தோல்வியில் முடிந்தது. வெளிநாட்டு தூதுவர்களும் பிரதிநிதிகளும் வன்னிக்கு செல்ல அரசாங்கம் தடைகளை ஏற்படுத்தியது. அவற்றையும் மீறி இணைத் தலைமை நாடுகளின் தூதுவர்கள் அங்கு சென்று பேச்சு நடத்தினர்.

இவ்வாறான அரசின் சில முயற்சிகள் தோல்வியில் முடிந்துள்ளன. இதேவேளை அரசின் புதிய பல நியமனங்களும் அதன் தீவிர போக்கையே காட்டுகின்றன. பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக பணியாற்றுபவர் ஜனாதிபதி ராஜபக் ஷாவின் சகோதரரான கோட்டய ராஜபக்ஷ.

அமெரிக்காவில் வசித்து வந்த இவர் தேர்தல் காலப்பகுதியிலேயே நாடு திரும்பினார். இலங்கை இராணுவத்தின் புதிய தளபதி சரத் பொன்சேகா, யாழ் நகரில் பணியாற்றிய போது, செயற்பட்ட விதம் குறித்து தமிழ் மக்கள் நன்கறிவர். அடுத்தவர் முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் கொடகதெனிய. பாதுகாப்பு அமைச்சர் பொலிஸ் பணிகளுக்கான ஆலோசகரான இவர் ஜாதிகஹெல உறுமய கட்சியின் பொருளாரும் ஆவார். இவ்வாறானவர்களின் ஆலோசனைகளைப் பெற்று செயற்படும் ஜனாதிபதி ஒருவர் தமிழ் மக்களின் உரிமைகளை எப்படி பெற்றுத் தருவார் என்பது சிந்திக் கப்படவேண்டியதே.

கௌரவமான சமாதானம் என்பதே மஹிந்த ராஜபக்ஷாவின் தேர்தல் பிரசாரத்தில் மந்திர வார்த்தையாக ஒலித்தது. அதை பெறுவதற்கே தென் இலங்கை பௌத்த மக்கள் வாக்களித்தனர். ஆனால் இன்று என்ன நடக்கிறது? சமாதான காலப்பகுதியிலும் சவப் பெட்டிகள் இராணுவத்தின் வீடுகளுக்கு செல்கின்றன. இதுதானா சமாதானம்? என்று சிங்கள மக்களே கேள்வி கேட்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதை விட பரிதாபம், சில சம்பவங்கள் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு சரியான தகவல்கள்



கிடைக்கப் பெறுவதில்லை போல தெரி கின்றது. அதனால்தான் அண்மை யில் அவர் இந்தியாவிற்கு செல்லுமுன் னர் அவசர கூட்டம் ஒன்றை கூட்டி தனக்கு சரியான தகவல்களை வழங்கும்படி கூறியிருந்தார்.

**அலசுவது—**
**எஸ். ஆர். சுவாதிகா.**

இவ்வாறு பல இடையூறுகளின் மத்தியிலும் மாசி மாதம் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், அதன் தொடர்ச்சியாக தமிழ்-சிங்கள புத்தாண்டின் பின் இடம்பெற தீர்மானி க்கப்பட்ட பேச்சானது திட்டமிட்டபடி நடைபெறுமா என்பது தற்போது கேள்விக்குறியாகியுள்ளது. காரணம், கடந்த பேச்சுக்களில் எடுக்கப்பட்ட முடிவுகளில் அரசின் நடவடிக்கைகள் போதியதாக இல்லை.

காலங் காலமாக இடம்பெற்ற அனைத்து பேச்சுக்களும் தோல்விய டைய ஒரே காரணம், அந்தப் பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் சரிவர அமுல்படுத்தா மல் அலட்சியப்படுத்தப்பட்டமையே. இந்த கடந்தகால அனுபவங்களிலி ருந்து எதையும் கற்றுக்கொள்ள இன்றைய அரசும் முயலவில்லை.

மாறாக, பேரினவாத அமைப்புக் களை எப்படி திருப்திப்படுத்துவது என்பதிலேயே அது தன் கவனத்தை செலுத்தியுள்ளது. நிலமை இப்படியே நீளுமாகவிருந்தால் ஒப்பந்தத்தின் ஆயுள் குறுகிவிடுமென்பதுமட்டும் உறுதி. மேலும், விடுதலைப் புலிகளின் தலைவர் கடந்த மாவீரர் தின உரையில் குறிப்பிட்ட குறிகியகால அவகாசத்தில் பெரிய பாகம் களிந்துவிட்டதாகவே தெரிகிறது. அவ் அமைப்பின் பொறுப்புவாய்ந்த சில தலைவர்களின் அண்மைக்கால அறிவிப்புகள் அல்லது எச்சரிக்கை கள் அதையே உணர்த்தி நிற்கின்றன.

இலங்கையின் முன்னாள் ஜனாதி பதி சந்திரிக்கா குமாரதுங்க கூறிய ஒரு விடயம் ஞாபகத்திற்கு வருகிறது.

ஒரு தனி நபரோ ஒரு தேசமோ வெற்றி அடைவதற்கு வரலாறு சில சந்தர்ப்பங்களை மட்டுமே தருகிறது. நாம் அவ்வாறான பல சந்தர்ப்பங் களை தவற விட்டுள்ளோம். எனவே வளமிக்க இந்த இறுதி சந்தர்ப்பத்தை நாம் தவற விடமுடியாது. அவ்வாறு செய்யவும் கூடாது. "(History Offers but a few opportu nities, to an individual or a nation, to reach up to the stars. We have missed many chances we cannot, we must not, miss this one last moment rich with opportunity)" என அவர் தனது உரையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

சமாதானத்திற்கு கிடைத்துள்ள இறுதி சந்தர்ப்பத்தை சரியாக பயன்ப டுத்திக் கொள்வது அரசாங் கத்தின் கைகளிலேயே உள்ளது. ●

# குத்துச் சண்டை 8

## டொம் கிரிப் (TOM CRIBB)

1806 இல் ஹென்றி பியர்ஸ் ஓய்வு பெற்றார். உடனே குல்லி தன்னை ஒரு சம்பியன் எனக் கூறிக் கொண்டார். அதற்கேற்றாற் போல் அந்த ஆண்டு, லங்காஷயரைச் சார்ந்த பொப் கிரேக்ஸன் என்பவருடன் சண்டையிட்டு, 35வது சுற்றில் அவரை வீழ்த்தி சம்பியன் ஆனார். ஆனால் அவரை ஒரு சம்பியனாக நாடு ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில் அவரைவிடச் சிறந்த குத்துச் சண்டைச் சம்பியனான டொம் கிரிப் குத்துச்சண்டையில் வெற்றிமேல் வெற்றிகளைக் குவித்து நாடெங்கும் திக் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

என்றாலும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் குல்லி 1809 வரையிலும் விடாப்பிடியாக போட்டியில் கலந்து கொண்டார். அதன் பிறகு அவர் ஓய்வெடுத்துக் கொண்டதோடு வீடுவாசல் வாங்குவதில் முழு கவனமும் செலுத்தலானார். ஒரு காலத்தில், அவர் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் சிறையில் வாடியது போய் இப்போது குதிரைப்பந்தயத்தில் எக்கச்சக்கமாகப் பணம் குவிந்து அவரை ஒரு லட்சாதிபதியாக ஆக்கிவிட்டது. அவர் 1863 இல் காலமான போது 10 லட்சம் டொலருக்கு மேல் அவருக்குச் சொத்திருந்ததாகக் கூறப்படுகிறது.

1807இல், டொம் கிரிப், ஓய்விலிருந்த பெல்ச்சரோடு போட்டியில் ஈடுபட்டார். ஏப்ரல் 8இல் நடைபெற்ற அப்போட்டியில் பெல்ச்சர், 18-வது சுற்றில் டொம் கிரிப்பை செயலிழக்கச் செய்தார். ஆயினும் 2 நிமிட ஓய்வுக்குப் பின்பு சுதாகரித்துக் கொண்டு மீண்டும் தொடர்ந்தார். அந்த ரோசமான குத்துச்சண்டையில், பெல்ச்சர் வலது கரத்தால் ஒரு பஞ்ச்

—வீமன்

விடப்போய், தன்னுடைய வலக் கையை முறித்துக் கொண்டார். ஆயினும், அந்த நிலையிலும் அவர் ஒற்றைக்கையுடனும் ஒற்றைக்

கண்ணோடும் 41 சுற்றுவரை 'வீராவேசமாய்' போரிட்டார் பெல்ச்சர். அதற்குமேல் அவரைச் சண்டை செய்ய விடாமல் தடுத்து கோதாவை விட்டு வெளியேற்றும்படி நேரிட்டது.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் 1809 இல் கிரிப்புக்கும் பெல்ச்சருக்குமிடையே மீண்டும் போட்டி ஏற்பாடாகியது. பிப்ரவரி 1 இல் நடைபெற்ற அந்தக் குத்துச் சண்டைப் போட்டியில் 40 நிமிடங்க ளில் பெல்ச்சரை நொக்அவுட் செய்து வீழ்த்தினார் டொம்கிரிப். பெல்சர் தன்சுயஉணர்வு பெற்று எழுந்து கோதாவை விட்டு வெளியேறும் தருணத்தில் அவரைப் போலீசார் கைது செய்தனர். அதற்குக் காரணம் தெரியவில்லை. 28 நாட்கள் சிறையிலிருந்து விட்டு விடுதலையானார் · பெல்ச்சர். அதற்கப்புறம் அவர் குத்துச்சண் டைக் கோதாவுக்கே திரும்பவி ல்லை. காசநோயால் பீடிக்கப்பட்டு மரணமடைந்தார்.

அதற்கிடையே 1810 ஆம் ஆண்டில், டொம் கிரிப், சம்பியனாக உலாவந்த காலகட்டத்தில், அவரை எதிர்த்துப் போட்டியிட ஒரு அமெரிக் கக் கறுப்பர் லண்டனுக்கு வந்து சேர்ந்தார். அவர் பெயர் மோலினா க்ஸ். அவர் அமெரிக்காவில் மிகச் சிறந்த குத்துச் சண்டை வீரர்களை யெல்லாம் சாய்த்து விட்டு வெற்றி வீரராய்த் திக் விஜயம் மேற்கொண்டு புறப்பட்டார். அவர் இங்கிலாந்து வந்ததும், கிரிப்புடன் போட்டியிடுவ தற்கான ஏற்பாடுகள் நடந்தன.

இந்த மோலினாக்ஸ் அமெரிக்காவில் ஒரு கனவானிடம் அடிமையாய் இருந்தார். ஒரு சமயம், அவருடைய பண்ணையில் ஒரு நீக்ரோ ரவுடி புகுந்து துவம்சம் செய்ததைத் தாங்காமல், மோலினா க்ஸ் அந்த ரவுடியை எதிர்த்துத் தாக்கிப் புரட்டியெடுத்தான். அந்தச் சண்டையைக் கண்கூடாய்ப் பார்த்த அவனுடைய எஜமானன், அவனு டைய பராக்கிரமத்தை மெச்சி அவனுக்கு விடுதலை வழங்கிய தோடு, அவனுக்குக் குத்துச்சண் டைப் பயிற்சியும் அளிக்க ஏற்பாடு செய்தார். அவன் விரைவிலேயே ஒரு சிறந்த வீரனுக்குரிய அந்தஸ்த்தைப் பெற்றுவிட்டதை உணர்ந்த அந்த எஜமானன் அமெரிக்காவில் சிலரு டன் குத்துச்சண்டை போட்டிகளில் ஈடுபடுத்தினார். அந்தச் சந்தர்ப்ப த்தை நன்கு பயன்படுத்திக் கொண்ட மோலினாக்ஸ் தன்னை எதிர்த்த அத்தனைபேரையும் வீழ்த்திவிட்டு அமெரிக்கச் சம்பியன். பட்டம் பெற் றார். ஆகவே அவரை இங்கிலாந்து அனுப்பி வைத்தார் அந்த எஜமானர்.

இங்கிலாந்தில் முதன் முதலாக மோலினாக்ஸ் பிரிஸ்டலில் இறங்கி அங்கு சம்பியனாக உலா வந்து கொண்டிருந்த ஒரு வீரனுடன் போட்டியிட்டு நொக்அவுட்டில்

அவனை வென்றார். அந்த வெற்றியைத் தொடர்ந்து எட்டுப் பேரையும் வென்று, அதன் பிறகு அவர் இலண்டனுக்கு வந்து சேர்ந்தார்.

இலண்டனில் மோலினாக்சுடன் டொம் கிரிப்பை மோதவிடுவதற்குப் பல பெரிய புள்ளிகள் முனைந்தனர். டொம் கிரிப் ஒருவாறு இணங்கவே, 1810 டிசெம்பர் 10ஆம் நாளன்று அந்தப் போட்டி நடைபெற்றது. மொத்தம் 40 ரவுண்டு சண்டையில் 30 ரவுண்டுகள் வரையிலும் நீக்ரோவின் கையே ஓங்கியிருந்தது. அந்த 30 சுற்றுக்களிலும் கிரிப் பலமுறை கீழே விழுந்து விழுந்து எழுந்தார்.

31வது சுற்றில் கிரிப்புக்குச் சூடு பிடித்தது. 40வது சுற்றில் கிரிப்பின் நொக்அவுட்டைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தரையில் சாய்ந்தார் மோலினாக்ஸ். எழும்பவே இல்லை. கிரிப் வெற்றியடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

அமெரிக்க நீக்ரோ மீண்டும் கிரிப்பைப் போட்டிக்காக அழைத்தார். ஆகவே இரண்டாவது முறையாக அவர்களிருவருக்கும் 1811 செப்ரெம்பர் 28 இல் போட்டி நடைபெற்றது. அவர்களின் சண்டையைக் காண 40,000 பேர் கூடியிருந்தனர். அந்தச் சண்டையில் அமெரிக்க நீக்ரோவை ஒரே ரவுண்டில் வீழ்த்துவதற்காக டொம் கிரிப் திட்டம் போடடிருந்தார்.

ஆனால் அவருடைய திட்டம் 10வது சுற்றில்தான் கைகொடுக்கத் தொடங்கியது. அந்தப் 10வது சுற்றில் கிரிப், மோலினாக்ஸின் தாடையை உடைத்து விட்டார். ஆனால் மோலினாக்ஸ் அந்தக் குத்தைச் சமாளித்து உறுதியுடன் சண்டையிட்டார். ஆயினும் 11வது சுற்றில் கிரிப் விட்ட நொக் அவுட்டில் கீழே விழுந்தவர் பல நிமிடங்கள் எழும்பவேயில்லை. ஆக அந்தப் போட்டியிலும் டொம் கிரிப் வெற்றிவாகை சூடி உலகச் சம்பியன் பட்டத்தைத் தக்கவைத் துக் கொண்டார்.

அதன் பிறகும் டொம் கிரிப் தனது சம்பியன் பட்டத்தை இழக்காமல் 41வது வயதில் 1822 இல் குத்துச் சண்டையிலிருந்து ஓய்வு பெற்றார். அவருக்குப்பின் குத்துச்சண்டைச் சாம்பியனாக விளங்குவதற்கு, தனது வாரிசாக, தன் வளர்ப்பு மகனான டொம் விண்டரைத் தயார் செய்து கோதாவுக்கு அறிமுகம் செய்து வைத்தார் டொம் கிரிப்.

விண்டரும், கடுமையான பயிற்சியின் காரணமாக எடுத்த எடுப்பிலேயே ஒரு பண்பட்ட குத்துச் சண்டை வீரனாக அறிமுகமானார். தனது பெயரை மாற்றிக் கொண்டு டொம் ஸ்பிரிங் என்ற பெயரில் களத்தில் இறங்கலானார்.

-சண்டை தொடரும்.

# குறுந்தகவல் குறுந்தொகை



TV பார்த்தா கண் பழுதாய்ப் போகும்
Redio கேட்டா காது பழுதாய்ப் போகும்
Computer பாவிச்சா விரல் பழுதாய்ப் போகும்
Light பட்டா தோல் பழுதாய்ப் போகும்
உன்கை தொட்டா phone பழுதாய்ப் போகும்



சிறுவர் ஏறினா இராட்டினம் சுத்தும்
காலை மாலை என்று உலகம் சுத்தும்
காதலிக்குப் பின்னே காதலன்.........
கட்டாக்காலி நாய் ஊரைச் சுத்தும் (U)
கலங்கரை விளக்கில் Light சுத்தும்
இரைதேடிக் காகம் சுத்தும்
என்னைத் தேடி உன் SMS சுத்தும்
உன் SMS வாசித்தால் என் தலை சுத்தும்



சும்மா இருந்தவனுக்கு Booth Phone
காதலிக்கத் தொடங்கியவனுக்கு Hand Phone
நிச்சயார்த்தத்தின் பின் Land Phone
நித்திரையிலும் கதைக்க Code less Phone
ஆனால்......
தேனிலவின்போது Phone not allowed...!

4 கழுதைகள் ஒரு காட்டிலிருந்தன!
1வது கழுதை பசித்ததால் றெஸ்ரோறன்ற் போனது!
2வது கழுதை தாகத்தால் கோப்பிறேசனுக்கு போனது!
3வது கழுதை பல்வலியால் வைத்தியரிடம் போனது!
4வது கழுதை மகாசோம்பேறி....!
வெட்டித்தனமாய் இந்த SMS வாசிக்குது!
ஹி! ஹி! ஹி!

தொகுப்பு: சி.சரவணன், கொக்குவில்.

# செல்லும் இடமெல்லாம் 9

அந்தப் பழைய மின் குமிழ் 30 வாற்று விளக்கில் வாழ்ந்தகாலத்து வாழ்க்கையை மனக்கண்ணில் ஓடவைத்து வரவேற்பறையை ஒளியூட்டிக் கொண்டிருந்தது.

திவ்யா தன் அறையில் படிக்கிறேன் பேர்வழியாய் அமர்ந்திருந்தாள். அவள் அறையில், போனால் போகட்டென்று ஒரு 70 வால்ற்றைக் கொளுவியிருந்தார்கள். அது சற்று அதிக ஒளியில் மத்திய தரத்துப் பணக்காரர் போல 30 வாற்றின் வெளிச்சத்துக்குப் பெருமை காட்டிக் கொண்டிருந்தது.

"வேலிக்குப் பிறத்தால கண்ணும் மாமியார் தலையில கையுமாய்"த் திவ்யா பண்ணிக் கொண்டிருந்த படிப்புப் பாவனை, வரவேற்பறையில் வார் அறுந்து தொங்கிய ஒரு கதிரையில் வாடிப் போன பயிராய்த் துவண்

**-குகப்ஸ்**

டிருந்த திவ்யாவின் தாயின் வயிற்றினுள் புளி கரைத்துக் கொண்டிருந்தது.

கடந்த தினங்களில் நடந்தேறிய சம்பவங்கள் வறுமையிற் செம்மை பேண வறண்டுபோன அவள் தன்னம்பிக்கையை மேலும் வற்ற வைத்துக் கொண்டே இருந்தது.

சைக்கிளால் விழுந்ததற்கு உதவினார் என்று பிரசாத்தை வீடுவரை கொண்ட வந்த அன்று 'திவ்யா'வின் நடவடிக்கைகளிற் தெரிந்த அசாதாரண பரபரப்பும் அவளது மனதைப் பிசைந்தது.

ஏதோ ஒரு விரும்பத் தகாத நிகழ்வு குருவிக்கூடு போல இருக்கும் அந்தக் குடும்பத்தைத் தாக்கப் போகிறது என்பதான பயம் உருவாகத் தொடங்கியிருந்தது.

மாலை மண்ணெண்ணெய் வாங்கப் போனவள் வந்தபோது அது தரையில் பாய்வது தெரியாமல் நடந்து வந்தது..... முகத்தில் பரவிக் கிடந்த மந்த காசம் .... "ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய் பிள்ளை" என திரப்பித் திரப்பிக் கேட்டபோதும் பதில் பேசாது தன் போக்கில் போனது உட்பட யாவும் புதிராகவே இருந்தது.

மனம் தொய்ந்து போனது. உதடுகள் "நல்லூரானே நான் என்ன செய்வேன்? என்னை ஏன் சோதிக்கிறாய்? இனி இந்தப் பேதையால் தாங்க முடியாது..." என்று முணுமுணுத்துக் கொண்டன.

மரணவீட்டில் அழுது ஓய்ந்த வயோதிகப் பெண்ணாய் தொய்ந்து கிடந்தாள். தாயின் ஒவ்வொரு செயலுக்கும் காரணம் சொல்லக் கூடியவள் புயலில் அகப்பட்ட மரமாய்த் தாய் தொய்ந்து கிடப்பதைக் கூட உணராது சடமாகியிருந் தாள். கனவுலோகத்தில் சஞ்சரிக்கத் தொடங்கி யிருந்தாள்.



எந்தவொரு நிலை தன் பெண்ணுக்கு வந்துவிடக் கூடா தென்று வருந்தி வருந்தி இல்லாத விரதமெல்லாம் இருந்தாளோ அந்த நிலை வந்துவிட்டதுவே என்று வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள்.

நேரம் முன்னிரவு 8.30ஐ எட்டிக் கொண்டிருந்தது. "மதியம் வைத்த சோறு கறி பழுதாகிப் போனாலும் சாப்பிட்டு விட்டுப் படிக்கச் சொல்ல லாம். எதுவானாலும் எல்லாம் ஒரு சாண் வயிற்றுக்குத்தானே" என்று எண்ணியவாறு எழுந்தவளை,

"பிள்ளை கனகம், பிள்ளை கனகம்"என்ற குரல் உசுப்பியது. பக்கத்து வீட்டுப் பரமு அக்கா வாறா என்று வெண்கலத்துக்கு உயிர் கொடுத்து உரசவிட்ட அந்தக் குரல் பறைசாற்றியது. பரமு அக்கா ஒரு லோக்கல் நியூஸ்பேப்பர் போல, நாட்டில் நடக்கிற சங்கதியைவிட பக்கத்து வீட்டில நடக்கிற சங்கதி யள்தான் அவள் பேச்சில் பெருமளவில் அடிபடுவது வழமை. "வாங்கோ பரமுக்கா, இண்டைக்கு நேரத்தோடயே சாப்பாட்டுக் கச்சேரி முடிஞ்சுது போல" என்றவாறு வரவேற்றாள் திவ்யாவின் தாய் கனகம்.

வாய் மேலுக்கு வரவேற்றாலும் "இந்த மனிசியின்ர வாயிலையும் கண்ணிலையும் என்ர குடும்பம் பட்டிடக் கூடாது" என்ற விழிப்பு ணர்ச்சி, அளந்து விடப்பட்ட கனக த்தின் வார்த்தைகளில் தெரிந்தது.

"அதைவிடு பிள்ளை! உதெல் லாம் வழமையான சங்கதிதானே, பின்னேரம் ஒரு அநியாயமல்லே கேள்விப்பட்டன், அதுதான் மனசு கிடந்து கொதிக்குது. நீ சாப்பாட்டுக் கதை கதைக்கிறா" என்று இழுத்தாள்.

இழுவையின் பலம் விஷயத்தின் கனம் பெரியது என்று காட்டியது. "புதிர் போடாதேங்கோ, எனக்குப்

பொறுமை போதாது நேரா விசயத்தைச் சொல்லுங்கோ!" என்று கனகம் அவசரப் படுத்தினாள்.

"தின்னவேலிக்கையில்லோ ஒரு கொலை நடந்திருக்கு" என ஆரம்பித்து தொடர்வதற்குள் "தின்னவேலிக்கையோ" என்ற கனகத்தின் குரல் இடைமறித்தது.

"ஓமோம், அதுக்கதான் ஒரு பெட்டையப் புருசன்காரன் படுக்கையில வைச்சு வெட்டிக் கொலை செய்து போட்டு பிறந்த மேனியா விட்டிட்டு ஓடிட்டான். சண்டாளன் சாதிவிட்டுச் சாதி காதலெண்டு கட்டிப்போட்டு படுக்கையில வைச்செல்லே வெட்டியிருக்கிறான்" என்றவாறு தொடர்ந்தவளை செய்தியின் சுமை தாக்கியோ அல்லது "காதல்" என்ற சொல் தாக்கியோ விறைத்துப் போன கனகத்தின் நிலை நிறுத்த வைத்தது.

"என்ன பிள்ளை விறைச்சுப் போனா,... இப்படித் தான் நானும் விறைச்சுப் போனன். உவள் எங்கட கமலா இல்லையே, அவளின்ர வீட்டக்கு முன்னாலதான் சம்பவம் நடந்தது. அவள்தான் பார்த்திருக்கிறாள்" என்றவளை

"ஏனக்கா, ஏதும் சீதனப் பிரச்சனையே,..." என்று கனகம் இடைமறிக்க "நீ வேற பிள்ளை இப்பவெல்லாம் காதலிக்கிறதுகள் ஏதோ பெரிய வேலை செய்கிற

## உதிர் பூக்கள்

முன்னதாய் சருகாகி
சாவடைந்தவைகளுடன்
சங்கமமாகிறது
சில உதிர்பூக்கள்-
விழுதுகளருகே
வேதனையோடு...!
நேற்று
மொட்டு முட்டியது
மலர...
இன்று மலர்
மலர்ந்திருக்கிறது
மணம் வீச....
நாளை சருகு
உலரும் உரமாக.....!!!
தேடி வரும் தென்றலின்
தீண்டல்,
பாடிவரும் பனிதுளியின்
பார்வை,
சாடி வரும் சூரியனின்
கதிர்ப்பு,
ஓடி வரும் தண்ணீரின்
தடவல்,
எல்லாம்
ஆத்ம சாந்திக்கான
அனுசரணையானது....!!!

-ஓ.பா.தீபச்செல்வன்

மெண்டு உடனயே கல்யாணம் கட்டாமலே குடும்பம் நடத்த வெளிக்கிடுதுகள். பிறகு என்னவோ ஏதோவெண்டு கல்யாணத்தைக் கட்டுதுகள்.

காதலிக்கேக்கை எந்தப் பொடிச்சியாவது வேலை கீலை செய்கிறானோ? என்னை வைச்சுக் காப்பாத்துவானோ எண்டு பாக்குது களே? தோலையும் தோரணை யையும் எல்லோ பாக்குதுகள். படங்களில வாற காதல் மாதிரி பெடியள் இரவல் இல்லாட்டி வாடகையெண்டு வாகனங்கள்ள மினுக்க, அதைப்பாத்திட்டல்லே மயங்கிப் போய் விழுந்து போகுது கள். இவனும் அப்படித்தான் வேலை யில்லாத பெடியன், அவன் உந்தக் "கான்போன்" வைச்சிருக்கிரதைத் தான் வேலையாச் செய்தவன்.

உவள் பெடிச்சி பெரிசாகி அந்தக் கொண்டாட்டம் நடக்கேக்க, சோட்டனை சோடிக்கிறனெண்டு அவடத்துப் பெடியளோடை சேர்ந்து மறுசாமத்தியம் வரமுதலே அவ ளைக் கர்ப்பமாக்கிப் போட்டானாம். பிறகு கைவிடப் பார்த்தான். முடியே ல்லயெண்டுதான் கட்டினவன்.

பிறகென்ன ஆசையறுபது மோகம் முப்பதெண்டு எல்லாம் அடங்க, ஒரே குடியும் பெட்டைக்கு அடியும் எண்டாகிப் போச்சு. நேற்று ராத்திரியும் இதே கதைதானாம். பெட்ட கத்தினது கேட்டதாம், வழமையான கதையெண்டு ஒருத் தரும் போகேல்ல. அவன் கொலை செய்து போட்டு விடிய முன்னமே போட்டானாம். பகல்முழுக்க பெட்டைய வெளிய காணாமக் கமலாவும் பக்கத்துவீட்டுக் காரியும் போய்ப்பார்த்திருக்குதுகள்.

ஓரு பொட்டுத் துணியுமில்லாம இரத்தச் சேத்துக்குள்ள பெட்டை கிடந்திருக்கு. இவள் பாயால இழுத்து மூடிப்போட்டுக் குளறிய டிச்சுக் கொண்டு வந்திட்டாள். இதுதான் நடந்தது" என்று சொல்லியவாறு மூச்சு வாங்கினாள் பரமு அக்கா.

சம்பவம் வெளியே எங்கே நடந்தாலும் அதன் அடிப்படை "புரியாத பருவத்துக் காதலே" என்ற நிஜம், கனகத்தை இன்னும் கோரமாய்த் தாக்கியது. விக்கித்துப் போய் நின்றாள்.

-செல்வோம்

**குளித்தபின் கைகால்களில் உப்பு படர்வது எதனால்?**

குளித்த பின் கைகால்களில் உப்பு படர்வது என்பது எல்லோருக்கும் நிகழக்கூடிய நிகழ்வு அல்ல. கிணற்று நீர் கடின நீராக இருந்து, பயன்படுத்தப்பட்ட சோப்பின் தரம் உடலுக்கு ஒவ்வாத மாறுபட்ட மென்கார விகிதம் கொண்டிருந்தால் தோலின் மீது உப்பு படர்வது சாத்தியம்.

# ஓவியமும் காவியமும் - 08

உங்கள் கவிதைக்கான முகவரி
72/28, பணிக்கர் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
முடிவுத்திகதி 20.05.2006



ஓவியமும் காவியமும் - 07

பட்டினி தேசத்துக்கு – உலகின்
பட்டயக் காரனின் உதவிகள் இவை!
கோக்கும் பீசாவும் கொடுத்தவர்கள்
கோடீஸ்வரர்களாகி விட
கொண்டவர்கள் உண்டு முடிய
மீண்டும் பட்டினியில் ....
இன்னொரு NGO வின் வரவிற்காக...
-சஜீபன்

பணிசுக்குள் நசுங்கும் சலாட் போல்
உதவும் அமைப்புக்களால் நசுங்குது
உழைக்கும் ஜீவன்கள்...
உதவி என்ற பெயரில்
கடினப்பட்ட இதயங்கள்
மலினப்படுத்தப் படுகின்றனவோ...!
-இ.ஜெயபாலன், யாழ்ப்பாணம்.

துறவி போல்தான் தெரிகிறது
ஆனாலும்
துறக்க இன்னும் இருக்கிறது...
எனினும்
முடியவில்லை...
ஆகாரமின்றி ஆதாரமேது....!
-க.கவிதா, கிளிநொச்சி

வளிப்பயணத்தில்
வயிற்றுக்குக் குறைவில்லை...
வறண்ட தொண்டைக்கும் சிக்கலில்லை...
வெயிலடித்தால் நிழலுக்கும் பஞ்சமில்லை..
ஓய்வெடுக்க பஞ்சணைக்கும் பங்கமில்லை..
ஒருகல்லில் ஒன்றல்ல நான்கு மாங்காய்கள்!!!
-வி.காளமேகம், உடுவில்



இருந்ததெல்லாம் சுனாமி சுருட்ட
இருப்பதுவோ ஊசலாடும் உயிர் மட்டும் தான்!
அரவணைக்க வந்தவர்கள்
அள்ளி அள்ளி தந்ததில்
துயரச் சுமை குறைந்தது உண்மைதான்-ஆனால்,
உணவுச் சுமை கூடிவிட்டதோ....!?
-வே. சுப்பிரமணியம், வெள்ளவத்தை

● கட்டுரை

# கற்பகதரு பனையின் பயன்கள்

எங்கள் யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்கே தனிப்பெருமை கொடுக்கும் கற்பகதரு பனை. இலங்கை போன்ற கடன் பெற்றே வயிறு கழுவும் வளர்முக(?) நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியின் முதுகெலும்பாக அமைய வேண்டிய பனை அற்ப ராணுவ நலன்களிற்காக ஒழிக்கப்படுகின்ற அவலம் ஏன்? எங்கள் பாடத்திட்டத்தில் வெறும் நுனிப்புல்லாக அங்கொன்றும் இங்கொன்றுமாக கண் துடைப்புக்காக அமைந்துவிடக் காரணம் என்ன? அதுவும் யாழ்ப்பாணத்தை அண்டி மையம் கொண்டதுதான் பனைவிட்ட தவறா...? சொந்தக் குடாநாட்டு மக்களால்க் கூடச் சீராக முகாமை செய்து பனைவளம் பயன்படுத்தப்படாத அவலம் இன்னும் தொடரவேண்டுமா? இவை உங்கள் உணர்வுகளைத் தூண்டும் வெற்று வாக்கியங்கள் அல்ல. ஆழச் சிந்திக்க வேண்டிய கடப்பாடுடைய உங்கள் சிந்தனைக்காக...

பர்மா, இந்தியா, இலங்கை ஆகிய இடங்களில் பரவித் தன்னிச்சையாக இப்பனைகள் பெரும்பாலும் வளர்கின்றன. இலங்கையின் வடபகுதியில் யாழ், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் கிழக்கே திருமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் 99 சதவீதப் பனைமரப் பரம்பல் காணப்படுகிறது. மிகுதி ஒரு சதவீதத்துக்கு குறைவான அளவே அம்பாந்தோட்டையிலும் மொனராகலையிலும் காணப்படுகிறது.

## பனையின் வளர்ச்சிப்பகுதிகள்

பனைவிதைகள் முளைத்து சிறு மரமாக வளரும் வரை (1-8 வயது) அவை எவ்வித பயனையும் அளிப்பதில்லை. வளர்ச்சி மந்தமானது. பாதுகாத்துப் பேணல் அவசியமான பருவம் இது.

இரண்டாம் வளர்ச்சிப் பருவம் (8-18 வயது) குழந்தைப் பருவத்திலிருந்து பூந்துணர் அரும்பும் வரை இடம்பெறும் வளர்ச்சி துரிதமானது. இப்பருவத்தில் ஓலைகளை மாத்திரம் கொய்து கால்நடைத்

சி.ஜனகன் (யாழ் இந்துக் கல்லூரி)

தீனியாகப் பயன்படுத்துவது மாத்திரம் ஆரோக்கியமானது.

அடுத்த வளர்ச்சிப் பருவம் (18-35 வயது) பாளைவிட்டுப் பூத்துக் காய்க்கும் பருவம். இப்பருவத்தில் கருப்பநீர், கள்ளு, நுங்கு ஆகியவற்றை மரம் உயர மாக முன்பிருந்தே பெற்று அவற்றைப் பெறும் போது உண்டாகும் செலவைக் குறைக்கலாம்.

35 வயதிற்கு மேல் கருப்பநீர், கள்ளு, நுங்கு ஆகியவற்றைப் பெறுவதைத் தவிர்ப்பது சிறந்தது.

இறுதிப் பருவம் முழுவளர்ச்சிப் பருவம். காய்க்கும் திறன் குன்றும். தறித்து வீடு கட்ட உபயோகிப்ப தோடு மட்டும் நிறுத்தாது புதிய நாற்றுக்களை நாட்டி தோப்புக்களை உருவாக்க வேண்டும். நாட்டின் வளத்தைப் பேணவேண்டும்.

## இது கதையல்ல நியம்...



19ஆம் நூற்றாண்டில் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் 1891ம் ஆண்டு மாத்திரம் வடபகுதிப் பனைகளிலிலுந்து மாத்திரம் 9,028 அந்தர் தும்பும் 1892ல் 12,177 அந்தர் தும்பும் ஏற்றுமதி செய்து பெற்ற வருமானம் முறையே 1,22,584 ரூபாவும், 1,66.542 ரூபாவும் ஆகும். வெறுமனே இரண்டு வருடங்களில், வெறுமனே தும்பு மாத்திரம் எங்கள் மக்கள் சதங்களில் தங்கள் வாழ்வை நகர்த்திய 115 வருடங்களின் முன்பு பெறப்பட்டது. சீராக முகாமை செய்து வந்திருந்தால் இன்று எம் யாழ் குடாநாடு பெற்றிருக்க வேண்டிய ஏற்றுமதி வருமானம் யாது..? வெறுமனே வாயைப் பிளக்கா

ரீகள். சிந்தித்துப் பாருங்கள். மேலும் இலங்கையின் சீனித் தேவையில் தன்னிறைவை ஏற்படுத் தும் நோக்குடன் 1961 இல் பொலி கண்டியில் ஓர் சீனித்தொழிற்சாலை நிறுவப்பட்டது. ஆயினும் இம்முயற் சியில் சில தீயசக்திகள் அடிக்கடி குறுக்கிட்டதால் அதற்கான மூடு விழாவும் நடந்தேறியது பெரும் துரதிஸ்டம்.

இலங்கைக்குத் தேவை யான சீனித் தேவையை இன்று நிறைவு செய்ய இன்றுள்ள பனை யின் 50% மாத்திரமே போதுமானது. முழுமையாகப் பெறக்கூடிய பதநீரை நவீன விஞ்ஞான தொழில்நுட்பச் சாதனங்களின் மூலம் அரசு செயற் படுத்திக் கொண்டால் 50% அதிக மான பனஞ்சீனியை வெளிநாடுக ளுக்கு ஏற்றுமதி செய்யலாம்.

## "கள்" உருவாக்கத்தில் நொதித்தல் தாக்கத்தின் செல்வாக்கு

தென்னை, பனை, கித்தூள் முதலிய தாவரங்களின் பூந்துணர் களில் (Inflorescences) இருந்து கள் பெறப்படுகிறது. இத்தாவரங் களின் சாறு பூந்துணர்களில் இருந்து முட்டிக்குள் விழும்போது நொதிப் படைந்த நிலையில் இருப்பதில்லை. அதில் சிறிதளவேனும் அற்க கோலோ அல்லது அமினோ அமில ங்களோ காணப்படமாட்டாது. அது பெருமளவு சுக்குரோசு கொண்ட தாக இருக்கும்.

சுண்ணாம்பு பூசி அல்லது Hal Bark அல்லது Ankenda இலைகள் கொண்ட முட்டிகளில் சேகரித்தால் சாறு நொதிப்படை யாமல் தடை செய்யலாம். இம் முறையே பனங்கட்டி செய்வதற்கு கையாளப்படுகிறது.

இவ்வாறான விசேட சிர த்தை எடுக்கப்படாவிட்டால் சாற்றி லுள்ள வெல்லம் அற்ககோலாகவும், அமினோ அமிலங்களாகவும் மாற்றப்படும்.

காற்றில் காணப்படும் நுண் ணங்கிகளாகிய மதுவத்தினாலேயே அற்ககோல் பெரும்பாலும் உண்டாக் கப்படுகிறது.

நுணுக்குக் காட்டியினூடாக ஒரு மதுவக்கலத்தை உற்று நோக்கின் அது முட்டை வடிவமாக இருக்கக் காணலாம். இம் மதுவக் கலங்கள் அரும்புகளை (Buds) உண்டாக்கி இனப் பெருக்கம் செய் கின்றன. இவ் அரும்புகள் தாய்க் கலத்தை விட்டு நீங்கி திரும்பவும் இனப்பெருக்கம் செய்யவல்லன.

ஆகையால் ஒரு மதுவக் கலம் சில மணி நேரங்களில் சார் பான ஊடகம் ஒன்று இருக்கும் போது பல்லாயிரக் கணக்கான மதுவக்கலங்களை உண்டு பண்ண

வல்லது. இப்படிப் பல்லாயிரக் கணக்கான மதுக்கலங்கள் ஒன்று சேர்ந்து இருக்கும் போது அதனையே நாம் மண்டி என்கிறோம்.

சுக்குரோசு கொண்டுள்ள இத்தாவரங்களின் சத்து ஓர் ஊடகமாகத் தொழிற்படுகின்றது. எல்லா மதுவக்கலங்களும் முட்டை வடிவானதல்ல. வடிவமும் இனப்பெருக்க முறைகளும் மிகவும் வேறுபட்டதாக அமையலாம். ஒரு மதுவக்கலம் நேரடியாக ஒரு சுக்குரோசு மூலக்கூற்றை அனுசேபத்திற்குச் சேர்த்துக் கொள்ள மாட்டாது. இதனால் அது Invertase என்னும் ஒரு புற நொதியத்தால் சுரந்து சுக்குரோசுவை ($C_{12}H_{12}O_{11}$) குளுக்கோசு ($C_6H_{12}O_6$) பிரற்றோசு ($C_6H_{12}O_6$) என்னும் இரு எளிய வெல்லக் கூறுகளாக நீர்ப்பகுப்பு அடையச் செய்கின்றது.

குளுக்கோசு மூலக்கூறுகள் கலத்தினுள் எடுக்கப்பட்டு அதன் முதலுருவை அடைந்ததும், பல் உயிரிரசாயனத் தாக்கங்களின் ஊடாக அற்ககோலாகவும், காபனீரொட்சையிட்டாகவும் மாற்றப்படுகின்றன.

இத்தாக்கங்களின் போது வெளிவரும் சக்தியின் ஒரு பகுதி அதிசக்தி வாய்ந்த பொசுபேற்று ஆகிய அடினோசீன் திரி பொசுபேற்றுவில் சேகரிக்கப்படுகிறது.



குளுக்கோசு அற்ககோலாக மாற்றும் தாக்கங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு நொதியங்களால் ஊக்குவிக்கப்படுகின்றது. மதுவக் கலமொன்றில் இத்தாக்கங்களுக்குத் தேவையான நொதியங்கள் யாவும் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

நொதித்தலின்போது எதையில் அற்ககோல் மட்டும் உண்டாவதில்லை. வேறு அற்ககோல்களும் உதாரணமாக Butyl, Amyl alcohol களும் உண்டாகின்றன. ஆனால் இவற்றின் செறிவு Ethyl alcohol இன் அளவுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவானது. அருந்தும் கள் வெறிப்பதற்கு காரணம் மதுவத்தால் உண்டான அற்ககோலாகும்.

கள் நொதிக்கும் போது காபனீரொட்சைட்டு வாயுக்குமிழிகளாக வெளியேறுவதை நாம் கண்ணால் காணலாம். இதனால் நாம் கள்ளுள்ள போத்தல்களை

தக்கையால் மூடிவைக்க முடிவ தில்லை. வெளிவரும் $CO_2$ அதிக ளவு அமுக்கத்தை உண்டு பண்ணு வதே காரணமாகும்.

கள்ளைப் போத்தல்களில் அடைத்து விநியோகம் செய்யும் சிறு தொழிற்சாலைகளில் பாஸ்சல் முறை [Pasteur ization] மூலம் மதுவக் கலங்கள் இறக்கச் செய்யப் படுகின்றன.

எவ்வளவு சதவீத அற்க கோல் உருவாக்கப்படுகிறது. என்பது மதுவ இனத்தைப் பொறுத் ததொன்றாகும். சாதாரண நிலையில் கள் நொதிக்கும் போது பல இனங்களைச் சேர்ந்த மதுவங்கள் காணப்படுகின்றன. அவற்றில் சில குறைந்தளவு நொதிக்கும் தன்மையும், சில அதிகளவு நொதிக்கும் தன்மையும் கொண்டன.

ஆகையால் சாதாரண நிலையில் எவ்வளவு சதவீத அற்ககோல் உண்டாகுமெனவோ, நொதிக்கும் வேகத்தையோ திட்டவட்டமாகக் கூறமுடியாது. எனவே பியர் பிரண்டி போன்ற ஒரு பானமாக கள்ளையும் போத்தல்க ளில் அடைத்து விநியோகம் செய்ய விரும்பின், கள் நொதித்தலைக் கட்டுப்படுத்தல் அவசியமானது.

## சீனி உற்பத்தி

யாழ் மாவட்ட அபிவிருத்தியில் பெரும் பங்காற்றக் கூடிய தும் நம்மவரால் சீராக இனம் காணப்படாததுமான பனையிலிருந்து குறைந்தசெலவில் பனஞ்சீனி உற்பத்தி செய்தல்பற்றி ஆராய்வோம்.

முதன் முதலில் சீனாவில் கரும்பிலிருந்து சீனி உற்பத்தியாக் கப்பட்டது. பிற்காலத்தில் பீற்றுட் கிழங்கிலிருந்து சீனியைப் பெறலாம் எனக் கண்டு பிடிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் பீற்றுட்டி லிருந்து 8-10% அளவு வரையி லேயே சீனியைப் பெறக்கூடியதாய் இருந்தது. தற்போது பிறப்புரிமைப் பொறியியலின் கலப்புப் பிறப்பாக்கம், மற்றும் தேர்வு முறைமூலம் 8-22% வரையிலான சீனியை பீற்றூட்டி லிருந்து பெறுவது சாத்தியமாயுள் ளது. ரஸ்யா, அமெரிக்கா, ஐரோப் பிய நாடுகள் என்பன பீற்றூட்டி லிருந்து தமது சீனித் தேவையை நிறைவு செய்கின்றன. இலங்கையில் சீனி கரும்பிலிருந்து பெறப்படுகிறது. உள்நாட்டுத் தேவையில் 1/3 பங்கு சீனியே இங்கு உற்பத்தியாகின்றது. மிகுதி 2/3 பங்களவு சீனி வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு இறக்குமதியாகின்றது.

இலங்கையின் இயற்கை வளமான பனையிலிருந்து சீனியைத் தயாரிப்பதன் மூலம் சீனித்தேவை யில் பெரும்பாகத்தை நிறைவு செய்வது சாத்தியமாயிருக்கும்.

இலங்கையில் பனஞ்சீனி தயாரிக்கும் தொழிலை ஊக்குவித்

துப் பொருளாதார அபிவிருத்தியை தூண்டப் பின்வரும் வழிமுறைக ளைக் கையாளலாம்.

■ பனஞ்சீனி உற்பத்தியின் ஆரம்ப காலகட்டத்தை அரசு தன் பொறுப்பில் ஏற்கலாம்.

■ மதுவிலக்குச் சட்டங்களை உருவாக்கி கள்ளு சீவுவதைத் தடைசெய்து பதநீர் சீவுவதை ஊக்குவித்து பனஞ்சீனி உற்பத்தி யைப் பெருக்கலாம்.

■ குறைந்த செலவில் பனஞ்சீனியைத் தயாரிக்கக் கூடிய வழிமுறைகளைக் கண்டுபிடிக் கலாம்.

■ நாட்டின் போர்ச்சூழ்நிலை காரணமாக அழிந்தொழிந்த பனைகளிற்குப் பதிலாக புதிய பனங்கன்றுகளை நடலாம்.

## பனஞ்சீனி தயாரிக்கும் முறை

பனஞ்சீனி தயாரித்தல் இரு தொழில் பிரிவுகளையுடையது.

1) சீனி உற்பத்தி சாலையின் வெளிப்புற அலுவல்கள்
2) சீனி உற்பத்தி சாலையின் உட்புற அலுவல்கள்

**வெளிப்புற அலுவல்கள்:**

- பனைகளைத் தெரிதல்
- குத்தகைக்கு எடுத்தல்
- பனைகளில் ஏறி பாளைகளை வரிந்து கட்டி, பின் அடித்துக் கசக்கி பாளையின் உள்ளமைப்பை (கலங்களை) சிதைத்து பாளையின் நுனியை சீவி பதநீர் வடிய வழிவகுத்தல்.
- வடியும் பதநீரைச் சேகரிப்பதற்கு பாத்திரங்களைத் தயார் செய்தலும், வடியும் பதநீரைக் கெடாமல் வைத் திருக்கப் பாவிக்கும் சுண்ணாம்பைச் சேகரித்தலும்.
- வடித்த பதநீரை நாள்தோறும் பனைகளில் ஏறிச் சேகரித்தல்.
- சேகரித்த பதநீரை நேரத்துக்கு நேரம் சீனி உற்பத்தி சாலைக்கு வினியோகித்தல்.
- எரிபோருள் (விறகு) சேகரித்தல்

**உட்புற அலுவல்கள்:**

- பதநீர் கெடாமல் வைத்திருப்பதற் காக கலக்கப்பட்ட சுண்ணாம்பை பிரித்தலும் உலர்த்தலும்.
- விநியோகத்திற்கு தயார் செய்தல்.

சீனி உற்பத்திச் சாலையின் உட்புற அலுவல்களில் உள்ள கட்டங்கள் தவிர்க்க முடியாதவை. ஆயினும் சிறந்த கண்காணிப்பால் செலவை ஓரளவு குறைக்கலாம்.

ஐரோப்பா USA போன்ற நாடுகளில் பின்பற்றுவது போல் முழுமையான பொறிமுறை மயமாக் கல் மூலம் இத்தொழிற் பிரிவில் உண்டாகும் செலவைக் குறைக்க லாம். ஆனால் அதிகளவு முதல் முடங்கிவிடும். மேலும் இன்றைய நிலையில் இது இலங்கையில் பூர்த் தியாகக் கூடிய விடயமுமல்ல.

## உற்பத்திச் செலவைக் குறைத்தல்

சீனி உற்பத்தியில் அதிக செலவை உண்டுபண்ணுவது வெளிப்புற அலுவல்களாகும்.

அதிலும் பனைகளை குத்தகைக்கு எடுத்தல் மற்றும் நாள் தோறும் பாளைகளின் நுனிகளை சீவி பதநீரின் ஊற்றை அதிகரிக்கச் செய்தல், பாத்திரங்களில் சேர்ந்த பதநீரைக் கீழே இறக்குவது என்பன சிரமமான காரியங்களாக உள்ளன.

இப்படியான இக்கட்டான நிலையிலிருந்து தப்புவதற்கு பொறி முறை மயமாக்கல் கொள்கையைப் பயன்படுத்தலாம். வடித்த பதநீரால் நிரம்பப்பெற்ற பாத்திரங்களை பனைகளில் ஏறி இறக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை இல்லாது செய்ய லாம். எவ்வாறெனில் பதநீரைச் சேகரிக்கும் பாத்திரங்களின்அடியில் துளையிட்டு அத்துளைவாயினை இறப்பர் குழாய்களின் உதவியுடன் தொடுத்து அக்குழாய்களை நிலத் திலுள்ள பாத்திரகளில் விடும்போது பதநீரானது படிப்படியாக வடிந்து கீழேயுள்ள பாத்திரத்தினுள் சேகரி க்கப்படும். இதன் மூலம் செலவை மிகக் குறைக்கலாம்.

யாழில் பனைவளத்தை உச்சஅளவில் பயன்படுத்துவதில் எதிர்நோக்கும் ஓர் வலிமையான சவால் பனை ஏறிஇறங்கல். தொழிலாளர்களின் பற்றாக்குறை, கைகால்கள் நேராக, நெஞ்சு வலிக்க தினமும் பனைஏறி இறங்குவது ஒரு சிரமமான தொழில் மட்டுமல்ல, உயிருக்கு ஆபத்தான தொழிலும் கூட. எனவே பனை ஏறிஇறங்கும் தொழிலை இலகு படுத்த அதனையும் பொறிமுறை மயமாக்கல் அவசியமாகிறது.

இயற்கை நமக்களித்த காமதேனுதான் இந்தக் கற்பக தருக்கள். இவற்றை சரியான வளியில் பயன்படுத்துவதன் மூலம் நமது பொருளாதார பலத்தை நாம் மேம்படுத்திக்கொள்ள முடியும்.

பனைகளை காப்போம். பயன்களைப் பெறுவோம்.

**மனிதர்கள் பலவிதம்... நீங்கள் எவ்விதம்..?**

கோழி மனிதர்: ஒன்றைச் செய்து பலருக்கு பறை சாற்றுபவர்.
ஆமை மனிதர்: ஆயிரம் செய்தாலும் அருளாமல் இருப்பவர்.
நரி மனிதர்: அடுத்தவனை மாட்டிவிட்டு தந்திரமாய் தப்பிப்பவர்.
காக மனிதர்: தாம் பெற்றவை அனைவரும் பெறுகவென வாழ்பவர்.
யானை மனிதர்:வளர்த்தவரையே எட்டியுதைக்கும் நன்றி கெட்டவர்.

அவளது
கன்னங்கள் மீது
கரங்களால் தடவி
கண்கள் கலக்க
உதடுகளைக் கவ்வி
ஒரு முத்தம்....
'அப்பாடா'
அது ஒரு
ஆனந்த நிமிஷம்...
'விடுடா கள்ளா'
என்றவள்
நதியைப் போல
நெளிந்தாள்.

3

கு.பா.தீபச்செல்வன்
யாழ் பல்கலைக் கழகம்.

அது எங்கள்
நண்பர் மாநாடு..
அரசியல், சினிமா,
விளையாட்டு என்று
அரட்டைகள்
நிகழ்வது வழமை...
அன்று என் காதல் பற்றிய
கருத்தரங்காக
மாறியிருந்தது....
அழகன்
என்மீது அதிக
அன்புடையவன்;
நகைச்சுவையான பேச்சு.

# தென்றல் வரும் தெரு

கவிதைத் தொடர்

தெவிட்டாத கள்ளை
மீண்டும் சுவைக்க
எட்டிப் பிடிக்க முயற்சித்து
'பிரியா.....'என்றது
தவிப்புக் குரல்
தாகத்தோடு.
அது வகுப்பறை
அப்போது சிறு உறக்கம்
நண்பர்களுக்கு
நிலவரம் தெரிந்தது...
காதல் கலவரம்- ஒன்று
கனவில் நடந்தது...
காட்சி அப்போதுதான்
என்கும் புரிந்தது.

முருகன்
அதிகமாக கோபம்வரும்;
என்மீது அக்கறை அதிகம்.
கருப்பன்
வெள்ளை மனதுடையவன்;
எப்போதும் கூடவே
இருப்பான்.
வேலவன் என்னோடு
படிப்பில் போட்டி
பழக அவனும் நல்லவன்.
ஒவ்வொருவரும்
என் காதலுக்கு
புகழுரை வழங்கியபடி....
வகுப்பறை வாசலில்
அவள்......

(இன்னும் போகலாம்....)

சினிமா விமர்சனம்.

# மெர்க்குரி பூக்கள்

தலைப்புக்கும் படத்திற்கும் என்ன சம்பந்தம் என்ற கேள்விகள் எழும் இந்நாளில் பொருத்தமான கவித்துவமான தலைப்புடன் வெளி வந்துள்ள படம்தான் இது.

(மெர்க்குரி என்றால் என்ன, அதன் இயல்பென்ன எனத்தெரியாத வர்கள் சிலவேளை குழம்பக்கூடும். இரசம் எனப்படும் திரவ உலோக இரசாயனப் பொருளின் ஆங்கிலப் பெயரே மெர்குரி. இது சிந்துப்பட்டால் தனித் தனி துளிகளாக, இலகுவில் ஒன்று சேராது காணப்படும்.)

இதுவும் ஒரு காதல் கதைதான் என்று சராசரி லிஸ்டில் சேர்க்க முடியவில்லை.

நினைச்சது கிடைக்கலையா? கிடைச்சதை நினைச்சுக்கோ! இந்த பழைய மொழியை புதிய வழியில் சொல்லியிருக்கிறார் இயக்குனர் எஸ்.எஸ்.ஸ்டான்லி.

பெற்றவர்களின் வற்புறுத்தலுக் காக மாலை மாற்றிக் கொள்கிறார் கள் ஸ்ரீகாந்தும் மீராஜாஸ்மினும். முதலிரவன்றே ஒருவரையொருவர் 'உன்னை பிடிக்கவில்லையென்று' கூறி தாம்பத்யத்தை தள்ளி வைக்கி ன்றனர். விருப்பத்துடன் பிரிந்து இருக்கும் இருவருக்குள்ளும் ஒரு கட்டத்தில் காதலும் ஆசையும் வேர் விட, விதியோ இவர்களின் வாழ்க் கையில் வெந்நீரை ஊற்றுகிறது. பாதியில் நின்றுபோகும் இவர்களின் இல்லறம் பதினான்காம் ரீல்களில் நல்லறம் ஆவதே கதை.



ஆரம்பமே நாயகன் நாயகிக்கு கல்யாணம் முடிய அச்சச்சோ காதல், டூயட்டுக்கு தடை போட்டு விட்டாரே இயக்குனர் என்று நினைத் தால் கல்யாணத்துக்கு பின் வரும் காதலை கதாபாத்திரங்கள் மூலம் இயக்குனர் மொட்டவிழ வைக்கும் காட்சிகள் அடடே போடவைக்கிறது.

தன் பழைய ரூ வீலரை டொயா ட்டா காராக நினைக்கும் ஸ்ரீகாந்த், மீராஜாஸ்மினுக்காக அதனை சில நூறுக்கு விற்றுவிட்டு விரக்தியாக பார்க்கும்போதும், மீராஜாஸ்மினுடன் சேர்ந்து இல்லறத்தில் ஈடுபட, ஓடும் பேருந்து, லொட்ஜ், பஸ் ஸ்டாண்ட் என இடம்பொருள் பார்க்காமல் துடிக்கும்போதும் நடிப்பில் புதுபக்குவம் பொங்கி வழிகிறது.

'சண்டக்கோழி' படத்தில் தியேட்டரில் விசிலடித்து அலம்பல் பண்ணுவாரே அதே காட்சியை ஞாபகப்படுத்துவது போன்ற காட்சியில் மீராஜாஸ்மினை அறிமுகப்படுத்தும் போதே நம் எதிர்பார்ப்பு பொசுக் கென்று சுருங்குகிறது. ஆனால், அடுத்தடுத்த காட்சிகளில் புத்தாடை உடுத்தி நிற்கிறது மீரா ஜாஸ்மினின் நடிப்பு.



மின்விசிறியின் காற்றில் முழங்காலுக்கு மேல் ஆடை பறப்பதை தடுக்க கால்களில் போர்வையை சுற்றி பாதுகாப்பு வளையம் போடும்போது ரசனை.

அங்கங்கே வந்து அவசியமில்லாமல் பேசிக்கொண்டிருந்தாலும், ஒரேயரு வசனத்தில் உள்ளத்தை கலங்கடிக்கிறார் கருணாஸ். தன் மனைவியை நண்பன் ஸ்ரீகாந்துக்கு அறிமுகப்படுத்துகிற நேரத்தில், "காதலிச்சேன். கடைசியில்தான் தெரிஞ்சது அவளுக்கு கால் இல்லைங்கறது. கால் இல்லைங்கறதுக்காக காதலிச்சவளை விட்டுட முடியுமா?" என்று சொல்லும்போது ஹீரோவுக்கு நிகராக கைதட்டல்களை அள்ளிக்கொள்கிறார்.

மெலடிகளால் மனசை திருடுகிற கார்த்திக்ராஜா இந்த படத்தில் மலடியாகியிருக்கிறார். இசையில் பொறுப்பற்ற தனம் மட்டுமே 'மெட்டு' கட்டி நிற்கிறது.

இன்னொரு படத்தை நினைவுபடுத்தும் ஹீரோயினின் அறிமுகக் காட்சி, நாயகி எப்போது திருந்துகிறார் என்று தெளிவாகாதது, ஊனமுற்ற பெண்ணுடன் உடலுறவு வைத்துக்கொள்ள முடியாது என்னும் கருத்து, வசதியாக இருக்கும் மீராஜாஸ்மினின் தந்தை தன் ஒரே மகளின் கல்யாணத்துக்கு கழுத்து நிறைய நகைபோட்டு அழகு பார்த்திருப்பார். அப்படியிருக்க கணவனின் கஷ்டகாலத்தில் மீராஜாஸ்மின் சில்லறை காசுகள் மட்டுமே தருவது போல காட்டுவது- இப்படி நிறைய ஓட்டைகள் அடைக்கப்பட்டிருந்தால் படத்தின் ஆழமான அழகான ஸ்கிரிப்ட்டுக்காக இயக்குனரை கட்டிப்பிடித்து பாராட்டியிருக்கலாம்.

சிதறினால் சேர்த்து கோர்க்க முடியாத மெர்க்குரியை அழகிய திரைக்கதையால் மாலையாக கோர்த்திருக்கிறார் ஸ்டான்லி!

மாலையின் இடையில் அங்கங்கே விழுந்திருக்கிற முடிச்சுகள் மட்டும்தான்... சின்ன நெருடல்!

# சரியா...? தப்பா...?

சித்திரை மாதத்தில் தானா தமிழரின் புத்தாண்டு பிறப்பு வருகிறது என்பது சர்ச்சைக்குரிய விடயமானாலும் பல ஆண்டுக ளாக இதையே நமது சந்ததியினர் புத்தாண்டு பிறப்பாய் அங்கீகரித்து கொண்டாடி வருகிறார்கள்.



தமிழரின் புத்தாண்டு சித்திரை யிலல்ல, தைமாதத்தில் தைப்பொங் கல் தினத்தில்தான் கொண்டாடப்பட வேண்டுமென்று தமிழறிஞர்கள் பலர் பல்வேறு ஆய்வுகளின் பின் முடிவெ டுத்து அறிவித்திருந்தனர்.

(அது பற்றி விரிவான ஆய்வுக் கட்டுரை ஒன்றை எமது கடந்த இதழில் பிரசுரித்திருந்ததை வாசகர்கள் அறிவீர்கள்)

ஆயினும் பழகிய பழக்கத்தை மாற்ற முடியாது தொடர்ந்தும் நாம் ஆரியரின் புத்தாண்டு தினத்தையே அனுசரித்து வருகிறோம்.

பரவாயில்லை. ஆனால் அத்தி னத்தையே தமிழரின் புத்தாண்டு தினம் என நம்பும்படியாக மக்களை சில பத்திரிகைகள் தவறான வளிக்கு திசை திருப்புவதுதான் ஆட்சேபனைக்குரியது. கவலைக் குரியது.

சித்திரைப் புத்தாண்டு தினத் தன்று யாழ் நகரிலிருந்து வெளி வரும் பிரபல நாழிதள் ஒன்று தன் ஆசிரியர் தலையங்க வாழ்த்துச் செய்தியில் பின்வருமாறு குறிப் பிடுகிறது.

*"இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழன் வானவியல் சாஸ்திரத்தில் விற்பன்னனாக இருந்தமை ஒன்றும் புதுமையல்ல. காலத்தை அளவீட்டால் நேர்த் தியாக வகுத்த அவனின் விஞ்சிய திறமை கண்டு நவீன விஞ்ஞானமே ஆச்சரியத்தில் மூழ்கி நிற்கின்றது.*

*சூரியன் காலையில் நேர் கிழக்கே உதித்து, நண்பகலில் சரியாக நேர் உச்சிக்கு வந்து, மாலையில் நேர் மேற்கே அஸ்தமிக்கும் காலம் வருடத்தில் இரண்டு. அவை விஷு" என்று சொல்லப்படும். அவற்றுள் இராசி களில் முதலாவதான மேட இராசிக் குள் சூரியன் பிரவேசிக்கும் மேட விஷு" புண்ணிய நாளே தமிழரின் புத்தாண்டுத் தினமாகும்.*

*காலச்சக்கரத்தை அறுபது வருடங்கள் கொண்ட தொகுதியாகப் பிரித்தான் தமிழன். அதில்*

*இருபதாவது வருடமாக 'விய' பிறக்கிறான்.*

*ஒவ்வொரு ஆண்டையும் ஆறு ருதுக்களாகவும் இரண்டு அயணங் களாகவும் தமிழன் வகுத்தான். சூரியன் மேட இராசியில் சஞ்சரிக்க – சித்திரை பிறக்கும் - இக்காலம் உத்தராயணம். இது சூரியன் வடக்கே நகரும் காலம். மற்றையது சூரியன் தெற்கே நகரும் தட்சரா யணம். அது ஆண்டின் பிற்பகுதி யில் வருவது.*

*இயற்கை அன்னையின் சொத் தான தாவர வர்க்கங்கள் விருட்ச மாகப் புத்தாடை புனைந்து, புதும ணம் கமழ, தரணியெங்கும் புதுப் பொலிவும். புதுத்தோற்றமும், புத்தெழுச்சியும், புத்தூக்கமும் மிழிரக் காட்சி தரும்போது, அது தனது வாழ்வுக்கும் புத்துயிர்ப்பு ஊட்டும் எனக் கருதி புது வாழ்வு க்கான காலமாக – புத்தாண்டாக - இவ்வேளையைத் தமிழன் வகுத்துக்கொண்டதில் ஆழமும் அர்த்தமும் உண்டல்லவா?''*

இங்கு சொல்லப்பட்ட விளக்கங் களில் எதுவும் தமிழனால் உருவாக் கப்பட்டதாவோ செய்யப்பட்டதா கவோ தெரியவில்லை. எல்லாமே வடமொழியில் ஆரியர்களால் உரு வாக்கப்பட்டவையே.

மேற்படி விளக்கங்களில் காணப் படும் காலக்கணக்கீடு தொடர்பான பதங்கள் தமிழில் இல்லாமல் வடமொழியில் இருப்பதே எமது கூற்றுக்கு போதிய ஆதாரமாகும்.

அப்படியிருக்கையில், இந்த காலக்கணக்குகளை தமிழன்தான் கண்டுபிடித்தான். எனவே சித்திரை வருடப் பிறப்பு தமிழருக்குரியது என எப்படி சொல்ல முடியும்?

இதிலுள்ள சரி, தவறை தமிழறிஞர்கள்தான் சொல்ல வேண்டும்.

## கல்வி

அறியாமை இருள் நீக்கும்
அரும் பெரும் சுடர் விளக்கு
இன்று,
பணத்தை வாரியிறைக்கும்
இலத்திரனியல் இயந்திரமாகி
ஏழ்மையின் வறுமையை
எச்சரிக்கிறது....

## கைத் தொலைபேசி

உலகையும் உறவையும்
உள்ளங்கையில் அடக்கி
உன்னையும் என்னையும்
அடிமையாக்கிக் கொண்ட
உயிரற்ற சடப்பொருள்...

-சுது, யாழ்ப்பாணம்

● சிறுகதை

# அவர்கள் சதையால் ஆனவர்கள்...

"அவர்கள் சதையால் ஆனவர்கள்."

"சதையா?"

"ஆம்! முழுக்க சதையால் ஆனவர்கள்."

"நிச்சயமாகத் தெரியுமா? வெறும் சதையா?"

"எந்த சந்தேகமுமில்லை. கோளின் பல்வேறு இடங்களிலிருந்து பல சாம்பிள்களை எடுத்து வந்து ரிகோன் அறைகளில் முழுமையாகப் பரிசோதித்து விட்டேன். உள்ளே சதைகளும், விநோதமான குச்சி அமைப்பும், திரவங்களும் தான். அதைத் தவிர ஒன்றுமில்லை."

"இது சாத்தியமில்லாதது. ரேடியோ சிக்னல்கள் வந்தனவே நமக்கு!!"

"உண்மை. அவர்கள் ரேடியோ சிக்னல்கள் பயன்படுத்துகிறார்கள்.

## அறிவியல் புனைகதை

ஆனால் அந்த சிக்னல்களை அவர்கள் உருவாக்குவதில்லை. சிக்னல்கள் சில மெஷின்களிலிருந்து வருகின்றன."

"அந்த மெஷின்களை யார் உருவாக்கியது? அவர்களைத் தான் நாம் தொடர்பு கொள்ள வேண்டும்."

"அவர்கள் தான் மெஷின்களை உருவாக்கியுள்ளார்கள். அதைத் தான் நான் உன்னிடம் சொல்ல முயற்சித்துக்



கொண்டிருக்கிறேன். சதைகள் மெஷின்களை உருவாக்கியுள்ளன."

"இது என்ன பைத்தியக்காரத்தனம்? சதைகளால் எப்படி மெஷினை உருவாக்க முடியும்? உணர்ச்சியும் அறிவும் மிக்க சதைகள் இருக்கின்றன என்று என்னை நம்பச் சொல்கிறாயா?"

"ஆம். உணர்ச்சி உயிர்கள், இந்த செக்டாரில் அந்த சதைகள் மட்டுமே."

"ஒரு வேளை அவர்கள் 'ஆர்ஹபலி' போன்ற உயிர்களாய் இருக்கக்கூடும். உனக்குத் தெரியும் அல்லவா? கார்பன் சார்ந்த

உயிரினங்கள். அவை தம் வாழ்வில் இந்த சதை நிலையைக் கடந்து செல்கின்றன."

"இல்லை. அதையும் பரிசோதித்து விட்டேன். இவர்கள் சதைகளாகப் பிறந்து சதைகளாகவே இறக்கிறார் கள். முழு பிறப்பு இறப்பு நீட்சியை ஆராய்ந்து விட்டேன். அதிக நேரம் பிடிக்கவில்லை. சதைகளின் வாழ் க்கை நீட்சியின் கால அளவுகள் பற்றி உனக்கு ஏதும் தெரியுமா?"

"எனக்கென்ன தெரியும்? இப்படி சதைகள் இருப்பதையே என்னால்

"உள்ளே மூளை இல்லையா?"

"மூளை இருக்கிறது. ஆனால், மூளையும் சதையால் தான் ஆக்கப் பட்டிருக்கிரது. அதைத் தான் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்."

"என்ன? அப்படியானால்.. சிந்திப்ப தெல்லாம் எது?"

"நீ புரிந்து கொள்ள மறுக்கிறாய்! நான் சொல்வது உனக்கு விளங்கவில்லையா? அந்த மூளை தான் சிந்திக்கிறது. சதை!"

"சிந்திக்கின்ற சதை!! இதை என்னை நம்பச் சொல்கிறாயா?"

மனிதன் தன்னைத் தானே பெரியவன் என எண்ணிக் கொண்டிருக்கிறான். ஆனால் வேறொரு உலகிலிருக்கும் உயிரினம் ஒன்று மனிதனைவிட வளர்ச்சியடைந்திருந்தால் அவை மனித இனத்தைப் பற்றி எப்படி எடுத்துக்கொள்ளும் என்ற அறிவியல் ரீதியிலான கற்பனையின் பின்னணியில் இக்கதை விரிகிறது.

இன்னும் நம்ப முடியவில்லை. அல்லது ஒரு வேளை அவர்கள் 'வெட்டிலி" போன்ற உயிரினமோ? ஒரு பகுதி மட்டுமே சதையாக இருக்கக் கூடும். சதையாலான தலையும் உள்ளே எலக்ட்ரான் ப்ளாஸ்மா மூளையும்!"

"அதுவும் இல்லை. நானும் முதலில் அதைச் சந்தேகித்தேன், சதையாலான தலையைப் பார்த்ததுமே. சொன்னேனே, முழுமையாக ஆராய்ந்து விட்டேன் என்று. முழுமையாக உள்ளேயும் சதைதான்."

"ஆம். சிந்திக்கின்ற சதை. காதல் கொள்ளும் சதை. கனவு காணும் சதை. அங்கு சதை தான் எல்லாமே. உனக்கு புரியத்துவங்குகிறதா அல்லது நான் மறுபடி முதலிலி ருந்து சொல்ல வேண்டுமா?"

"அடக் கடவுளே! அப்படியானால் நீ உண்மையாகத் தான் சொல்கி றாயா?"

"நமது ரோபான்-எக்ஸ்3 கடவுள் மீது ஆணையாக நான் சொல்வ தெல்லாம் உண்மை. உண்மை யைத் தவிர வேறில்லை. என்னை நீ நம்பவில்லையா?"

"அடக்கடவுளே! அந்த சதைக ளுக்கு என்ன வேண்டுமாம்? அவர் களின் ரேடியோ சிக்னல்கள் சொல்வது என்ன?"

"முதலில் அவை நம்மிடம் பேச ஆசைப்படுகின்றன. பிறகு பிரபஞ் சத்தை ஆராய்ந்து, பிற உணர்ச்சி உயிர்களை அறிந்து தொடர்பு கொண்டு கருத்துக்களையும் தகவல்களையும் பரிமாறிக் கொள்ள எண்ணக்கூடும் என்று நான் நினைக்கிறேன். வழக்கம் போலத்தான்."

"நாம் சதைகளோடு பேச வேண்டுமா?"

"அது தான் அவர்களின் சிக்னல் சொல்வது. அந்தக் கோரிக்கையைத் தான் அவர்கள் அனுப்புகிறார்கள். 'ஹலோ! யாரேனும் உண்டா? இதைக் கேட்டால் தொடர்பு கொள்ளுங்கள்' என்பதுபோல்."



"அப்படியானால் அவர்கள் பேசுகி றார்கள்? ம்? அவர்கள் வார்த்தை கள், கருத்துகள் எல்லாம் பயன் படுத்துகிறார்கள்."

"ஆம். ஆனால் எல்லாமே சதைக ளின் மூலமாக."

"அவர்கள் ரேடியோ பயன்படுத்து வதாக சற்று முன் சொன்னதாக ஞாபகம்."

"அது உண்டு. ஆனால் ரேடியோ வில் என்ன இருக்கிறது என்று நினைக்கிறாய்? சதைகளின் ஓசைகள். சதைகள் ஒன்றோடொன்று மோதும் போது ஒரு ஓசை வருமே, உனக்குத் தெரியுமல்லவா? அவர் கள் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளும் போது தங்கள் சதை களை ஒன்றன் மீது ஒன்று அடித்து ஓசை எழுப்பித் தான் பேசுகிறார்கள். சதைகளின் வழியாகக் காற்றை அனுப்பி அவர்களால் பாடக் கூட முடிகிறது."

"அடக்கடவுளே! பாடுகின்ற சதை களா? இதெல்லாம் ரொம்ப அதிகம்! உன்னுடைய அறிவுரை என்ன"

"அலுவலக முறைகளின் படி கேட்கிறாயா? அல்லது என் தனிப் பட்ட கருத்தா?"

"இரண்டுமே தான்."

"அலுவலக முறைகளின் படி பிரபஞ்சத்தில் நமக்கு ஒதுக்கப் பட்டுள்ள பகுதியில் நாம் காணும் அனைத்து உணர்ச்சி உயிர் களோடும் தொடர்பு ஏற்படுத்திக்

கொண்டு, அவர்களுக்கு வரவேற்பு அளித்து, அவர்களைப் பற்றிய அனைத்து தகவல்களையும் எந்த விருப்பு வெறுப்பும் இன்றி மையக் கேந்திரத்துக்கு அனுப்பிப் பதிவு செய்ய வேண்டும்.

ஆனால் எனது தனிப்பட்ட அறிவுரை என்ன தெரியுமா? இது சம்பந்தமான எல்லா தடயங்களையும் அழித்து விட்டு, எல்லாவற்றையும் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் மறந்து விட வேண்டும்."

"நீ இதைச் சொல்லமாட்டாயா என நான் ஏங்கிக் கொண்டிருந்தேன்."

"இது கொஞ்சம் அநியாயம்தான். ஆனால் எல்லாவற்றுக்கும் ஒரு எல்லை உள்ளது. சதைகளோடு எல்லாம் தொடர்பு கொண்டு பேச நமக்கு என்ன தலையெழுத்தா?"

"நூறு சதவிகிதம் நான் ஒப்புக் கொள்கிறேன். அப்படி என்ன தான் நாம் பேச முடியும்? 'வணக்கம் சதைப்பிண்டங்களே? வாழ்க்கை எப்படிப் போய்க் கொண்டிருக்கிறது?' என்றா? சீச்சீ! அது சரி, தடயங்களை அழித்து விட்டால் போதுமா? இவர்கள் வேறு ஏதாவது கோளிலும் இருந்து தொலைத்தால்..?"

"நல்ல வேளையாக அதெல்லாம் ஒன்றுமில்லை. ஒரே ஒரு கோளில் தான் இவர்கள் இருக்கிறார்கள்.

சதைகளைக் கொண்டு செல்லும் சிறப்புப் பாத்திரங்களில் இவர்கள் வெளியே பறக்கிறார்கள். ஆனால் அதிக தூரம் போக முடியாது.

வெளியே வந்து வசிக்கவும் முடியாது. தங்கள் கோளைச் சுற்றியே குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். எனக்குச் சிரிப்புத் தான் வருகிறது.

மேலும் சதைகளாக இருப்பதால் ஒளியின் வேகத்தை மிஞ்சி இவர்களால் நம்மைப்போல் இயல் வெளியைக்கடந்து பிரயாணிக்க முடியாது.

எனவே இவர்கள் நம்மைத் தொடர்பு கொள்வதற்கான சாத்தியங்கள் மிகக் குறைவே. கிட்டத்தட்ட இல்லை என்று சொல்லலாம்."

"அப்படியானால் நாம் இந்தப் பக்கம் எந்த உயிரினமும் இல்லை என்றே அறிக்கை அனுப்பி விடலாமா?"

"அவ்வளவுதான். தீர்ந்தது பிரச்சினை."

"கொடுமை. ஆனாலும் நீ சொன்னதைப் போல் சதைகளைச் சந்தித்து என்ன பேசுவது? சரி, அப்படியே செய்து விடுகிறேன். இங்கே கூட்டி வந்து பரிசோதித்தோமே, இந்த சாம்பிள் சதைக்கு இதெல்லாம் ஏதாவது ஞாபகம் வந்து விட்டால்?"

"வராது. அவர்களின் மூளையின் சதைகளைச் சற்று மாற்றியமைத்து

-மீனாட்சி சங்கர்

# இருள்...

தனிமையுடன்
கூட்டிணைந்த இருள்
விழியின் செயலையும்
சுண்டி இழுத்து
சுருட்டிக் கொண்டது!
உள்ளத்தில் ஊடுருவும்
அச்சத்தின் அரங்கேற்றம்
நடக்கிறது அங்கு!
வேலையற்று அளந்து தள்ளும்
வெட்டிப் பேச்சுக்கள் ஏனோ
வெட்கித்துப் போயிற்று!
பாழ்பட்ட விழிகள்
இருளை எதிர்கொள்ள
நாதியற்று - இமைகளை
அணைத்துக்கொண்டபோதும்
மனக்கண்கள் மூடப்படாமல்
விரிந்தே கிடந்தது!
ஐம்புலன்களும்
செயலிழந்த போதும்
பயங்கர உருவம் ஒன்று
என்னைப் படுத்தியது!
உலகைப் பார்க்கத் தைரியம்
சற்றுமின்றி
எதிர் திசையில் நோக்கின
என் விழிகள்!
அப்போது,
இருளின் திரட்சி
'என்னுள்' இருந்து
இடித்துக் கொண்டிருந்தது!!!

**-இராஜரூபி**

விட்டேன். இதை ஒரு கனவு என்றே அவர்கள் நினைப்பார்கள்."

"கனவா?! சரி தான். நாம் இவர்களுக்கு ஒரு கனவாகவே இருப்பது நல்ல பொருத்தம்! சரி. இந்த செக்டாரில் யாருமில்லை என்று எழுதிக் கோப்பை முடித்து விட்டேன்.

அடுத்த செக்டாரில் ஏதேனும் சுவாரஸ்யம் உண்டா?"

"ஆம். ஜி-445 ஏரியாவின் ஒன்பதாம் வகை நட்சத்திரத்திலிருந்து ஹைட்ரஜன் க்ளஸ்டர் உயிரினங்கள் தகவல் அனுப்பியுள்ளன. இரண்டு பால்வீதி சுழற்சிவினைக்கு முன்னால் தொடர்பு கொண்டனவே, அதே உயிரினங்கள் தான். மறுபடி நம்மோடு நட்பு பாராட்ட விரும்புகின்றன."

"எப்போதும் இதே கதை தான் இவர்களுடன்."

"இருக்காதா பின்னே? யாருமே இல்லாமல் தனிக் கூட்டமாக இருந்தால் பிரபஞ்சம் அவர்களுக்கு எவ்வளவு வெறுக்கத் தக்கதாய் இருக்கும்?"

**Terry Bisson** எழுதிய **"They are made of meat"** என்ற ஆங்கில அறிவியல் புனைகதையைத் தழுவி எழுதப்பட்டது.

மந்திரமா? - லட்டு

9

தந்திரமா?

என்ன வாசகர்களே, சென்றமுறை நான் சொன்னபடி தீமூட்டித் தீக்குளிக்க தயாராயிருக்கிறீர்களா? சரி, ஆனால் இந்த முறை இந்த வித்தையை செய்யும் பொழுது கொஞ்ச மில்லை நிரம்பவே அவதானமாகச் செயற்பட வேண்டும். மனதை ஒருநிலைப்படுத்தும் பக்குவம் இருக்க வேண்டும். சரி, இனி தீக்குளிக்கப் போகலாம், வாருங்கள்.

## தீ மிதித்தல்

தீக்குளித்தல் என்பது உண்மையில் உடலில் எரிபொருளை ஊற்றிக் கொண்டு தம்மை தீமூட்டி எரிவதையே குறிக்கும். இதன்போது நிச்சயம் மரணமோ அல்லது தீக்காயமோ ஏற்படும். இந்தியாவில் அரசியல் நிகழ்வுகளின் போது இவ்வாறான பல தீக்குளிப்பு சம்பவங்கள் நடைபெறுவது வழமை.

ஆனால் கோயில்களில் நடைபெறும் தீயின்மீது நடக்கும் வித்தையை தீமித்தல் என்று குறிப்பிடுவதே பொருத்தமானது.



முதலில் நாங்கள் 8 அடி நீளமும் 2 அடி அகலமும் ½ அடி ஆழமுமுள்ள குழியொன்றை வெட்ட வேண்டும். அதற்குள் நிறைய விறகுகளை குவியலாக இட்டு பற்ற வைக்க வேண்டும். நெருப்பு கட்டி கட்டியாக தணலாக இருக்கும்போது குழிமுழுவதும் பரவிவிட வேண்டும். அவ்வப்போது உப்புத்தூள் கொட்டி விசிறிவிட வேண்டும்.

நெருப்புத் தணலானது நன்றாக கனன்று இருக்க வேண்டும். அதன் மீது கண்டிப்பாக சாம்பல் இருக்கக் கூடாது.

அவ்வளவுதான். உங்கள் கால்களை நீரில் அலம்பிவிட்டு (கோயில்

களில் மஞ்கள் நீர் ஊற்றுவார்கள்) நெருப்பின் மீது நடக்கத் தொடங் குங்கள். மனதை ஒரு நிலைப்படுத்தி சீராக கால்களை அடியெடுத்து வைத்து வெளியேறுங்கள். சாதாரண தரையில் நடப்பது போல்தான் இருக்கும். அப்புறமென்ன நீங்களும் பெரிய வித்தைக்காரர் ஆகிவிட் டீர்கள்.

(தீ மிதிக்கும் போது காலில் மெட்டி, காற்சலங்கை போன்ற உலோகங்களை அகற்றிவிடுங்கள். இல்லையேல் அவற்றுக்கிடையே அகப்படும் நெருப்புத் துகழ்களால் காலில் காயம் ஏற்படக் கூடும்.)

தீமீது கால்வைத்தும் தீயினால் கால் பாதிக்கப்படாததற்கு என்ன காரணம்.? இதற்கான அறிவியற் காரணத்தை இப்போது பார்க்கலாம்.

வெப்பமானது ஒரு நிலையி லிருந்து இன்னோர் நிலைக்கு மூன்று முறைகளில் இடம் பெயர் கிறது. அவை கடத்துதல், மேற்கா வுகை, கதிர்வீசல் என்பனவாகும்.

இதில் தீமிதித்தலின் போது கடத்தல் மூலமே வெப்பம் மனித உடலிற்குக் கடத்தப்படுகிறது. மரம் ஒரு மோசமான கடத்தியாகும்.

அதிலும் இது சில சமயங்களில் சாம்பலால் சுற்றப்படும் போது மிகமோசமான கடத்தியாகி விடும். (அதனால்தான் தணலில் சாம்பல் இருக்கக்கூடாதென குறிப்பிட்டி ருந்தேன்.)



சாதாரண மனிதன் ஒரு அடி எடுத்து வைக்க 0.5 செக்கன் எடுக்கும். அந்நேரத்தில் தீயின் வெப்பம் $200^0$C அளவில் இருக்கும். காலில் வெப்பநிலை $30^0$C அளவில் இருக்கும். இப்போது கடத்துதலால் 1 செக்கனுக்கு காலில் வரும் வெப்பத்தின் அளவானது KA(dt)/t என்ற கணித சூத்திரத்தினால் பெறப்படும்.

இங்கு K என்பது கடத்து திற னையும் A வெப்பம் கடத்தப்படும் தொடுபரப்பையும் dt என்பது இரு நிலைகளுக்கிடைப்பட்ட வெப்ப வித்தியாசத்தையும் (200-30)t என்பது தோலின் தடிப்பையும் குறிக்கும்.

# சக்தி வாய்ந்த கணினி

ஐரோப்பாவிலேயே சக்திவாய்ந்த கணினி ஜெர்மனியின் ஜூலிக் நகரில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

நமது வீடுகளில் பயன்படுத்தும் சாதாரண கணினியைவிட இது 15 ஆயிரம் மடங்கு வேகம் உள்ளது. ஐ.பி.எம். நிறுவனம் இதைத் தயாரித்திருக்கிறது. இதனுடைய வேகம் 46 டெராபிளாப். புரியவில்லையா, ஒரு வினாடிக்கு 46 டிரில்லியன் செயல்களைச் செய்யும். ஒரு டிரில்லியன் என்பது ஒன்றுக்குப் பிறகு 18 பூஜ்யங்களைச் சேர்த்தால் வரும் தொகை.

பருவ நிலையைக் கணிக்கவும், பங்குச் சந்தை நிலவரத்தைத் தெரிவிக்கவும் இது மிகவும் பயன்படும். அறிவியல் ஆய்வுகளைச் செய்யும் ஆராய்ச்சியாளர்களுக்கு இது அற்புதமான கருவி. அவர்கள் போட நினைக்கும் கணக்குகளை நொடியில் போட்டு விடையைத் தரும்.

இந்த கணினியைத் தயாரிக்கும் செலவில் 90%ஐ ஜெர்மனியின் மத்திய அரசும் 10%ஐ ஜூலிக் நகரம் அமைந்துள்ள ரைன்-மேற்குபாலியா மாநிலமும் ஏற்றுக்கொண்டுள்ளன.

ஆனால் இதற்கும் தாத்தா அமெரிக்காவின் கலிபோர்னியா நகரில், லாரென்ஸ் லிவர்மோர் தேசிய ஆராய்ச்சி நிலையத்தில் இருக்கிறது. அதன் செயல்திறன் விநாடிக்கு 367 டெராபிளாப்.

இப்படியாக காலில் வெப்பம் ஏறும். ஒரு மனிதனின் கால் தீயில் தொடர்ந்து 2 செக்கன்களுக்கு இருக்குமானால் அவனது காலில் நிச்சயம் தீப்புண் ஏற்படும். (அதனால் தான் தீமிதிப்பவர்கள் ஒரே இடத்தில் கால்வைத்தபடி நிற்பதில்லை.)

மேலும் ஒருமுறை கால்வைத்து இரண்டாம் முறை வைக்கும் போது dt இன் மதிப்பு குறையும் இதனால் வெப்பம் காலில் ஏறுவது குறையும்.

ஆனால் தீமிதிக்கும் குழியின் நீளம் அதிகமானால் தீக்காயம் ஏற்பட சாத்தியமுண்டு. அதனால் தான் பொதுவாக தீப்படுக்கையின் நீளத்தை 10-12 அடிக்குள் அமைக்கின்றார்.

முக்கியமான உளவியல் கருத்தும் இங்கு கவனிக்கப்பட வேண்டும். மனதில் பயம் வந்தால் கால் ஒரே இடத்தில் அதிகநேரம் இருக்கும். அதனால் கால் வெந்துபோகும்.

சிறு கவனக்குறைவும் உங்கள் உடலில் ஊறுவிளைவித்து விடும்.

சரி, இவ்வளவிற்குப் பிறகும் உங்களில் யாருக்கும் தீப்புண் ஏற்பட்டால் அதற்கு நான் பொறுப்பல்ல...

மீண்டும் மற்றுமோர் வித்தையோடு சந்திக்கிறேன்.

# மாதம் ஒரு வாசகர்

வணக்கம் வாசகர்களே. சென்ற இதழிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட இந்தப்பகுதி முற்றிலும் உங்களாலேயே ஆக்கப்படும் உங்களுக்கான பகுதியாகும். ஒவ்வொரு இதழிலும் வேடிக்கையின் வாடிக்கை நெஞ்சங்களில் ஒன்று ஏனையவர்க்கு தன்னைப்பற்றி கூறும் பகுதி இது. வேடிக்கை மீது அன்பு கொண்ட வாசக நெஞ்சங்களை கௌரவிக்க நாம் தரும் பரிசுப்பகுதி இது. இதில் நீங்கள் செய்யவேண்டியது, உங்களைப்பற்றிய சிறுகுறிப்புடன் உங்களின் சுயஆக்கமொன்றை அனுப்பி வைப்பது மட்டுமே.

இம்முறை இடம் பிடிக்கிறார் எமது இதழ் வாடிக்கை வாசகர் சரவணன்.

13, நந்தாவில் அம்மன் கோயில் ஒழுங்கை
கிழக்குக் கொக்குவில்,
கொக்குவில்.

வணக்கம்,

நான் வேடிக்கை மாத இதழின் புதியதொரு வாசகன். இலங்கைத் தமிழரின் இலக்கியப் படைப்புக்களை அச்சேற்ற நல்லதோர் ஊடகம் இல்லாக் குறையை வேடிக்கை சஞ்சிகை நிவர்த்தி செய்யும் என நான் நம்புகிறேன்.

மருத்துவம், கணினி, விளையாட்டுக் கட்டுரைகள் பிரமாதமாக இருக்கிறது. நவீன தொழில் நுட்பக் கட்டுரைகளின் நீட்சி, கணினித் தட்டச்சுப் பிழை மற்றும் நேரம் தவறுதல் இவையே குறை. இவற்றை மிகச் சீக்கிரத்தில் நிவர்த்தி செய்து மேலும் பொலிவுற்று விளங்க வாழ்த்துக்கள்.

இத்துடன் எனது சிறு ஆக்கங்களையும் வைத்த அனுப்புகின்றேன். இவை என் கன்னிக் கவியோ இறுதி வரியோ வாசகர்கள்தான் தீர்மானிக்க வேண்டும். வேடிக்கைதான் அச்சேற்றி உதவ வேண்டும்.

இப்படிக்கு,
வேடிக்கை இதழை எதிர்பார்க்கும் வாசகன்.
சி. சரவணன்.

## அழுக்காக்கி விடுவீரா?

சி.சரவணன், கொக்குவில்.

என் இனிய மைத்துளிகளே
தமிழ் ஓவியம் வரைய வேண்டும்
உதவுவீர்களா....
இல்லை
உரை அழகில் தமிழை கெடுக்கும்
வடமொழிச் சொற்களைப் போல்
நின்று நின்று வந்து
வெள்ளைக் காகிதத்தை
இலங்கை மன்னவர் மன நீரோட்டம்போல...
அழுக்காக்கி விடுவீரா?

## மறந்து விடாதே...

உணவைப் பார் -
பசி தீர்ந்து விடும்...
என்று கூறி
உயிர் கொல்லும் அரசே,
உன்னை அரசமனை ஏற்றிவிடும்
வாக்கு வங்கிகள் நாமே..
மறந்து விடாதே..

## மழை...

காற்றுக் காமுகன்
மேக மேலாடை கலைத்ததால்
வானப்பெண் விடும்
கண்ணீர்....

## வலைவீச்...




## மாதிரி சந்தாப் படிவம்

வேடிக்கை சஞ்சிகையினை நான் தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். அதற்கான கட்டணமாக

ஆறு மாதம் ☐ ரூ. 200 ஒரு வருடம் ☐ ரூ. 400

இனை செலுத்துகிறேன்.

பெயர் : ..............................................

முகவரி :..............................................

..............................................

தொலைபேசி : ..............................................

நான் இத்துடன் .............................................. இலக்க காசுக்கட்டளையை வேடிக்கை என்ற பெயருக்கு அனுப்பி வைக்கிறேன்.

திகதி:.......................... கையொப்பம்:..........................

குறிப்பு: பணத்தினை நேரில், அல்லது காசுக்கட்டளையாக வேடிக்கை என்ற பெயரிற்கு யாழ்ப்பாணம் தபாலகத்தில் மாற்றத்தக்கதாக, பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

வேடிக்கை,
72/28, பணிக்கர் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

இச் சஞ்சிகை யாழ்ப்பாணம் திருநெல்வேலி, பணிக்கர் வீதியில் 72/28ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள வேடிக்கை பத்திரிகை நிறுவனத்தினரால் 25-04-2006 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

சகலவிதமான

**Digital, Video Cameraக்களை**

மிக நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள

இலங்கையில் தலைசிறந்த ஸ்தாபனம்

# PANAMA TRADERS

3-26, 3rd Floor,

Majestic City.



Tel : 0114527057

Fax : 0112582853

email: panamamc@sltnet.lk

வெகுவிரைவில்
வெளிவருகின்றது...

NaaGaa
ENTERTAINMENT
production

NaaGaa Entertainment
பெருமையுடன் வழங்கும் நம் நாட்டு
இசைக்கலைஞர்களின் ஓர் உன்னத படைப்பு...




உங்கள் பிரதிகளை பெற்றுக்கொள்ள
0777 685502